



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:266 | 11-04-2026 | சனிக்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

11.04.2026 பங்குனி 28
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.05

**திதி:**
இன்று இரவு 9.58 வரை நவமி பின்பு தசமி

**நட்சத்திரம்:**
இன்று காலை 11.13 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

**யோகம் :**
இன்று மாலை 4.14 வரை சித்தம் பின்பு சாத்தியம்.

**கரணம்**
இன்று காலை 9.28 வரை தைதுலம் பின்பு இரவு 9.58 வரை கரசை பின்பு வணிசை

**அமிர்தாதி யோகம் :**
இன்று முழுவதும் சித்த யோகம்.

**சந்திராஷ்டமம் :**
இன்று காலை 11.13 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 5.15 – 6.00.

**இராகு காலம்**
காலை 9.00 – 10.30.

**எமகண்டம்**
பிற்பகல் 1.30 – 3.00.

**குளிகை**
காலை 6.00 – 7.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
**செல்: 8189908040**

## தமிழக சட்டசபை தேர்தல்

# 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டி



**சென்னை, ஏப்.11:**

தமிழகத்தில் வருகிற 23-ந்தேதி (வியாழன்) சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்த முறை 4 முனைப்போட்டி நிலவும் சூழ்நிலையில், வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் மாதம் 30-ந்தேதி தொடங்கி, இம்மாதம் 6-ந்தேதி நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்து, 7-ந்தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்ற நிலையில், நேற்று வேட்புமனுக்களை திரும்ப பெற கடைசி நாளாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில், நேற்று மாலை வேட்பாளர்கள் இறுதி பட்டியல் வெளியானது.

தமிழகத்தில் 38 மாவட்டங்களில் உள்ள 234 சட்டசபை தொகுதிகளில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அதிகபட்சமாக கரூர் தொகுதியில் 79 பேரும், குறைந்தபட்சமாக அம்பாசமுத்திரம் மற்றும் கிணத்துக்கடவு தொகுதிகளில் தலா 5 பேரும் போட்டியிடுகின்றனர்.

### மாவட்ட வாரியாக போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வருமாறு:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.சென்னை | - 419 பேர் | (16 தொகுதிகள்) | 20.நீலகரி | -18 பேர் | (3 தொகுதிகள்) |
| 2.திருவண்ணாமலை | - 156 பேர் | (8 தொகுதிகள்) | 21.அரியலூர் | - 34 பேர் | (2 தொகுதிகள்) |
| 3.திருவள்ளூர் | - 160 பேர் | (10 தொகுதிகள்) | 22.பெரம்பலூர் | - 30 பேர் | (2 தொகுதிகள்) |
| 4.காஞ்சிபுரம் | - 65 பேர் | (4 தொகுதிகள்) | 23.மயிலாடுதுறை | - 43 பேர் | 3 தொகுதிகள்) |
| 5.செங்கல்பட்டு | - 113 பேர் | (7 தொகுதிகள்) | 24.நாகப்பட்டினம் | - 31 பேர் | (3 தொகுதிகள்) |
| 6.ராணிப்பேட்டை | - 65 பேர் | (4 தொகுதிகள்) | 25.தஞ்சாவூர் | - 94 பேர் | (8 தொகுதிகள்) |
| 7.வேலூர் | - 65 பேர் | (5 தொகுதிகள்) | 26.திருவாரூர் | - 46 பேர் | (4 தொகுதிகள்) |
| 8.கிருஷ்ணகிரி | - 79 பேர் | (6 தொகுதிகள்) | 27.தேனி | - 65 பேர் | (4 தொகுதிகள்) |
| 9.திருப்பத்தூர் | - 74 பேர் | (4 தொகுதிகள் ) | 28.திண்டுக்கல் | - 115 பேர் | (7 தொகுதிகள்) |
| 10.கள்ளக்குறிச்சி | - 72 பேர் | (4 தொகுதிகள்) | 29.மதுரை | - 129 பேர் | (10 தொகுதிகள்) |
| 11.விழுப்புரம் | -132 பேர் | (7 தொகுதிகள்) | 30.ராமநாதபுரம் | - 66 பேர் | (4 தொகுதிகள்) |
| 13.கடலூர் | - 113 பேர் | (9 தொகுதிகள்) | 31.விருதுநகர் | - 135 பேர் | (7 தொகுதிகள்) |
| 13.தருமபுரி | - 83 பேர் | (5 தொகுதிகள்) | 32.தூத்துக்குடி | - 92 பேர் | (6 தொகுதிகள்) |
| 14.கரூர் | - 166 பேர் | (4 தொகுதிகள்) | 33.கன்னியாகுமரி | - 85 பேர் | (6 தொகுதிகள்) |
| 15.சேலம் | - 193 பேர் | (11 தொகுதிகள்) | 34.சிவகங்கை | - 71 பேர் | (4 தொகுதிகள்) |
| 16.ஈரோடு | - 188 பேர் | (8 தொகுதிகள்) | 35.தென்காசி | - 95 பேர் | (5 தொகுதிகள்) |
| 17.திருப்பூர் | - 116 பேர் | (8 தொகுதிகள்) | 36.திருநெல்வேலி | - 90 பேர் | (5 தொகுதிகள்) |
| 18.கோவை | - 183 பேர் | (10 தொகுதிகள்) | 37.புதுக்கோட்டை | - 109 பேர் | (6 தொகுதிகள்) |
| 19.திருச்சி | - 171 பேர் | (9 தொகுதிகள்) | 38.நாமக்கல் | - 132 பேர் | (6 தொகுதிகள்) |

# இந்தியாவில் கட்டுப்பாடுகள் கொண்ட கோயில்கள்: சபரிமலை வழக்கில் பட்டியலிட்ட மத்திய அரசு

**புதுடெல்லி, ஏப்.11:**

இந்தியாவில் புஷ்கரின் பிரம்மா, அசாமின் காமாக்யா ஆலயம் உள்ளிட்ட கோயில்களின் மரபுகளை மத்திய அரசு பட்டியலிட்டது. இதை உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் சபரிமலையில் பெண்கள் நுழையும் வழக்கில் நீதிபதிகள் அமர்வின் முன் தெரிவித்தது.

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி பி.வி. நாகரத்தினா அடங்கிய 9 நீதிபதிகள் அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

பெண்கள் மீதான தடையை மத்திய அரசும் ஆதரித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்துள்ளது. மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, அரசு நிலைப்பாட்டை ஆதரித்து வழக்காடினார். இதில், நாட்டின் பிற ஆலயங்களில் பின்பற்றப்படும் மரபுகளைச் சுட்டிக்காட்டினார்.



இந்த வகையான நடைமுறைகள் பாலினப் பாகுபாட்டின் ஒரு பகுதியல்ல என்றும், மாறாக அவை மதச்சடங்குகள், நம்பிக்கை மற்றும் விஸ்வாசம் ஆகியவற்றின் ஒரு பகுதியே என்றும் துஷார் வாதிட்டார். இது நீதிமன்றத்தின் நீதித்துறை மறு ஆய்வு வரம்புக்குள் வராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோயில்களின் இந்தச் சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் ஆகியவை இந்திய அரசியலமைப்பின் 25 மற்றும் 26-வது பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன எனவும் விளக்கினார்.

இது குறித்து சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா தன் வாதத்தில் பேசுகையில், 'பண்டைய காலங்களிலிருந்தே பெண்களைப் போற்றி வணங்கும் கொள்கையைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருவது இந்து மதமே ஆகும்.

இந்து மதம் பெண்களை ஆண்களுக்குச் சமமாக அங்கீகரித்தது மட்டுமல்லாமல், ஆண்களை விட மிக உயர்ந்த அந்தஸ்தையும் அவர்களுக்கு வழங்கியுள்ளது. உலகிலேயே பெண் தெய்வங்கள் இந்தியாவில்தான் அதிகமாக வழிபடப்படுகின்றனர்.

ஆண்களே அந்தப் புனிதமான 'பெண் தெய்வங்களின்' பாதங்களைத் தொட்டு வணங்கி பக்தர்களாகத் திகழும் ஒரே மதம் இந்து மதம் மட்டுமே என்று உறுதியாகக் கூறலாம். பாலின அடிப்படையில் ஆலயத்துக்குள் நுழைவதை அனுமதிப்பது என்பது 'பாலினப் பாகுபாடு' சார்ந்த விவகாரம் அல்ல. மாறாக, அது மதச்சடங்குகள், நம்பிக்கை மற்றும் விஸ்வாசம் சார்ந்த விவகாரமே. எனவே, அது நீதிமன்றத்தின் நீதித்துறை மறு ஆய்வு வரம்புக்கு அப்பாற்பட்டது என்று நிரூபிக்கும் பல உதாரணங்கள் உள்ளன' எனத் தெரிவித்தார்.

இதற்கு உதாரணங்களாக உச்ச நீதிமன்றத்தில் துஷார் மேத்தா குறிப்பிட்ட பட்டியல் விவரம்:ஆத்துக்கால் ஆலயம்

சக்குலத்துக்காவு கோயில்
பிரம்மர் கோவில்
பகவதி அம்மன் கோயில்
மாதா கோயில்
கொட்டன்குளங்கரா ஸ்ரீ தேவி கோவில்

இக்கோயில்களுக்கு கேரளாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மட்டுமின்றி, அண்டை மாநிலங்களான தென் மாநிலங்களிலிருந்தும் ஆண்கள் இத்திருவிழாவில் பங்கேற்க வருகிறார்கள்; இது மிகவும் பிரபலமான ஒரு விழாவாகத் திகழ்கிறது. இவ்வாறு அவர் பட்டியலிட்டார்.

# தோல் பொருட்கள் உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடம்: தமிழக அரசு பெருமிதம்

**சென்னை, ஏப்.11:**

இந்தியாவில் காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

உலகளாவிய பிராண்டுகள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்த்து, குறிப்பாக, பெண்கள் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான கொள்கைகளை வகுத்துச் செயல்படுவது, உள்ளடக்கிய மற்றும் நிலைத்தன்மையுள்ள வளர்ச்சியைத் தமிழகம் உறுதிப்படுத்தியுள்ளது என்பதை உணர்த்துகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று தரையிறங்கும் 2 விண்வெளி வீரர்கள்!



**நாசா, ஏப்.11:**

அமெரிக்காவில் உள்ள தேசிய வானூர்தி விண்வெளி நிலையம் (நாசா), கடைசியாக 1972 ஆம் ஆண்டு அப்போலோ 17 ராக்கெட் மூலம் நிலவுக்கு மனிதனை அனுப்பியிருந்தது.

நிலவுக்கு மிக நெருக்கமாக பூமியில் இருந்து 4,06,771 கி.மீ. தொலைவில் பயணம் செய்து, விண்வெளி வீரர்கள் ரீட், விக்டர், கிறிஸ்டினா மற்றும் ஜெர்மி ஆகியோர் புதிய சாதனையைப் படைத்தனர். மேலும், நிலவின் பின்புறத்தை நேரில் கண்டவர்கள் என்ற மற்றொரு சாதனையையும் இவர்கள் படைத்தார்கள்.

சில ஆய்வுகளை மேற்கொண்ட அவர்கள், ஓரியன் விண்கலம் மூலம் மீண்டும் பூமியை நோக்கிய பயணத்தைதொடங்கியுள்ளனர்.

பூமியை நோக்கியப் பயணத்தில் பாதி தூரத்தை அவர்கள் கடந்துவிட்டதாகவும், வெள்ளிக்கிழமை இரவு 8.07 மணியளவில் (இந்திய நேரப்படி சனிக்கிழமை காலை 5.37 மணி) பசிபிக் பெருங்கடலில் சான் டியாகோ கடற்கரைப் பகுதியில் தரையிறகுவார்கள் என்று நாசா தெரிவித்துள்ளது.

அவர்களைப் பாதுகாப்பாக மீட்கும் பணிகளை அமெரிக்க கடற்படையுடன் இணைந்து நாசா மேற்கொண்டுள்ளது.




# மகளிருக்கும் இளைஞர்களுக்கும் மாதம் ரூ. 3,000; பொது சிவில் சட்டம்!

**மேற்கு வங்கம், ஏப்.11:**

294 தொகுதிகளைக் கொண்ட மேற்குவங்க சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23, 29 தேதிகளில் இரண்டு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறவுள்ளது. மே 4 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

தொடர்ந்து 4 ஆவது முறையாக ஆட்சியமைக்க திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவர் மமதாவும் அதேநேரத்தில் முதல்முறையாக ஆட்சியைக் கைப்பற்ற பாஜக தலைவர்களும் முனைப்பு காட்டி வருகின்றனர்.

மேற்கு வங்க தேர்தலையொட்டி கொல்கத்தா வந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, இன்று பாஜக தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

அதன்படி மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சிக்கு வந்தால் மகளிருக்கு மாதம் ரூ. 3,000 வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

மேலும், "மேற்குவங்கத்தில் எந்த ஊடுருவல்காரர்களையும் அனுமதிக்க மாட்டோம். அவர்களுக்கு எந்த வேலைவாய்ப்பும் வழங்கப்படாது, முழுக்க மேற்கு வங்க மாநில மக்களின் நலனில் கவனம் செலுத்துவோம்.

அனைத்து அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும் அகவிலைப்படி உறுதி செய்யப்படும்;



7-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் 45 நாள்களுக்குள் அமல்படுத்தப்படும்.

வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதம் ரூ. 3,000 வழங்கப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

அரிசி, உருளை, மாம்பழம் சாகுபடிக்கு அரசு ஆதரவளிக்கும்.

மீனவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு மீன்கள் ஏற்றுமதி வலுப்படுத்தப்படும்.

கால்நடைகளைக் கடத்துவது தடை செய்யப்பட்டு அவைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

6 மாதங்களில் பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படும்.

தேயிலை தோட்டங்கள் அனைத்தும் மீட்டெடுக்கப்படும்.

வந்தே மாதரம் அருங்காட்சியகம் உருவாக்கப்படும்.

ஆயுஷ்மான் பாரத் உள்ளிட்ட பாஜக-வின் அனைத்துத் திட்டங்களையும் மேற்கு வங்கத்தில் முழுமையாகச் செயல்படுத்துவோம்" என்று கூறினார்.



# திருக்குறள் குறள்-586

**துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று**



துறந்தவரின் வடிவத்தை உடையவராய், அறிய இடங்களிலெல்லாம் சென்று ஆராய்ந்து (ஐயுற்றவர்) என்ன செய்தாலும் சோர்ந்து விடாதவரே ஒற்றர் ஆவர்.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கையில்......
கவலைப்படுபவர்கள்
கரையேறுவதில்லை...

கரையேறுபவர்கள்
கவலையே
படுவதில்லை...

**உஷா முத்துராமன்**

# கூடுதாலை கடற்கரை பகுதியில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

**நெல்லை, ஏப்.11:**
கூடுதாலை கடற்கரை பகுதியில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

ராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூடுதாலை கடற்கரை மீனவ கிராம பகுதியில், இந்திய தேர்தல் ஆணையம் சார்பில் மக்கள் நூறு சதவீதம் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தீயணைப்புத் துறை நீர்மூழ்கி வீரர்கள் மற்றும் கடற்கரை மீனவ கிராம இளைஞர்கள் உற்சாகமாக பங்கேற்று பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக மணல் சிற்பங்கள் அமைத்து வாக்களிப்பின் முக்கியத்துவம் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், வீடு தோறும் சென்று மக்களிடம் நேரடியாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதேபோல், கடலில் நீர்மூழ்கி வீரர்கள் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி வாக்களிக்கும் கடமையை வலியுறுத்தினர்.




இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரி, திசையான்விளை நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் தன்னார்வலர் மாணவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியின் சிறப்பை உயர்த்தினர். கல்லூரி முதல்வர் முனைவர் டி. லில்லி அவர்களின் அறிவுறுத்தலின்படி, நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் முனைவர் சு. பலவேசகிருஷ்ணன் தலைமையில் மாணவர்கள் ஒழுங்காக பங்கேற்று விழிப்புணர்வு பணிகளில் ஈடுபட்டனர். மொத்தத்தில், இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே வாக்களிக்கும்பொறுப்புணர்வை வளர்க்கும் வகையில் பயனுள்ளதாகவும் சிறப்பாகவும் அமைந்தது.

# போளூர் சட்டமன்ற உறுப்பினருக்கு முரசு சின்னத்தில் வாக்குகள் சேகரிப்பு



**திருவண்ணாமலை ஏப்.11:** திருவண்ணாமலை மாவட்டம்சேத்துப்பட்டு கிழக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த அப்பேடு பகுதியில் கழக மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் போளூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எ.வ.வே கம்பன் அவர்கள் போளூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் திரு. சரவணன் அவர்களுக்கு சேத்துப்பட்டு கிழக்கு ஒன்றியம் அப்பேடு பொது மக்களிடம் முரசு சின்னத்தில் ஆதரித்து வாக்குகளை சேகரித்தார். தமிழ்நாடு இ செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை

# மயிலாடுதுறையில் தேம்பாவணி கார்மெண்ட்ஸ் திறப்பு விழா: தஞ்சை மறை மாவட்ட ஆயர் புனிதம் செய்து திறந்து வைத்தார்

**மயிலாடுதுறை,ஏப்.11 :**
மயிலாடுதுறை சோழம் பேட்டை திரு இருதய அருட்சகோதரர்கள் இல்ல வளாகத்தில் அமைந்துள்ள தேம்பாவணி திறன் வளர் மேம்பாட்டு பயிற்சி மையத்தில் "தேம்பாவணி கார்மெண்ட்ஸ்" திறப்பு விழா நடைபெற்றது.

கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கு தையல் பயிற்சி அளித்து, பெண்கள் தயாரிக்கும் ஆடைகளை சந்தைப்படுத்துவதற்கு உதவிடும் வகையில் அமைக்கப் பட்டுள்ள "தேம்பாவணி கார்மெண்ட்ஸ்" மையத்தை தஞ்சை மறைமாவட்ட ஆயர் மேதகு டாக்டர். சகாயராஜ் ஆண்டகை புனிதம் செய்து திறந்து வைத்தார். புதிய தொழில் முயற்சியாக தொடங்கப்பட்டுள்ள "தேம்பாவணி கார்மெண்ட்ஸ்", தரமான ஆடைகள் மற்றும் விலைகுறைவான விற்பனை முறைகள் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கத்துடன் துவங்கப்பட்டுள்ளது.



இந்த திறப்பு விழாவில், தேம்பாவணி கார்மெண்ட்ஸ் மைய இயக்குநர் பங்கிராஸ், மயிலாடுதுறை மறைவட்ட அதிபர் தார்சிஸ்ராஜ் அடிகளார், உதவிப்பங்குத்தந்தை அன்புராஜா அடிகளார், குத்தாலம் பங்குத்தந்தை சேவியர் அடிகளார் மற்றும் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், நற்செய்தி பணியாளர்கள், தேம்பாவணி திறன் வளர் மேம்பாட்டு பயிற்சி மைய நிர்வாகிகள், பயிற்சியாளர்கள் மற்றும் மல்லியம், மாப்படுகை சோழம்பேட்டை, கோழிகுத்தி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளைச் சார்ந்த கிராமப்புற பெண்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நம் வாசவி அம்மனுக்கு புஷ்பாபிஷேகம் சிறப்பு வழிபாடு



தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மண்டல பூஜையை முன்னிட்டு நம் வாசவி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்கள் பாடி, 1008 புஷ்பாபிஷேகம், சகஸ்ர நாமாவளியும், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் புஷ்பாபிஷேக பூஜையில் கலந்து கொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# எழுவம்பாடி நடுநிலைப்பள்ளி ஆண்டு விழா ஆசிரியர் பணி ஓய்வு விழா




போளூர் வட்டம் எழுவம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நேற்று பள்ளி ஆண்டு விழா மற்றும் சிவ ரவிச்சந்திரன் பட்டதாரி ஆசிரியர் 36 ஆண்டுகள் பணி முடித்து இன்று பணி ஓய்வு பாராட்டு விழா அவருக்கு நடைபெற்றது. விழாவில் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் தலைவர் ஊர் பொதுமக்கள் பள்ளி மாணவர்கள் ஓய்வு பெற்ற சங்க மாவட்ட தலைவர் கிருஷ்ணமூர்த்தி, அபிபுல்லாகான் மற்றும் பலர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

# 50க்கும் மேற்பட்ட நபர்கள் மாற்று கட்சியினர் திமுகவில் இணையும் நிகழ்ச்சி



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியம் ராஜன் தாங்கள் ஊராட்சியை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட நபர்கள் மாற்று கட்சியினர் கீழ்பென்னாத்தூர் வெற்றி வேட்பாளர் மாண்புமிகு கு.பிச்சாண்டி அவர்கள் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்து கொண்டார்கள். உடன் ஆரஞ்சி ஆறுமுகம் அவர்கள் **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# திருவண்ணாமலையில் தாமரைக்கு வாக்கு சேகரிப்பு



**திருவண்ணாமலை ஏப்.11:** திருவண்ணாமலை மாநகராட்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் C. ஏழுமலை அவர்களுக்கு அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், உடன் பெருமாள் நகர் ராஜன் அவர்கள்,பாலசுப்பிரமணியன் அவர்கள்,வினோத் கண்ணா அவர்கள் மற்றும் கழகத் தோழர்கள்,பொதுமக்கள் அனைவரும் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு தாமரை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து வருகிறார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# ஆட்சி இருக்கும்போது ரூ 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் கொடுக்கவில்லை தற்போது மக்களை ஏமாற்ற ஸ்டாலின் அறிவித்துள்ளார்

**ஆர்.பி. உதயகுமார் பேச்சு**

**வாடிப்பட்டி, ஏப்.11:**
மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் மாணிக்கத்தை ஆதரித் து சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாவட்ட கழக செயலாளர் ஆர்.பி.உதயகுமார் வாடிப்பட்டி அருகே போடிநாயக்கன்பட்டியில் வாக்கு சேகரித்து தேர்தல் பிரச்சாரம் செய்தார். இந்த பிரச்சாரத்தில் ஆர்.பி. உதயகுமார் பேசியதாவது:-

வருகின்ற ஏப்ரல் 23ஆம் தேதி நீங்கள் வாக்களிக்கும் போது உங்கள் கண்களுக்கு தெரியும் சின்னம் வெற்றி சின்னம் இரட்டை இலையாகும் அதில் நீங்கள் வாக்களிக்க வேண்டும் .நிச்சயம் மே 4 ந் தேதி எடப்பாடியார் வெற்றி பெற்று முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் முதல் கையெழுத்து இடுவது அனைத்து குடும்பத்திற்கும் பத்தாயிரம் ரூபாய் வழங்குவார் .இன்றைக்கு கடுமையான விலைவாசி உயர்வு ஏற்பட்டுள்ளது எடப்பாடியார் ஆட்சியில் ஒரு கிலோ பச்சரிசி 40 ரூபாய் ,தற்போது திமுக ஆட்சியில் 70 ரூபாயாக உயர்ந்துள்ளது. புழுங்கல் அரிசி ஒரு கிலோ எடப்பாடியார் ஆட்சியில் 40 ரூபாய், தற்போது திமுக ஆட்சியில் 75 ரூபாயாக உயர்ந்துள்ளது. இட்லி அரிசி 30 ரூபாய் விற்றது தற்போது திமுக ஆட்சியில் 55 ரூபாயாக உயர்ந்துள்ளது அதேபோல கடலை எண்ணெய் ஒரு கிலோ 130 ரூபாய் விற்றது, தற்போது 200 ரூபாயாக உயர்ந்துள்ளது. நல்லெண்ணெய் ஒரு கிலோ 250 ரூபாய் விற்றது தற்போது 450 ரூபாயாக உயர்ந்துவிட்டது.



பாசிப்பருப்பு ஒரு கிலோ 94 ரூபாய் விற்றது, தற்போது 120 ரூபாயாக உயர்ந்துவிட்டது. உளுந்து ஒரு கிலோ 80 ரூபாய் விற்றது தற்போது 130 ரூபாயாக உயர்ந்து விட்டது .சீரகம் ஒரு கிலோ 450 ரூபாய்க்கு விற்றது தற்போது 600 ரூபாயாக இருந்து விட்டது. மிளகு ஒரு கிலோ 550 ரூபாய்க்கு விற்றது தற்போது 900 ரூபாயாக உயர்ந்து விட்டது. இந்த விலைவாசி உயர்வால் மக்கள் கடும் கோபத்தில் உள்ளனர். தற்போது ஸ்டாலின் தேர்தல் அறிக்கையில் 8,000 ரூபாய் கூப்பன் வழங்குவோம் என்று கூறியுள்ளனர் இந்த ஐந்தாண்டுகளில் திமுக ஆட்சியில் இருந்தபோது 8000 ரூபாய் கூப்பன் ஏன் கொடுக்கவில்லை?

இதை மக்களுக்கு ஏமாற்ற தான் .ஸ்டாலின் எத்தனை கூப்பாடு போட்டாலும் திமுக ஆட்சிக்கு மக்கள் ஓட்டு போட மாட்டார்கள். திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. ஆயிரம் ரூபாய் உரிமை தொகையை அனைத்து குடும்பங்களுக்கும் திமுக வழங்கவில்லை ஆனால் எடப்பாடியார் தேர்தல் அறிக்கையில் அனைத்து குடும்பங்களுக்கும் 2000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். அதேபோல முதியோருக்கான ஓய்வூதிய தொகையை 2000 ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவித்துள்ளார் .

இதே கடந்த திமுக தேர்தல் அறிக்கையில் முதியோர் உதவித் தொகையை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்குவோம் என்று கூறிவிட்டு 1200 ரூபாய் தான் உயர்த்தி வழங்கினார்கள்.

அனைத்து குடும்பங்களுக்கும் குளிர்சாதனப்பெட்டி வழங்கப்படும் இது சாத்தியமா? என்று எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினார்கள் இதே 2011ஆண்டு அம்மாவின் ஆட்சியில் ஒரு கோடியே 87 லட்சம் மக்களுக்கு மிக்ஸி, கிரைண்டர் ,மின்விசிறி ஆகிய மூன்று பொருளை வழங்கினோம் நிச்சயமாக குளிர்சாதன பெட்டியை வழங்குவோம்.

நடைபெறும் சட்ட மன்ற தேர்தலில் நீங்கள் வாக்குச்சாவடிக்கு போகும்போது சோழவந்தான் தொகுதியில் போட்டியிடும் மாணிக்கத்திற்கு 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றியை பெற வைக்குமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவர் அவர் பேசினார்.

இந்த கூட்டத்தில்இதில் வாடிப்பட்டி பேரூர் கழகச் செயலாளர் அசோக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர்கள் காளிதாஸ், ரவிச்சந்திரன் ,அரியூர் ராதாகிருஷ்ணன், கொரியர் கணேசன், ஜெயலலிதா பேரவை மாநில துணைச் செயலாளர் ராஜேஷ் கண்ணா, மாவட்ட பாசறை துணை செயலாளர் மணிமாறன் , மாவட்ட மகளிரணி செயலாளர் லட்சுமி மற்றும் வழக்கறிஞர் ராஜ்குமார், முத்து கண்ணன் ,சந்தனத்துரை, ஆர்.எஸ். ராமசாமி, பாரத் சங்கு வில்லி, அழகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் பேரூர் பேரவை செயலாளர் தனசேகரன் நன்றி கூறினார்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### அதிமுக போர்வையில் நுழைய முயற்சிக்கும் பாஜக: உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்

அதிமுக என்ற போர்வையின் மூலம் மீண்டும் தமிழகத்தினுள் நுழைய முயற்சிக்கிறது பாஜக என, ஆவடியில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் ஆவடி சட்டப்பேரவை தொகுதியில் திமுக வேட்பாளராக அமைச்சர் சா.மு.நாசர் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆவடி மாநகராட்சி அலுவலகம் அருகே பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: திமுக இளைஞரணி தொடங்கப்பட்ட காலத்தில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு உற்றத் துணையாக இருந்தவர் சா.மு.நாசர்.

திமுக முதன் முதலாக வெற்றி பெற்ற 1967 தேர்தலின் போது, பள்ளி மாணவனாக வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தவர் சா.மு. நாசர். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த சா.மு.நாசருக்கு, தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். திமுக அரசின் திட்டங்களால், இந்தியாவில் வளரும் மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையில் தமிழகத்துக்கு என, எந்த திட்டமும் இல்லை, தமிழ்நாடு என்ற பெயரே இல்லை.

தமிழகத்தை முழுமையாக புறக்கணிக்கும் மத்திய பாஜக அரசை, தமிழகம் புறக்கணிக்கவேண்டாமா? தமிழகத்தில் எப்படியாவது நுழையவேண்டும் என பாஜக பார்க்கிறது. தமிழகத்தினுள் நேரடியாக நுழைய அதிமுக என்ற போர்வையில் முயற்சிக்கிறது பாஜக. ஆகவே, அதிமுகவுக்கு விழுகிற ஒவ்வொரு ஓட்டும் பாஜகவுக்கு விழுகிற ஓட்டு என்பதை மக்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### அஜித் சாலையில் நடந்தால் தமிழ்நாடே பின்னால் நிற்கும்; செல்வப்பெருந்தகை

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: விஜய் காங்கிரஸ் கட்சியை பற்றி ஒரு கருத்து கூறியுள்ளார். காங்கிரஸ் என்பது 140 ஆண்டுகள் கால வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்சி. இந்த கட்சியை குறைசொல்வது எந்த விதத்தில் நியாயம் என்று நான் விஜய்யிடம் கேட்க விரும்புகிறேன். எவ்வளவோ வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்து ஓங்கி நிற்கும் ஒரே இயக்கம் காங்கிரஸ்.

எங்கள் கட்சி யாருடன் கூட்டணி அமைப்பது என்பதை எங்கள் தலைமை முடிவு செய்யும். விஜய் முடிவு செய்ய முடியாது. யாரோ 4 பேர் சேர்ந்தார்கள் என்பதற்காக அதை தூக்கிப் பிடித்துக்கொண்டு கட்சி என்கூட உள்ளது என்றால் அது எவ்வளவு பெரிய பேராசை... அநாகரீகமான செயல். அநாகரீக பேச்சை எல்லாரும் போல விஜய்யும் தொடரக்கூடாது. உடனே கைவிட வேண்டும்.

விஜய் கட்சியே விபத்தால் வந்த கட்சிதான். ஆகவே விபத்து நடக்கத்தான் செய்யும். விஜய் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றால் அவர் இதுபோன்ற செயல்களில் இருந்து விடுபட வேண்டும். ரசிகர்கள் யார் சென்றாலும் பார்க்கிறார்கள். அஜித் ரோட்டில் சென்றால் தமிழ்நாடே அவர் பின்னால் திரண்டு நிற்கும். துடிப்பான ரசிகர்கள் இரண்டு பேருக்குத்தான் இருக்கிறார்கள். ஒன்று அஜித்... மற்றொன்று ரஜினிகாந்த்" இவ்வாறு அவர் பேசினார்.

### முதல்வர் பதவியை விட்டுக்கொடுத்த நான் துரோகி: இபிஎஸ் மீது செங்கோட்டையன் குற்றச்சாட்டு

தவெக தலைவர் விஜய் ஆதரவுடன் முதல்வராகி பணம் சம்பாதிக்க எடப்பாடி பழனிசாமி முயன்றதாக செங்கோட்டையன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் தவெக பிரசாரத்தில் செங்கோட்டையன் பேசுகையில், "அதிமுகவிலிருந்து என்னை நீக்கியதுடன், என்னை துரோகி என்றும் இபிஎஸ் அழைக்கிறார். அதுமட்டுமின்றி, என் மீது இபிஎஸ் கொலை வெறியில் உள்ளார்.

இதற்குக்காரணம், தவெகவை அதிமுகவுடன் இணைத்து முதல்வராகி விடலாம் என்று இபிஎஸ் நினைத்தார். விஜய் ஆதரவுடன் ரூ. 5,000 கோடி சம்பாதிக்கவும் திட்டமிட்டார்.

ஆனால், விஜய் மட்டுமே முதல்வர் வேட்பாளர்; வேறு யாரும் இல்லை என நான் தெரிவித்ததால்தான்.

முதல்வர், பொதுச் செயலாளர் பதவியை விட்டுக்கொடுத்த எனக்கு கிடைத்த பரிசு, துரோகி. எனக்குப் பின் கட்சியில் சேர்ந்து பொதுச்செயலாளரானவர், கட்சிக்காக உழைத்தவர்களை நீக்கி வருகிறார்.

கட்சியைவிட்டு நீக்கப்பட்டபிறகு, கிளைச்செயலாளர் ஒருவர் வீட்டின் துக்க நிகழ்வுக்கு நான் சென்றதால், அவரையும் கட்சியைவிட்டு நீக்கி விட்டனர்.

10 முறை தோல்வியைச் சந்தித்த எடப்பாடி பழனிசாமியால், திமுகவை வீழ்த்த முடியாது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு பிறகு, திமுகவை வீழ்த்த விஜய் ஒருவரால் மட்டுமே முடியும்" என்று தெரிவித்தார்.

## "பழனிசாமிக்கு தேர்தல் ஜுரம் வந்துவிட்டது" - கனிமொழி எம்.பி விமர்சனம்



"எடப்பாடி பழனிசாமிக்கு தேர்தல் பயம் போய் தற்போது தேர்தல் ஜுரம் வந்துவிட்டது. அதனால் என்ன பேசுறோம் என தெரியாமல் முதல்வரை கீழ்த்தரமாக விமர்சனம் செய்கிறார்" என கனிமொழி எம்.பி தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் புதுச்சத்திரம், நாமக்கல், குமாரபாளையம் ஆகிய தொகுதிகளில் திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி, திமுக வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்தார். நாமக்கல் பூங்கா சாலையில் நாமக்கல் தொகுதி திமுக வேட்பாளர் ராணியை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியது: "நாமக்கல்லில் முதன்முறையாக நிறுத்தப்பட்டுள்ள பெண் வேட்பாளர் ராணி. நாம் உரிமையோடு, பெருமையோடு வந்து வாக்கு கேட்கிறோம். ஏனெனில், சொன்ன வாக்குறுதியெல்லாம் நிறைவேற்றி தந்ததால் உரிமையோடு வந்து வாக்கு கேட்கிறோம்.

மகளிர் உரிமைத் தொகை ஒரு மாதம் கழித்து மீண்டும் முதல்வராக ஸ்டாலின் பொறுப்பேற்ற பின் ரூ.2 ஆயிரமாக வழங்கப்படும். திமுக கூட்டத்தில் எல்லாரும் இரண்டு விரலை காண்பிக்க தொடங்கிவிட்டனர். ஏனெனில் இரண்டு எனில் 2 ஆயிரம் ரூபாய் தான்.

எடப்பாடி பழனிசாமி, பாஜவுடன் கூட்டணி வைத்துள்ளார். பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ளர்களின் நிலைமையெல்லாம் என்ன ஆயிற்று என்பது அனைவருக்கும் தெரியும். பிஹாரில் எத்தனையோ முறை முதல்வராக இருந்த நிதிஷ் குமார், தற்போது மாநிலங்களவை உறுப்பினராக அனுப்பப்பட்டுள்ளார்.

பாஜகவுடன் கூட்டணி வைத்த எத்தனையோ கட்சிகள் காணாமல் போய்விட்டன. எனவே எடப்பாடி பழனிசாமி பார்த்து பத்திரமாக இருந்து கொள்ள வேண்டும். ஏனெனில் தேர்தல் முடிந்த பின் ஏதோ ஒரு மாநிலத்திற்கு ஆளுநராக அனுப்பப்படுகிறார்கள். ஆளுநர் வேலை பெரிய கஷ்டம் எதுவும் இல்லை. சசிகலா காலில் விழுந்து பதவிக்கு வந்த எடப்பாடி பழனிசாமி, கடைசியில் அவருக்கு கட்சியில் இடம் இல்லை என கூறிவிட்டார். ஜெயலலிதாவால் முதல்வராக்கப்பட்ட ஓபிஎஸ்ஸுக்கு கட்சியில் இடம் இல்லை என கூறிவிட்டார். அதனால் தமிழகத்தை காப்பற்ற வேண்டுமெனில் முதல்வர் ஸ்டாலினால்தான் முடியும் என முடிவெடுத்து திமுகவில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

தமிழகத்துக்கும், தன்னை வளர்த்துவிட்டர்களுக்கும் எடப்பாடி பழனிசாமி துரோகம் இழைத்துக் கொண்டுள்ளார். இன்று அண்ணா திமுக, அமித் ஷா திமுகவாகிவிட்டது. அதனால் அவரை நிச்சயம் ஆளுநராக அனுப்புவார்கள். இவரைப் போல் அடிமை யாரும் கிடைக்க மாட்டார்கள்.

எடப்பாடி பழனிசாமிக்கு தேர்தல் பயம் போய் தற்போது அவருக்கு தேர்தல் ஜுரம் வந்துவிட்டது. அதனால் என்ன பேசுறோம் என தெரியாமல் முதல்வரை கீழ்த்தரமாக விமர்சனம் செய்கிறார். எதிர்க்கட்சி தலைவர் என்பதை மறந்து விமர்சனம் செய்கிறார். இதற்கெல்லாம் தமிழக மக்கள் இந்த தேர்தலில் எடப்பாடி பழனிசாமிக்கு சரியான பாடத்தை புகட்டுவர். கடந்த மக்களவைத் தேர்தலில் பாஜகவுடன் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்று கூறிய அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, இப்போது பாஜகவுடன் கூட்டணி வைத்து உள்ளார். பல மாநிலங்களில் பாஜகவுடன் கூட்டணி வைத்தவர்கள் நிலை என்ன ஆனது என்று உங்களுக்கு தெரியும்.

தமிழக மக்களின் உரிமைகளுக்காக போரடும் இயக்கம் திமுக. தொகுதி மறுசீரமைப்பு கொண்டு வந்து தமிழகத்திற்கு உண்டான மக்களவை தொகுதியை குறைக்க முயற்சி நடக்கிறது. கடந்த 2016-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றால் அதிமுக ஆட்சியில் செல்போன் தருவோம் என கூறியது என்ன ஆனது.

தேர்தலில் வெற்றிபெற்று திமுக ஆட்சி அமைந்ததும் ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.8 ஆயிரம் கூப்பன் தருகிறோம். உங்களுக்கு தேவையான வீட்டு உபயோக பொருளை வாங்கிக் கொள்ளலாம். இந்த தேர்தல் தமிழகத்தின் கீழடிக்கும், வட இந்தியாவில் ஆஎர்எஸ்எஸ் தலைமையகம் அமைந்துள்ள நாக்பூருக்கும் இடையிலான தேர்தல். நிச்சயம் திமுக வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும்" என்று அவர் பேசினார்.

## "ஸ்டாலின், உதயநிதி என்னை திட்டமிட்டு அவதூறாக பேசுகிறார்கள்" - இபிஎஸ் கண்டனம்



முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி என்னை திட்டமிட்டு அவதூறாக பேசிகொண்டிருக்கிறார்கள். நான் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன் என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசிய போது, "எனது 51 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் பொதுவெளியில் நான் யாரையும் விமர்சனம் செய்தது கிடையாது. ஆனால் தற்போதைய முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி என்னை திட்டமிட்டு அவதூறாக பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன். அதற்கு தகுந்த பதிலடி உடனுக்குடன் கொடுப்பேன். கரோனா காலகட்டத்தில் கூட நான் 32 மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அதிகாரிகள், சுய உதவிக் குழுக்கள், விவசாயிகள், பல தரப்பட்ட தொழில் செய்கின்ற மக்களையும் அழைத்து அவர்களிடம் கருத்துகளை கேட்டேன். துணிச்சலோடு சென்ற நான் உயிரைப் பற்றி கவலைப்படவில்லை, மக்களைப் பற்றி தான் கவலைப் பட்டேன் என்று பேசினார்.

## "எனக்கு நிதிஷ் குமார் நிலை ஏற்படாது" - புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி உறுதி



"எனக்கு நிதிஷ் குமார் நிலை ஏற்படாது" என்று புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி உறுதிபட தெரிவித்துள்ளார்.

வாக்குப் பதிவு அதிகரித்துள்ளது யாருக்கு சாதகமாக இருக்கும் என நினைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, "மக்கள் விழிப்புணர்வுடன் அதிகளவில் வாக்களிக்கின்றனர். மக்கள் நலத் திட்டங்கள் அவர்களுக்கு சென்றடைந்துள்ளதும் ஒரு காரணம். நாங்கள் ஆட்சிக்கு திரும்ப வர வேண்டும் என்றுதான் வாக்களிக்கிறார்கள். புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இன்று காலை தொடங்கி நடைபெற்றது. தனது தொகுதியில் வாக்களித்த பிறகு முதல்வர் ரங்கசாமி தொகுதி வாரியாக சென்று பார்வையிட்டு அங்குள்ள நிலவரம் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து மங்கலம் தொகுதியில் டீக்கடைக்கு சென்ற முதல்வர் ரங்கசாமி டீ மற்றும் அதிரசம் சாப்பிட்டுக் கொண்டே பொதுமக்களிடம் பேசினார். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கலந்துரையாடினார்.

இம்முறை எத்தனை இடங்கள் வெல்வீர்கள் என்ற கேள்விக்கு, "ஆட்சியமைக்கும் அளவுக்கு தேர்தலில் வெல்வோம்" என்று முதல்வர் ரங்கசாமி கூறினார்.

நிதிஷ் குமாரின் நிலைதான் உங்களுக்கு ஏற்படும் என்கிறார்களே என்று எதிர்க்கட்சியினர் கூறுவது குறித்த கேள்விக்கு, "அதுபோன்ற நிலை ஏற்படாது. என் தலைமையில் ஆட்சி அமையும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதைச் செய்வார்கள். மத்திய அரசு உடன் இணக்கமாக இருந்து பல திட்டங்கள் செயல்படுத்தி உள்ளோம்" என்று முதல்வர் கூறினார்.

## கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லை: நயினார் நாகேந்திரன்



திருநெல்வேலி தொகுதிக்கு உட்பட்ட பழைய பேட்டை பகுதியில் அதிமுக வேட்பாளர் தச்சை கணேசராஜாவுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொள்ள வந்த நயினார் நாகேந்திரன் கூறியது: "தமிழகத்தில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ளன. சாலைகள், மேம்பாலங்கள் உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் மத்திய அரசின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், மாநில அரசு மக்கள் பயன்பாட்டுக்கான முன்னேற்றத் திட்டங்கள் எதையும் கொண்டுவரவில்லை. இது குறித்து பொதுமக்கள் முன்னிலையில் விவாதிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. மாநிலத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக கூறப்படுவது பொய். தமிழக முதல்வர் சொல்லும் மாநில வளர்ச்சி எதில் என்றால் கஞ்சா விற்பனையில் மட்டுமே.

காங்கிரஸ் கட்சி எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. திமுக கூட்டணியில் மட்டும்தான் அக்கட்சி இருக்கிறது. ஆலங்குளம் பகுதியில் துப்பாக்கிச் சூடு சம்பவம் மட்டுமின்றி, தமிழகம் முழுவதும் காவல் நிலைய மரணங்களும் நடைபெற்று வருகின்றன. சட்டம் மற்றும் ஒழுங்கை கட்டுப்படுத்த காவல் துறையால் முடியவில்லை.

முதல்வரைப் பற்றி தவறாக பேசினால் உடனடியாக கைது செய்கிறார்கள். ஆனால், பிரதமரை கொலை செய்ய வேண்டும் என கூறியவர்கள் மீது எந்த நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திமுகவுக்கு ஆதரவாக செயல்படுகிறார். காவல் துறை உயர் அதிகாரிகளும் அதேபோல் செயல்படுகின்றனர். வருவாய் துறையும் காவல் துறையும் இணைந்து திமுகவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர முயற்சி செய்கின்றனர். ஆனால் அது நிச்சயமாக நடைபெறாது. அதிமுக திட்டங்களை பார்த்து காப்பி அடித்தே திமுக செயல்பட்டு வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

## "பிடிஆர் மீதான மக்களின் அதிருப்தி தான் எனக்கு பெரிய பலம்" - சுந்தர்.சி விவரிப்பு



"என்னுடைய மிகப் பெரிய பலமே மதுரை மத்திய தொகுதி திமுக வேட்பாளர் பழனிவேல் தியாகராஜன்தான். நாங்கள் பேச வேண்டியதை எல்லாம் அவர் பேசி வருகிறார். அவருக்கு மிகப் பெரிய நன்றி" என்று என்டிஏ கூட்டணி வேட்பாளர் சுந்தர்.சி தெரிவித்தார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறுகையில், "திமுகவினர் தங்களுக்கான திட்டங்களை மட்டும் எப்படியாவது நிறைவேற்றிக் கொள்கிறார்கள். ஆனால், மக்களுக்கான திட்டங்களில் கவனம் செலுத்துவதில்லை.

மதுரை மெட்ரோ ரயில் செயல்வடிவ திட்டத்தில் மாநில அரசு நிறைவேற்றி கொடுக்க வேண்டிய நிறைய விஷயங்கள் இருந்தன. அதை எதையும் அவர்கள் செய்யாமல், ஐந்து ஆண்டுகள் ஆட்சியை முடித்துவிட்டு பழியை தூக்கி அப்படியே மத்திய அரசு மீது போட்டுவிட்டு தப்பிக்கப் பார்க்கிறார்கள்.

இதுபோல், மதுரை விமான நிலையம், எய்ம்ஸ் போன்ற மதுரைக்கு வர வேண்டிய எத்தனையோ மத்திய அரசு திட்டங்களுக்கு மாநில அரசு முட்டுக்கட்டையை போட்டு தடுத்து அரசியல் செய்கிறார்கள். ஆனால், அதிமுக ஆட்சியில் இதே மெட்ரோ ரயில் திட்டத்தை மத்திய அரசை மீறி சென்னைக்கு மட்டும் எப்படி கொண்டு வர முடிந்தது.

ஆனால், மதுரையில் திமுக ஆட்சியில் மெட்ரோ திட்டத்துக்கான ஆரம்ப கட்ட பணிகளுக்கான ஆவணங்களை கூட சமர்ப்பிக்கவில்லை. அப்படி இருக்கும்போது மத்திய அரசு மீது பழிபோடுவது இவர்களுடைய தகுதியின்மையைதான் காட்டுகிறது.

என்னுடைய மிகப்பெரிய பலம் என்ன என்று இன்று செய்தியாளர்கள் சிலர் கேட்டார்கள். அதற்கு நான் என்னுடைய எதிர்க்கட்சி வேட்பாளர் பழனிவேல் தியாகராஜன்தான் என்று சொன்னேன். மக்களுக்கு அவர் மீது இருக்கிற அதிருப்திதான் எனக்கு பெரிய பலமாக இருப்பதாகச் சொன்னேன். இப்போது நான் பேச வேண்டியதையெல்லாம் என் சார்பாக அவரே ஏதோ ஒரு அதிருப்தியில் பேசிவிடுகிறார். அதற்கு அவருக்கு மிகப் பெரிய நன்றி. திமுக அரசு என்னனென்ன நல்லது செய்யவில்லையோ, அதை அவரே சரியாக சொல்லிவிடுகிறார்.

சில நாட்களுக்கு முன் இந்த ஆட்சியில் நானே நல்ல பணிகளை செய்ய முடியவில்லை, அதை வெளியே சொல்ல முடியவில்லை என்று ஆதங்கப்பட்டுள்ளார். சட்டப் பேரவையிலும் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை, அதிகாரிகள் கையில்தான் இருக்கிறது என்று தனது பொறுப்பை தட்டிக் கழித்துள்ளார். அதனால், முதல்வரால் தண்டிக்கப்பட்டுள்ளார்.

நாங்கள் பேச வேண்டிய விஷயங்களை அவரே பேசிக் கொண்டு இருக்கிறார். மக்களுக்கு தெரிய வேண்டிய உண்மைகளை எங்கள் சார்பாக அவரே கூறி வருகிறார். அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றி" என்று சுந்தர். சி கூறினார்.

## முழு மதிப்பெண் பெறும் விடைத்தாள்களை ஆய்வு செய்ய தேர்வுத் துறை உத்தரவு

**சென்னை, ஏப்.11:**

தமிழகபள்ளிக்கல்விபாடத்திட்டத்தில் பிளஸ் 2, பத்தாம் வகுப்புக்கான பொதுத் தேர்வு கடந்த மார்ச் 2 முதல் ஏப். 6-ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. இத்தேர்வை சுமார் 17 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதினர். இதில், பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணிகள் ஏப்ரல் 6-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து பத்தாம் வகுப்புக்கான விடைத்தாள்திருத்துதல்வெள்ளிக்கிழமை (ஏப். 10) முதல் தொடங்கவுள்ளது. தேர்வுத் துறை வழிகாட்டுதல்களின் அடிப்படையில் விடைத்தாள் திருத்தும் பணியை முதுநிலை, பட்டதாரி ஆசிரியர்கள்மேற்கொண்டுவருகின்றனர். இந்த நிலையில், விடைத்தாள் மதிப்பீட்டின்போது 100-க்கு 100 (சென்டம்) மதிப்பெண் பெறும் மாணவர்களின் விடைத்தாள்களை முகாம் அலுவலர் ஆய்வுசெய்துகையொப்பமிட வேண்டும் என்றுதேர்வுத் துறைஉத்தரவிட்டுள்ளது.

இது குறித்து தேர்வுத் துறை இயக்குநரகம்சார்பில், அனைத்துமாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை:

பொதுத் தேர்வுகளின் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணிதொடர்பாக, அனைத்து முகாம் அலுவலர்களுக்கும் ஏற்கெனவே நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. அதைஏ பின்பற்றி மதிப்பீட்டுபணிகளைமேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து மதிப்பீட்டுப் பணியின்போது முழு மதிப்பெண் (சென்டம்) பெறும் மாணவர்களின் விடைத்தாள்களைக் கவனமாக ஆய்வுசெய்துகையொப்பமிட வேண்டுமென அண்மையில் நடைபெற்ற மண்டல கூட்டத்தில் முடிவானது. இதையடுத்து, அனைத்து முகாம் அலுவலர்களும் தங்கள் மையத்தில் முழு மதிப்பெண் பெற்ற தேர்வர்களின் பட்டியலைபதிவிறக்கம்செய்து, அவற்றை ஆராய்ந்து ஒப்புதல் வழங்க வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

## திமுக கூட்டணிக்கு வன்னியர் அமைப்பு ஆதரவு

**சென்னை, ஏப்.11:**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினை வியாழக்கிழமை சந்தித்த, வன்னியர் கூட்டமைப்பின் தலைவரும் , அனைத்திந்திய பாட்டாளி முன்னேற்றக் கட்சியின் நிறுவனத் தலைவருமான சி.என்.ராமமூர்த்தி, துணைத் தலைவர் கே.வெங்கடேசன் ஆகியோர் தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

அதேபோன்று, வன்னியர் சங்கத் தலைவர் காடுவெட்டி ஜெ.குருவின் மகளும், ஜெ.குரு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவருமான விருதாம்பிகையும் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து ஆதரவு தெரிவித்தார். தொடர்ந்து, தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச்செயலர் திருப்பூர் அல்தாப், பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளின்போது திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு. அமைப்புச் செயலர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஏழுமலையான் தரிசனம்: 6 மணி நேரம் காத்திருப்பு

**திருமலை, ஏப்.11:**





திருமலைஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 6 மணி நேரம் காத்திருந்தனர்.

திருமலையில் வியாழக்கிழமை காலை நிலவரப்படி வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 5 அறைகளில் பக்தர்கள் ஏழுமலையான் தரிசனத்துக்காக காத்திருந்தனர். தர்ம தரிசனத்துக்கு 6 (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்) மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது. நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கு 3 முதல் 4 மணி நேரம் ஆனது.

அலிபிரி நடைபாதை வழியாக மதியம் 2 மணி வரை 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பக்தர்களும், அவர்களின் பெற்றோர்களும், இரவு 10 மணி வரை அனைத்து பக்தர்களும் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஏழுமலையானை புதன்கிழமை முழுவதும் 72,071 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; இவர்களில் 23,826 பேர் தலைமுடி காணிக்கை செலுத்தினர்.

உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில் ரூ. 4.17 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

## திருச்சி சமயபுரம் கோயிலில் சித்திரை பெருந்திருவிழா: ஏப்.14-ம் தேதி தேரோட்டம்

**திருச்சி, ஏப்.11:**



திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயில் சித்திரை பெருந்திருவிழாவின் தொடக்கமாக கொடியேற்றம் நடைபெற்றது. இதன் முக்கிய நிகழ்வான தேரோட்டம் ஏப்.14-ம் தேதி நடைபெறுகிறது.

சக்தி தலங்களில் முதன்மையாக விளங்கும் சமயபுரம் மாரியம்மன் கோயிலில் தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு சகல சவுபாக்கியங்களும் கிடைக்க, அம்மனே பக்தர்களுக்காக ஆண்டுதோறும் மாசி கடைசி ஞாயிறு முதல் 28 நாட்கள் பச்சைப்பட்டினி விரதம் இருப்பது வழக்கம்.

பச்சைப் பட்டினி விரதம் முடிவடைந்தவுடன் அம்மனுக்கு நைவேத்தியம் படைத்து, சித்திரை பெருந் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கும்.

அதன்படி, நிகழாண்டு மார்ச் 8-ம் தேதி அம்மன் பச்சைப் பட்டினி விரதம் தொடங்கி முடிவடைந்தது. அதைத் தொடர்ந்து, சித்திரைப் பெருந்திருவிழாவின் தொடக்கமாக கொடியேற்றம் நடைபெற்றது.

இதையொட்டி, சிறப்பு மலர் அலங்காரத்தில் உற்சவ மாரியம்மன் தங்க கொடிமரம் முன்பு எழுந்தருளியதும், கொடிமரத்துக்கு பால், தயிர், மஞ்சள், சந்தனம் உள்ளிட்ட திரவியப் பொருட்களால் அபிஷேகம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகளுக்கு பிறகு காலை 8 மணியளவில் சித்திரை பெருந்திருவிழா கொடியேற்றப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து, இன்று 11-ம் தேதி சேஷ வாகனம், 12-ம் தேதி மரக் குதிரை வாகனம், 13-ம் தேதி வெள்ளிக் குதிரை வாகனத்தில் வீதியுலா நடைபெறுகிறது. விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் ஏப்.14-ம் தேதி நடைபெறுகிறது.

அன்று காலை 10.31 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் மிதுன லக்னத்தில் திருத்தேர் வடம் பிடித்தல் நிகழ்வு நடைபெற உள்ளது. இதில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பர்.

## ஜன நாயகன் படத்தை யாரும் பகிர வேண்டாம்! இயக்குநர் வேண்டுகோள்!

**சென்னை, ஏப்.11:**

சட்டவிரோதமாக இணையத்தில் கசிந்த ஜன நாயகன் திரைப்படத்தை யாரும் பகிர வேண்டாம் என்று இயக்குநர் எச். வினோத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நடிகர் விஜய்யின் கடைசித் திரைப்படமான ஜன நாயகனை இயக்குநர் எச். வினோத் இயக்கியுள்ளார். பொங்கல் வெளியீடாக கடந்த ஜன. 9 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், சில காட்சிகள் மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் இருப்பதாகக் கூறி சான்றிதழ் வழங்குவதை தணிக்கை வாரியம் நிறுத்தி வைத்தது.

தொடர்ந்து, நடைபெற்ற வழக்கு விசாரணைகளில் இப்படத்தை மறுதணிக்கை செய்ய நீதிமன்றம் உத்தரவு அளித்தது.

இதனால், ஜன நாயகன் வெளியீட்டில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டதுடன் வணிக ரீதியாக சில பின்னடைவுகளும் ஏற்பட்டன.

தற்போது, மறுதணிக்கை நிறைவடைந்ததாகவும் தேர்தல் நிறைவடைந்த பிறகு மே மாதத்தில் திரையரங்குகளில் வெளியிட படக்குழுத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், ஜன நாயகன் திரைப்படத்தின் சில காட்சிகள் இணையத்தில் சட்டவிரோதமாக வியாழக்கிழமை மாலை வெளியான நிலையில், இன்று அதிகாலை 3 மணிநேர முழுப் படமும் வெளியாகியுள்ளது.

இதனால் படக்குழுவினரும் விஜய் ரசிகர்களும் பேரதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில், இயக்குநர் எச். வினோத் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

“ஒவ்வொரு காட்சியும் ஒருவரின் கனவைச் சுமந்துள்ளது. வெளியீட்டுக்கு முன்பே அது கசிவது மிகப்பெரிய வலியைத் தருகிறது.

தயவுசெய்து அதனைப் பகிராமல் ஆதரவளியுங்கள்” என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### சருமப் பொலிவுக்கு அருமருந்தாகும் டாப் 10 ஜூஸ் வகைகள்!



பீட்ரூட் மற்றும் பாதாம் சேர்த்து செய்யும் ஜூஸில் வைட்டமின் E, ஆன்டி ஆக்சிடன்ட் ஆகியவை அதிகம் உள்ளன. இவைசருமத்தில் அழுக்கு நீக்கிசுத்தம் செய்யவும், நச்சுக்களை வெளியேற்றவும் உதவுகின்றன.

வாட்டர் மெலன் கிரேப் கலந்த ஜூஸில் வைட்டமின் A, C, ஆன்டி ஆக்சிடன்ட்கள் நிறைந்துள்ளன. மேலும் இதிலுள்ள நீர்ச் சத்தானது உடலை நீரேற்றத்துடன் வைக்க உதவுகிறது. சிட்ரஸ் பழமான கிரேப்பில் பொட்டாசியம் சத்து அதிகளவில் உள்ளது. இது செல்கள் ஆரோக்கியமாக இயங்க உதவுகிறது.

கேரட் ஜூஸ் தோலின் நிறத்தைப் பாதுகாத்து, சூரியக் கதிர்களால் செல்களில் சிதைவு ஏற்படுவதையும் தடுக்கிறது.

பப்பாளி ஜூஸில் உள்ள என்சைம்கள் தோலிலுள்ள இறந்த செல்களை உரித்தெடுக்கின்றன; ஆன்டி ஆக்சிடன்ட்கள் தோலிலுள்ள சுருக்கங்களையும் கறைகளையும் நீக்குகின்றன.

ஆரஞ்சு ஜூஸிலிருக்கும் வைட்டமின் C யானது தோலில் ஏற்படும் கோளாறுகளை நீக்குவதில் முன்னிலை வகிக்கிறது.

ஆப்பிள் ஜூஸில் உள்ள பலவகையான வைட்டமின்கள், ஊட்டச்சத்துக்கள், அதிகளவு நீர்ச்சத்து ஆகியவை ஆக்சிடேட்டிவ் ஸ்ட்ரெஸ்ஸை நீக்கி அப்பழுக்கில்லாத பளீரென மின்னும் சருமத்தைத் தருகிறது. தோலுக்கு உள்வரை சென்று சுத்தம் செய்கிறது.

லெமன் ஜூஸிலிருக்கும் வைட்டமின் C யானது சருமத்திலிருக்கும் நச்சுக்களை நீக்கி, மாசற்ற சருமத்தைத் உருவாக்கித் தருகிறது.

மாதுளை ஜூஸில் வைட்டமின் E அதிகளவில் உள்ளது. இது சருமத்தில் உண்டாகியுள்ள சிதைவுகளை குணப்படுத்தி, செல்களுக்கு புத்துயிர் அளிக்கிறது. மந்தத்தன்மையையும் போக்குகிறது. ஆலுவேரா ஜூஸ் தோலுக்கு நீரேற்றம் கொடுத்து புத்துணர்ச்சி அளிக்கிறது.

பைனாப்பிள் ஜூஸில் உள்ள ப்ரோமெலைன் என்ஸைம்கள் வீக்கங்களை நீக்கி சருமத்தை சமநிலைப்படுத்துகின்றன; இறந்த செல்களை முழுவதுமாக நீக்கி குறைபாடில்லாமல் சருமத்தைப் பாதுகாக்கின்றன. வைட்டமின் C யானது கறைகளை நீங்கச் செய்கிறது.

## ‘நிலவில் ஒரு தளத்தை அமைக்கத் தயாராகி வருகின்றன’ - இஸ்ரோ விஞ்ஞானிகள்



அமெரிக்கா நாசாவின் ஆர்டெமிஸ்-2 மற்றும் இந்தியாவின் சந்திரயான்-3 ஆகிய இரண்டும் நிலவைப் புரிந்துகொள்வதற்கான முக்கியபடிகளாகும். ஆனால் அவற்றின் வழிமுறைகளும், நோக்கங்களும் முற்றிலும் வேறுபட்டவை. சந்திரயான்-3 நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கி மூவர்ணக் கொடியை ஏற்றிய அதே வேளையில், ஆர்டெமிஸ்-2 மனிதர்களை நிலவின் ‘பின்பக்கத்திற்கு’ அழைத்துச் சென்று ஒரு புதிய உலக சாதனையை படைத்துள்ளது.

ஆர்டெமிஸ்-2 மற்றும் சந்திரயான்-3 ஆகியவை விண்வெளிப் பந்தயத்தோடு நிலவை அடைவதோடு நின்றுவிடவில்லை. நிலவின் மிகவும் சவாலான பகுதிகளை யார் சிறப்பாக ஆராய்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கான போட்டியாக இதுமாறியுள்ளது. உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் இந்தப் பந்தயத்தில் பங்கேற்றுள்ளன. ஆனால் இதுவரை இந்தியாவும், அமெரிக்காவும் மட்டுமே வெற்றி பெற்றுள்ளன.

நாசாவின் ஆர்டெமிஸ்-2 விண்கலம் தற்போது நிலவின் மறுபக்கத்தை அடைந்து அதன் மீது பறந்தபோது, அது உலகமே பேசும் பொருளாக மாறியது. ஆனால், நாசாவிற்கு முன்பே, இந்தியாவின் இஸ்ரோ நிலவின் தென் துருவத்தில் தனது கொடியை நட்டது. குறிப்பாக, இந்தியாவின் சந்திரயான்-3 கடந்த 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ந்தேதி நிலவின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கியது. இது நிலவின் மிகக் குறைந்த சூரிய ஒளியைப் பெறும் பகுதியாகும். இங்குதான் நீர் (பனிக்கட்டி வடிவில்) இருப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த கடினமான பகுதியில் மென்மையாக தரையிறங்கிய உலகின் முதல் நாடு இந்தியா ஆகும். இந்தியாவிற்கு முன்பு பல நாடுகள் இங்கு தரையிறங்க முயற்சித்தன. ஆனால் அனைத்தும் தோல்வியடைந்தன.

நாசாவின் ஆர்டெமிஸ்-2 திட்டம்சற்றுவித்தியாசமானது. இந்தத் திட்டம் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்காது. மாறாக மனிதர்களுடன் நிலவைச் சுற்றி வந்து திரும்பும். இந்த விண்கலத்தில் 4 விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்று, நிலவு சுற்றுப்பாதையை நிறைவு செய்யும். பூமியிலிருந்து பார்க்க முடியாத நிலவின் பின்பகுதி வழியாக இந்த விண்கலம் கடந்து சென்றது இந்த திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இது பூமியிலிருந்து 4 லட்சத்து 6 ஆயிரத்து 773 கி.மீ. பயணித்து மிக நீண்ட தூரத்திற்கான சாதனையையும் படைத்தது.

தென் துருவம் என்பது நிலவின் கீழ்ப்பகுதி (துருவம்) ஆகும். இங்குள்ள பள்ளங்கள் மிகவும் ஆழமானவை. வெப்பநிலை மைனஸ் 200 டிகிரி செல்சியஸ் வரை செல்லக்கூடும். சந்திரயான்-3 இந்தப் பகுதிக்குச் சென்றது. நிலவின் மறுபக்கம் ‘இருண்ட பக்கம்’ என்றும் அழைக்கப்பட்டாலும், அது முற்றிலும் இருண்டதல்ல. அது பூமியை எதிர்கொள்ள முடியாத ஒரு பகுதியாகும். ஆர்டெமிஸ்-2 விண்வெளி வீரர்கள் இந்த மர்மமான பகுதிக்கு மேலே பறந்துள்ளனர்.

இஸ்ரோவின் சந்திரயான்-3 முற்றிலும் ரோபோக்களால் இயக்கப்பட்ட ஒருதிட்டமாகும். இதில் மனிதர்கள் யாரும் பயணிக்கவில்லை. அதன் முக்கிய அங்கங்களாக இருந்த ‘விக்ரம் லேண்டர்’ மற்றும் ‘பிரக்யான் ரோவர்’ ஆகியவை நிலவின் மேற்பரப்பில் சோதனைகளை நடத்தின. அதே போல், நாசாவின் ஆர்டெமிஸ்-2 திட்டம் ஒரு குழுவினரைக் கொண்ட திட்டமாகும். 4 விண்வெளி வீரர்கள் ஒரு விண்கலத்தில் நிலவின் மறுபக்கத்திற்குப் பயணம் செய்தனர். மனிதர்கள் நீண்டகாலத்திற்கு நிலவில் வாழ்வதற்கு உதவும் உயிர் ஆதரவு அமைப்புகளைச் சோதிப்பதே இதன் நோக்கமாகும். சந்திரயான்-3, ஆர்டெமிஸ்-2 திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. குறிப்பாக சந்திரயான்-3 திட்டத்தை இந்திய அரசு ரூ.615 கோடியில் நிறைவேற்றியது. இது பல ஹாலிவுட் திரைப்படங்களின் பட்ஜெட்டை விடக் குறைவு. ஆனால் நாசாவின் ஆர்டெமிஸ்-2 திட்டத்திற்கு ரூ.34 ஆயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது. இது இந்தியாவின் முழு சந்திரயான் திட்டத்தைவிட 17 மடங்கு அதிக செலவாகும். சந்திரயான்-3 நிலவின் மண் மற்றும் அங்கு நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி நமக்குத் தெரிவித்தது. ஆனால், எதிர்காலத்தில் ஆர்டெமிஸ்-3 திட்டத்தின் மூலம் நிலவில் மனிதர்களைத் தரையிறக்கும்போது நாசா எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள இது உதவியது. நாசாவின் இந்தத் திட்டத்தின் நோக்கம், அதன் ஓரியன் விண்கலம் மற்றும் எஸ்.எல்.எஸ் ராக்கெட் ஆகியவை மனிதர்களுக்கு எவ்வளவு பாதுகாப்பானவை என்பதைச் சோதிப்பதாகும்.

விண்வெளிப் பந்தயத்தில் இந்தியா இனி ஒரு பார்வையாளராக மட்டும் இல்லை. இஸ்ரோவும் நாசாவும் இப்போது “ஆர்டெமிஸ் உடன்படிக்கைகளின்” கீழ் இணைந்துசெயல்படுகின்றன. சந்திரயான்-3ல் இருந்து பெறப்பட்ட தரவுகளை நாசா பயன்படுத்தி வருகிறது. எதிர்காலத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து நிலவில் ஒரு தளத்தை அமைக்கத் தயாராகி வருகின்றன என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

# பேரன்பு



டே அப்பா ,அம்மாவ பிரிஞ்சு எனக்காக வந்து இருக்கியே ,உனக்கு கவலையா இல்லையா
அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லடி
பொய் சொல்லாதடா .உன்னை பத்தி எனக்கு தெரியாதா என்ன ?
நான் கஷ்டப்படக்கூடாதுன்னு வெளிய சொல்ல முடியாம ,உள்ளுக்குள்ள நீ கஷ்டப்படுறது எனக்கு தெரியும்டா நீ எத்தனையோ தடவை தனியா அழுவுறதை பார்த்து இருக்கேன்டா .சொத்து பத்து எதுவும் இல்லாத இந்த அனாதை சிறுக்கிக்காக இவ்வளவு கஷ்டம் நீ படணுமா என்ன ?
என்னை பெத்தவங்களே நான் குழந்தையா இருக்கும் போது ஏதோ ஒரு ஆசிரமத்து வாசல்ல தூக்கி போட்டிட்டு போகும் போது நீ மட்டும் ஏண்டா எனக்காக என் நிழலா நிக்குற ?
இங்க பாரு யாழினி இப்ப வேணா எங்க அப்பா -அம்மாவுக்கு போலி கவுரவமும் ,போலி மரியாதையும் தேவைப்படலாம் .என்னைக்காவது ஒரு நாள் இந்த மகன் முக்கியம்ன்னு உணர்வாங்க அப்ப நம்ம காதல் உயர்ந்ததுன்னு புரிதல் வரும் போது நாமெல்லாம் குடும்பமா வாழ தாண்டி போறோம்
உங்க அப்பா -அம்மாவை விட நான் உனக்கு பெரிசா போயிட்டேனா ?
உனக்காக நான் என்னடா பெரிசா செஞ்சிட்டேன் ..
எங்க அப்பா அம்மா தான் முக்கியம்னு என்னை நம்பி இருக்கிற உன்னை விட்டிட்டு போயிட்டேனா என்னை விட இந்த உலகத்துல மோசமான ஆளு யாருமில்லைடி ..எங்க அம்மாவுக்கு அப்பா கூட இருக்கார் .எங்க அப்பாவுக்கு அம்மா கூட இருக்காங்க .உனக்கு என்னை விட்டா வேறு யாருடி இருக்கா ?
மரணம் கூட நமக்கு ஒண்ணா தாண்டி வரணும் .இல்லைன்னா நீ இறந்த அஞ்சு நிமிசத்துக்கு அப்புறம் என் உயிர் போகணும்
ஏண்டா அப்படி சொல்ற ?
என் இறப்புக்கு பிறகு கூட யாருமில்லாம நீ கஷ்டப்பட கூடாது அதனால தாண்டி அப்படி சொன்னேன்
கருவாயனுக்கு என் மேல இம்புட்டு பாசமா ?
கண்ணு வைக்காதடி குள்ளச்சி யாழினி பேசி கொண்டே கண்ணன் நெஞ்சில் சாய்ந்தாள்
யாழினி நான் ஒண்ணு சொன்னா கோவிச்சிக்க மாட்டீயே ?
சொல்லுடா கருவாயா
அப்பா ,அம்மா சீக்கிரம் சேர்த்துக்கிறதுக்கு ஒரு ஐடியா சொல்லட்டான் சொல்லு
அப்படியே இதே ரொமான்ஸ்ஸோடு பெட்ரும் வந்தா சீக்கிரமா நமக்கு புள்ள பொறக்குமாம் ,அப்புறம் அப்பா ,அம்மாவும் சீக்கிரமா நம்மள சேர்த்துப்பாங்களாம் .
டே கருவாயா உன் ஐடியா எல்லாம் நல்லா தான் இருக்கு ஆனா இப்போதைக்கு குடும்ப விரிவாக்க திட்டத்தை எல்லாம் ஒத்தி போடு ..உன்னோட கிராபிக்ஸ் இண்டஸ்ட்ரியில் நீ சாதிக்க வேண்டியது நிறையா இருக்கு .நானும் உனக்கு உதவும் விதமா ஐ.டி கம்பெனியில் சேர்ந்து இருக்கேன் .
பிப்ரவரி மாசம் பெங்களூரில் ஒரு ட்ரைனிங் கிளாஸ் இருக்குடா அதை மட்டும் நல்லபடியா முடிச்சிட்டா எனக்கு சென்னை கிளையில் வேலை கிடைச்சிடும் ,நீயும் உன்னோட கிராபிக்ஸ் வேலைய உனக்கு பிடிச்ச சென்னையிலேயே செய்யலாம் .அப்பா -அம்மாவையும் அப்பப்ப திட்டு வாங்கினாலும் ஒரு எட்டு பார்த்திட்டு வர சுலபமா இருக்கும்
சரிடி குள்ளச்சி ட்ரைனிங் போகுறதுக்கு என்னென்ன வேணுமோ அதையெல்லாம் பேக்குல ஒழுங்கா எடுத்து வச்சுக்கோ .இந்த மாமனை நினைச்சுக்கிட்டே எதையும் மறந்திடாதடி
பெங்களூர் போக போற ,அது ஒண்ணும் பாம்பே இல்லை
நீ ஏதாவது மறந்திட்டா உடனே எடுத்துக்கிட்டு வந்து தர்றதுக்கு சம் ஜே
பாம்பேவுல ஒரு வருஷமா இருக்கிறதுக்கே உன் இந்தி தொல்லை தாங்கலைடா ,எப்ப நல்ல படியா ட்ரைனிங் முடிச்சிட்டு நம்ம சென்னையோட போக போறோமோ அப்ப தாண்டா எனக்கு சந்தோசம்
சரி ,சரி கண்டதை பேசிக்கிட்டு போற அவசரத்துல என் பிறந்தநாளை மறந்திட்டு எப்போதும் கொடுக்கிற நூறு முத்தத்தை கொடுக்காம போயிடாதடி
பிப்ரவரி 14 காதலர் தினம் மட்டுமல்ல என் கருவாயனோட பிறந்தநாள் கூட-லே ,சாரிடா கருவாயா என செல்லமாக திட்டி கொண்டே அவன் கன்னத்தை வருடுகிறாள்.
பிப்ரவரி 14 தன் மனைவியை ஏர்போர்ட்டில் விட்டு விட்டு வீடு வந்தடைந்தவனுக்கு காத்திருந்தது அதிர்ச்சி .
ஆம் வீடு வந்தவுடன் தொலைக்காட்சி செய்தியை கண்டவன் அந்த நிமிடங்களில் சித்த பிரம்மை பிடித்தவன் போலானான் .

சில வருடங்களுக்கு பிறகு
ஒரு மன நல மருத்துவமனையில் ...
இங்க பாருங்க சார் உங்க மகனை எங்களுடைய மருந்தோ ,டிரீட்மெண்ட்டோ பழைய நிலைமைக்கு கொண்டு வராது .உங்க மருமகளுடைய நினைவை விட உங்களுடைய அன்பு அவருக்கு பெருசா தெரியணும் அதை விட பாம்பேவிலிருந்து பெங்களூர் போன அந்த விமானத்தில் ஏற்பட்ட விபத்தில் உங்க மருமகள் இறந்ததை உங்க மகன் மறக்கணும் அப்ப தான் உங்க மகனை முழுமையா பழைய மாதிரி கொண்டு வர முடியும் .எங்க பாசத்தை விட அவனுடைய பேரன்பு பெரிசு சார் .எதையும் எதிர்பார்க்காத பொல்லாத காதல் ,அவ்வளவு சீக்கிரத்தில் எல்லாம் மறக்கடிக்க வைக்க முடியாது சார் ...
அப்போது வானில் விமானம் ஒன்று சப்தத்துடன் பறந்து கொண்டிருந்தது ...யாழினி ,யாழினி என்று கத்தி கொண்டே அந்த விமானம் போன திசை நோக்கி ஓடினான் காதல் பித்தேறிய அந்த பேரன்பு கருவாயன்

எண்ணமும் -எழுத்தும்
**நௌஷாத் கான்.லி**

# ஓட்டுநர்...



சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகிவிட்டது வீட்டிலிருந்து கிளம்புகிற வேகத்தில் கிரெடிட் கார்டை கூட எடுக்காமல் வந்து விட்டான் கையில் காசு பணம் இல்லாமல் தடுமாறி போய் விட்டான் சிவராமனுக்கு அதற்கு மேல் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியவில்லை சில மணி நேரத்திற்குபின் கண்கள் இரண்டும், இருட்டிக்கொண்டு மயக்கமாய் வந்தது ...சற்றும் எதிர்பாராமல் ஏதோ ஒரு கடை வாசலில் தன்னையும் மறந்து சரிந்து விழுந்தான். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாம் ஓடோடி வந்து அவனை தூக்கி உட்கார வைத்து அருகில் உள்ள கடையில் ஒரு சோடாவை வாங்கி அவனுடைய முகத்தில் தெளித்து அவன் குடிப்பதற்கு கொஞ்சம் கொடுத்து அவனுடைய மயக்கத்தை தெளித்து உட்கார வைத்தார்கள். கண்விழித்து பார்த்தபோதுதான் சிவராமனுக்கு தெரிந்தது அது ஒரு லாரி சர்வீஸ் கம்பெனி என்று. அந்த கம்பெனியின் முதலாளி முத்துவேல் மிகவும் கரிசனையோடு

"என்ன தம்பி நீயாரு... எந்த ஊரு எங்கிருந்து வர்ற ஏன் இப்படி மயக்கம் போட்டு விழுந்தாய்..."என்று கேட்டபடி அவன் தலையை கோதிவிட்டு முகத்தை எல்லாம் துடைத்து விட்டார் அவருடைய பண்பு மிகுந்த இந்த குணம் சிவராமனுக்கு ரொம்பவும் ஆறுதலாய் இருந்தது.

"ஐயா தப்பா நினைச்சுக்காதீங்க நான் ரொம்பவும் சங்கடப்பட்டு என் வீட்டை விட்டு வெளியே வந்து விட்டேன் வந்து இரண்டு நாட்களாகிறது இதுவரை சாப்பிடவில்லை ஏதாவது வேலை கிடைக்கும் என்று அலைந்து கொண்டிருந்தேன்... அந்த நேரத்தில்தான் இங்கே நான் விழுந்து விட்டேன் உங்களால் முடிந்தால் எனக்கு ஒரு வேலை கொடுங்கள் அந்த வேலை மூன்று வேலை உணவுக்கு போதுமானதாய் இருந்தால் போதும்" என்றுகூறிய சிவராமன் பேசுவதை நிறுத்திவிட்டு மேல்மூச்சு கீழ்மூச்சி வாங்கினான்... அவன் மிகுந்த பசியின் கொடுமையில் இருப்பதை உணர்ந்த முத்துவேல் முதலில் அவனுக்கு சாப்பிடுவதற்கு ஏதேனும் கொண்டு வாருங்கள் என்று தன்னுடைய வேலை ஆட்களை ஏவினார். சிவராமன் இருபது வயதேநிரம்பிய இளைஞன் மிகவும் அசாத்தியமான முக பாவமும்,உடலமைப்பும் கொண்டிருந்தான். கல்லூரியில் பி காம் படிப்பை முடித்துவிட்டி ருந்தான் என்பது அவனுக்கு மேலும் பெருமை. வாங்கி வந்த சாப்பாட்டை சாப்பிட்டு முடித்துவிட்டு மெல்ல ஆற அமர அமர்ந்தான்.

"தம்பி இப்ப சொல்லு நீ யாரு உன்னுடைய விவரம் என்ன எல்லாத்தையும் சொல்லு"என்றபடி அவன் முன் அமர்ந்திருந்தார் முத்துவேல்."ஐயா நான் திருச்சிக்கு பக்கத்துல பெரம்பலூரை சேர்ந்தவன் கல்லூரியில் பீகாம் வரை படித்திருக்கிறேன், என் அம்மாவும் அப்பாவும் கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஒரு விபத்தில் இறந்து போய் விட்டார்கள் இப்போது எனக்கு இருப்பது என் அண்ணனும் அண்ணியும் தான் அவர்கள் என்னை மிகவும் துன்பப்படுத்துகிறார்கள் அந்த துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகவே நான் அந்த வீட்டை விட்டு வெளியே வந்து விட்டேன் தயவுசெய்து எனக்கு ஒரு வேலை கொடுத்து உதவுங்கள் ஐயா"என்றான் சிவராமன்.
"இந்த பாரு தம்பி நம்ம லாரி கம்பெனியில நிறைய ஆளுங்க வேலைக்கு இருக்காங்க நான் வேணும்னா ஒரு விஷயம் செய்கிறேன். உனக்காக நமக்கு தெரிஞ்ச டிரைவர் ஒருத்தர் அவருக்கு கிளீனர் வேணும்னு ரொம்ப நாளா என்கிட்ட கேட்டுக்கிட்டு இருக்கார். அவர் கிட்ட நீ கிளீனர் வேலைக்கு போறியா"என்றார் முத்துவேல்.
"ஐயா ரொம்ப நல்லதுங்க ஐயா... நீங்க என்ன சொன்னாலும் நான் அதை செய்கிறேன் எந்த வேலை கொடுத்தாலும் அந்த வேலையை நான் சிறப்பாக செய்வேன்"என்று நன்றி பெருக்கோடு முத்துவேலை பார்த்தான் சிவராமன்.
இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன டிரைவர் நாகராஜ் ஒரு நாள் கூட சிவராமன் செய்கின்ற வேலைகளை பாராட்டினதே கிடையாது மாறாக சிவராமன் நன்றாக செய்தால் கூட அவன் செய்யத் தெரியாமல் செய்கிறான் என்பதைப் போலவே எரிந்து எழுந்து விடுவான் நாகராஜ் லாரியை எத்தனை சுத்தமாக கழுவி நிறுத்தி இருந்தால் கூட... இங்கே தூசி இருக்கிறது அங்கே தூசி இருக்கிறது என்று சிவராமனை அடிக்காத குறையாக கடிந்து கொண்டே இருப்பான் நாகராஜ். வேலைக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது... ஒரு ஒழுங்காக கிரிஸ் கூட அடிக்க தெரியவில்லை நீ எல்லாம் என்னடா பையன், என்று சிவராமனை ஏளனமாய் பேசுவான். வந்து எத்தனை நாளாச்சு ஒரு நாளாவது வண்டியோட ஸ்டேரிங்கை பிடித்து வண்டியை நகற்றி நிறுத்தி போட தெரியுதா உனக்கு... என்று கேவலமாய் பேசுவான் நாகராஜ். சிவராமனை பொருத்தவரை நாகராஜன் தன்னுடைய அண்ணன் போலவே நினைத்தான் அதனாலேயே நாகராஜன் எதை பேசினாலும் மனதில் வைத்துக் கொள்ளாமல் சிரித்து சிரித்து மீண்டும் மீண்டும் நாகராஜன் முன்வந்து நின்று விடுவான் சிவராமன்.
சிவராமன் வண்டி ஓட்டுகிற அழகையும் அந்த நுட்பமான செயல் திறனையும் கண்ட நாகராஜ் எது ஒன்றும் பேச இயலாதவனாய் விக்கித்துப்போய் அமர்ந்திருந்தான். பிறகு பேச்சு வாக்கில் பெரம்பலூரில் சிவராமனின் குடும்பத்தில் பதினாறு லாரிகள் ஓடுவதாகவும், சிவராமனின் தாய் தந்தைக்கு பிறகு, அவனுடைய அண்ணனும் அண்ணியும் சிவராமனை இரவு பகல் பாராமல் வேலை வாங்கி கொடுமைப்படுத்தியதால் அங்கிருந்து தப்பிப்பதற்காகவே ஊரு விட்டு ஊரு வந்து தன்னிடம் வேலைக்கு சேர்ந்த கதையை தெரிந்து கொண்ட நாகராஜ்,

சிவராமனின் கைகளை இறுகிய பற்றியவாறு தம்பி...என்னை மன்னித்து விடடா... உனக்கு லாரி ஓட்ட தெரியும் லாரி பற்றி எல்லாமும் தெரியும் என்கிற விவரம் எனக்கு தெரியாமல் தான் உன்னிடம் இத்தனை கடுமையாக நடந்து கொண்டேன் இதையெல்லாம் மனதில் வைத்துக் கொள்ளாமல் என் உயிரை காப்பாற்றி இருக்கிறாய் இந்த நிமிடம் கூட என்னுடனேயே இருக்கிறாய் தயவு செய்து என்னை மன்னித்து விடடா தம்பி என்று... கண்களால் வினவினான் நாகராஜ்.

"அண்ணே நீங்க கொஞ்சம் முன் கோபி அவ்வளவுதான். எனக்கு எதுவும் தெரியாது என்கிற கண்ணோட்டத்திலேயே நீங்கள் என்னை பார்த்ததாலேயே நான் செய்கிற எல்லாம் உங்கள் கண்களுக்கு தவறாகவே ... தெரிந்திருக்கிறது அவ்வளவுதான் மற்றபடி உங்கள் மீது எந்த குற்றமும் இல்லை எனக்கும் கூட உங்கள் மீது எந்த வருத்தமும் இல்லை"என்ற சிவராமனை கட்டி அனைத்து முத்தமிட்டான் நாகராஜ்.



**-முத்தையா மோகன்**
கோயம்புத்தூர் 18.

# ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்

அதிகாரம் 3



▪Banumathi Nachiyar




## குறள் 1

கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலா
முற்றுடம்பா லாய வுணர்வு

விளக்கம்

பொருந்திய உடம்பால் ஆன உணர்வு கற்பதாகும்; கேட்பதாகும்; கண்களால் நிரம்பக் காண்பதும் ஆகும்.

உள் உடம்பில் உண்டான உணர்ச்சியானது எல்லாக் காரியங்களுக்கும் அனுகூலமாகும் என்பது கருத்து.

சூட்சமதேகம் ஆகிய தத்துவ தேகமானது ஆன்மாவுக்கு இல்லையாயின் எந்தக் காரியமும் நடவாது என்பர். ஔவையின் குறளும் ஆன்மீகப் பதிவும்..

## குறள் 2

வெள்ளிபொன் மேனிய தொக்கும் வினையு
வுள்ளுடம்பினாய வொளி

விளக்கம்

உள்ளுடம்பு என்பது அழியாத ஒளிமயமான உடலாகும். அது வினைகளுக்கு ஏற்ப, ஒளி பெற்று இந்த ஸ்தூல உடம்பினுள் இருந்து தேஜோமயமாய்த் திகழ்கிறது. இதனாலேயே வெள்ளி பொன்மேனி ஒக்கும் ஒளி என்கிறார் ஔவையார்.

பௌதிக, ஸ்தூல உடல் அழியும் தன்மை உடையது. ஆனால் உள்ளுடம்பு நிலைத்து நிற்கும்.

அது வெள்ளியையும் பொன்னையும் போல விளங்குவதாய் ஒளிமயமாக இருக்கும்.

(தொடரும்).

# சரணாகதி என்றால் என்ன?

இறைவனின் பாதம் ஒன்றே கதி என்று நினைத்து அவனது சரணங்களை மட்டுமே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, இறைவன் நிச்சயம் நற்கதியைத்தான் அருள்வான் என்பதில் சந்தேகமே இல்லை.

அப்படிப்பட்ட அந்த இறைவனின் சரணத்தைக் கெட்டியாகப் பற்ற வேண்டியது நம் கடமை;

ஸ்ரீ ராமருக்கு சரணாகத வத்ஸலன் என்ற ஒரு திருநாமம் உண்டு.

ராமாயணத்தில் பால காண்டம் துவங்கி, யுத்த காண்டம் வரை இந்த சரணாகதி தத்துவத்தை மிகவும் அழகாய் பார்க்கலாம்.

பால காண்டத்தில் தேவர்கள் பகவான் ஸ்ரீமன் நாராயணன் இடத்தில் சரணாகதி செய்கிறார்கள்.

அயோத்யா காண்டத்தில் பரதன் சரணாகதி மற்றும் குகனோடு சக்யம்.

ஆரண்ய காண்டத்தில் ரிஷிகள் ராமச்சந்திர மூர்த்தியிடம் சரணாகதி செய்கிறார்கள்.

கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்ரீவன் சரணாகதி. யுத்த காண்டத்தில் விபீஷணன் சரணாகதி செய்கிறார்.

இதில் விபீஷண சரணாகதிக்குத்தான் தனியொரு பெருமையும், விசேஷமும் இருக்கும்.

சரணாகதி லட்சணம் என்பது பரிபூர்ணமாக இருந்தது இதில்தான்.

சரணாகதிக்கு ஐந்து அங்கங்கள் உள்ளது. விபீஷண சரணாகதியில்தான் அது பூர்த்தியாய் இருந்தது.

அந்த சரணாகதி தத்துவத்தில் சொல்லப்படும் ஐந்து அங்கங்கள் என்னென்ன?

அநுகூல்ய சங்கல்பம் - இறைவனுக்கு அனுகூலமான செயல்களைச் செய்தல். அதாவது எவையெல்லாம் தர்மத்துக்கு உகந்ததோ, அவையெல்லாம் இறைவனுக்கு அனுகூலம்.

ப்ராதிகூல்ய வர்ஜநம் - இறைவனுக்கு விரோதமானவற்றை செய்யாதிருத்தல். தர்மத்துக்கு மாறுபட்ட, முரணான அனைத்தும் இறைவனுக்கு விரோதம்.

மகாவிசுவாஸம் - இறைவன் அவசியம் ரக்ஷிப்பான் என்ற நம்பிக்கை கொள்ளல். காலக்கெடு நிர்ணயம் செய்யாமல், சந்தேகம் கொள்ளாமல், பூர்ணமாயிருத்தல்.

கோப்த்ருத்வ வரணம் - சரணம் அடைந்தேன், ரட்சகனாக இருத்தல் வேண்டும் என பிரார்த்தித்தல்.



கார்ப்பண்யம் - என்னைக்காத்துக் கொள்ள என்னிடம் ஆற்றல் இல்லை எனச் செருக்கு நீங்கிடல்.

சரணாகதியில் இருக்கக்கூடிய இந்த ஐந்து அங்கங்களையும் தாண்டி, விபீஷணரிடம்தான் அங்கீ என்கிற ஆறாவது தன்மையும் இருந்தது

(அகிஞ்சன:) அகிஞ்சன என்றால் விருப்பு, வெறுப்பின்றி இருத்தல் என்பது பொருள்.

ஸ்ரீ நிகமாந்த மகாதேசிகன் சொல்றார்: பிராட்டியும், பகவானும் விட்டாலும், நான் விடமாட்டேன் என அவர்களின் பாத கமலம் சொல்லுமாம்

விபீஷணர் எல்லாத்தையும் விட்டுட்டு பகவான் ஸ்ரீராமனின் பாதமே கதி என அப்படித்தானே வந்தார்.

நான்கு பேரோடு அபயம் எனக் குரல் கொடுத்தபடி விபீஷணர் ராமர் இருக்கும் இடம் நோக்கி வருகிறார்.

பகவான் நினைச்சிருந்தா விபீஷணனை அப்படியே ஏத்துக் கொண்டிருக்கலாம்.

சுக்ரீவனின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்த சமயம் அது. சுக்ரீவன் ராமரிடம், அண்ணனை விட்டுட்டு வந்திருக்கான். வந்திருக்கும் காலம் சரியில்லை. அதனால் விபீஷனனை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்கிறான்.

ஜாம்பவான், பகை குலத்திலிருந்து வந்திருக்கான். ஏத்துக்க வேண்டாம் என்கிறார். யாருமே விபீஷணனை ஏத்துக்கல.

ஆஞ்சனேயரின் கருத்தை ராமர் கேட்டபோது அவரோ, இலங்கை மாநகரிலேயே தர்ம ஸ்வரூபி இவன்தான்.

அபயம் என வந்திருப்பவனை ஏற்றுக் கொள்ளலாம் என்றார்.

உடனே ராமர், அபயம் என வந்தவரை ஏற்றுக் காப்பது என் விரதம்.

சுக்ரீவா, நீ போய் அவனை அழைச்சுண்டு வா என்கிறார்.

தமக்கு இலங்காபதியாய் முடிசூட்டி விடுவோம் என ராமர் சொல்லும்போது, பிரபு, பரதனுக்கு தங்கள் திருவடியைத் தந்தருளியதைப் போல, எனக்கும் தங்கள் திருவடிதான் வேண்டும்; திருமுடி வேண்டாம் என்கிறார் விபீஷணன்.

ராமரின் திருவடியைத் தான் தன் தலையில் சூடிக் கொண்டார் விபீஷணன்.

அதனால்தான், தாம் ஆராதித்த, தம் குலதனமான, ஸ்ரீரங்கநாதரையும் விபீஷணனிடம் அளித்தார் ஸ்ரீராமன். பரிபூர்ண பக்திக்கு, சரணாகதிக்கு பகவான் தன்னையே தருகிறார் என்பது இங்கே சூட்சுமமாக உணர்த்தப்படுகிற விஷயம்.

பெருமாளின் குணங்களில் ஆழ்ந்திருப்பவர்கள் ஆழ்வார்கள்

பகவானின் சரணமே கதி என சரணாகதி செய்த விபீஷணனுக்கும் விபீஷணாழ்வார்னு பேரே கிடைத்தது.

நம்பிக்கையோடு நாமும் இறைவனின் திருவடியை மட்டுமே பற்றுவோம்.

அத்திருவடி நம்மை ஒருக்காலமும் கைவிடாது என உறுதியாக நம்புவோம்.

**M.ராதாகிருஷ்ணன்**
வாணியம்பாடி-635751

தினம் ஒரு தலைவர்கள்

# ஆதி நாகப்பன் வரலாறு

ஆதி நாகப்பன் பிப்ரவரி 3, 1926-ல் தமிழ் நாட்டில் பிறந்தார். 1935-ல் தனது ஒன்பதாவது வயதில் தனது தந்தையுடன் பினாங்குக்கு வந்தார். ஆரம்பக் கல்வியை முடித்தவர் கெடாவில் அமைந்துள்ள புக்கிட் மெர்த்தாஜம் உயர் பள்ளியில் மேற்கல்வியைத் தொடர்ந்தார். ஜப்பானியர்கள் ஆட்சி ஏற்பட்டதால் அவர் கல்வியைத் தொடர்வதில் தடை ஏற்பட்டது.

தனிவாழ்க்கை

ஆதி. நாகப்பன் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அமைத்த ஜான்சிராணி படையின் துணைத்தலைவியான ஜானகியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஈஸ்வர் நாகப்பன் எனும் ஒரே மகன் உண்டு. தொடக்கத்தில் இ.இ.சி. துரைசிங்கம் (CLOUGH DURAISIN-GAM) அவர்களின் சட்ட நிறுவனத்தில் பங்குதாரராக இணைந்தார். பின்னர், சொந்த சட்ட நிறுவனத்தைத் தொடங்கினார். இவருடைய புதல்வர் ஈஸ்வர் நாகப்பன் சிங்கப்பூரில் தனியார் முதலீட்டு நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார்.

இதழியல்

ஆதி.நாகப்பன் 1947-ல் தன்னுடைய 22-ஆவது வயதில் கோலாலம்பூருக்கு வந்து தமிழ்நேசன் நாளிதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். 1948-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மலாயாவிலிருந்து ஏழு பத்திரிகையாளர்கள் பிரித்தானியாவுக்கு ஒரு மாத காலத்திற்குச் சுற்றுப்பயணம் செய்தனர். அதில் ஆதி நாகப்பனும் ஒருவர். ஊடகத்துறையில் பட்டையப் பயிற்சி பெற 1950-ம் ஆண்டு லண்டன் சென்று ஓர் ஆண்டு காலம் பயிற்சி மேற்கொண்டார். 1951-ல் கோலாலம்பூருக்குத் திரும்பி வந்து 1952 வரை தமிழ் நேசனில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலக்கிய வாழ்க்கை

ஜானகி

ஆதி.நாகப்பன் 'தமிழ்ச்சுடர்' நாளிதழில் 1948-ல் பாகிஸ்தான் இந்தியா பிரிவினையை ஒட்டி 'கற்பழிக்கப்பட்ட மனைவி' எனும் சிறுகதை எழுதினார். இக்கதையின் வழி இவர் பரவலாக அறியப்பட்டார். மேலும் 1949-ல் இவர் தமிழ் நேசன் தலையங்கத்தில் 'மலாயாவில் தமிழ் எழுத்தாளர்கள் இல்லை' என்று எழுதியதால் சீண்டப்பட்ட சுப. நாராயணன் 1950-ல் தொடங்கிய முயற்சிதான் கதை வகுப்பு ஆகும்.

அரசியல் வாழ்க்கை

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அமைத்த விடுதலை இயக்கத்தில் ஆதி நாகப்பனும் பங்கு பெற்று இருந்தார். இந்தியச் சுதந்திரக் கழகத்தின் பிரசாரப் பகுதியில் இவர் நியமனம் பெற்றார். 1946-ல் ம.இ.கா கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் இருந்தே ஆதி நாகப்பன் அக்கட்சியில் தொடர்பில் இருந்தார்.

பொதுவாழ்க்கை

1949-ல் தன்னுடைய 24-வது வயதில் சிலாங்கூர் மாநிலத்தின் ம.இ.கா கட்சியின் தலைவர் ஆனார் ஆதி நாகப்பன். தொடர்ந்து 1963-ல் மலேசிய இந்திய காங்கிரஸ்சின் (ம.இ.கா) மேலவை உறுப்பினரானார். 1973-ல் ம.இ.காவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1965-ல் அமைக்கப்பட்ட மலேசியாவில் உள்ளூராட்சி நிறுவனங்கள் பற்றிய அரச ஆய்வுக் குழுவுக்கு அப்போதைய பிரதமர் துன் அப்துல் ரசாக் ஆதி நாகப்பனைத் தலைவராக்கினார். 1974-ல் ஆதி நாகப்பன் சட்டத் துறைக்கான துணையமைச்சராக நியமிக்கப்பட்டார். 1976-ல் பிரதமர் துறையில் பிரதமர் துறையிலேயே டத்தோ ஆதி நாகப்பனை முழு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இறப்பு

ஆதி நாகப்பன் முழு அமைச்சராக நியமிக்கப்பட்டதையடுத்து ம.இ.கா தலைமையில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது மே 9, 1976-ல் தனது ஐம்பதாவது வயதில், மாரடைப்பில் இறந்தார்.

விருது, பரிசு

1975-ல் 'டான் ஸ்ரீ' விருதினை மலேசிய அரசு வழங்கியது டான் ஸ்ரீ ஆதி நாகப்பன் பெயரால் சிறந்த எழுத்தாளருக்கு மலேசிய எழுத்தாளர் சங்கம் ஆண்டு தோறும் விருதுகள் வழங்கி வருகிறது.



# தனுஷ் ஒரு நடிப்பு பல்கலைக்கழகம்



'கர' படத்தின் மூலம் முதன்முறையாக கிராமத்து பெண்ணாக நடிக்கிறேன்" என்று கூறினார்.

மலையாள திரை உலகில் அறிமுகமாகி பிரதீப் ரங்கநாதனுடன் டியூட், விஜய்யுடன் ஜனநாயகன், சூர்யாவுடன் விஸ்வநாத் அண்ட் சன்ஸ், விஷ்ணு விஷாலுடன் இரண்டு வானம் உள்பட பல படங்களில் நடித்து அனைத்து தமிழ் சினிமா ரசிகர்களையும் கவர்ந்து வருபவர் மமிதா பைஜு.

தனுசுடன் அவர் நடித்துள்ள 'கர' படம் வருகிற 30-ந்தேதி திரைக்கு வருகிறது. இது குறித்து மமிதா பைஜு அளித்த பேட்டியில், "தனுஷிடமிருந்து நிறைய கற்றுக்கொண்டேன். அவர் ஒரு நடிப்பு பல்கலைக்கழகம். துணை நடிகர்களுக்கு அவர் தரும் சவுரியங்களை எவராலும் தர முடியாது. 'கர' படத்தின் மூலம் முதன்முறையாக கிராமத்து பெண்ணாக நடிக்கிறேன்" என்று கூறினார்.

நடிகை பிரியங்கா மோகன் தமிழில் பிஸியான நடிகைகளில் ஒருவராக இருக்கிறார். 31 வயதாகும் அவர் தமிழ், தெலுங்கு என பல மொழிகளில் நடித்து வருகிறார். சமீபத்தில் அவர் நடித்து இருந்த Made in Korea படம் ஓடிடியில் நேரடியாக வெளியாகி இருந்தது. தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த பெண், கொரியா செல்ல வேண்டும் என்கிற ஆசையில் இருக்கிறார். அதை அவர் எப்படி நிறைவேற்றினார் என்பது தான் அந்த படத்தின் கதையாக இருந்தது.

தற்போது பிரியங்கா மோகன் ட்ரெண்டி உடையில் எடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.



# பழம்பெரும் நடிகை 'மதுபாலா' சுயசரிதையில் நடிக்கும் 'துரந்தர்' புகழ் சாரா அர்ஜுன்



இந்நிலையில் பாலிவுட்டின் பிரமாண்ட இயக்குனர் சஞ்சய் லீலா பன்சாலி தயாரிக்கும் படத்தில், சாரா பழம்பெரும் நடிகை மதுபாலாவின் கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டார்லிங்ஸ், பதி பத்னி அவுர் வோ ஆகிய படங்களை இயக்கிய ஜஸ்மீத் கே. ரீன் இயக்க உள்ள இப்படம் தற்போது ப்ரீ ப்ரொடக்ஷனில் உள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் திரையரங்குகளில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1950களில் இந்தியாவில் அதிக சம்பளம் வாங்கிய நடிகைகளில் ஒருவராக மதுபாலா திகழ்ந்தார். 70க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

இப்படம் நடிகை மதுபாலாவின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டதாக இருக்கும் என்று தெரிகிறது.

மதுபாலாவின் கதாபாத்திரத்தில் சாரா நடிக்கும்பட்சத்தில் அது அவரது திரைப்பயணத்தில் ஒரு திருப்புமுனையாக அமையும்.

மதுபாலாவின் உடை அலங்காரம், முகபாவனைகள், உடல்மொழி மற்றும் பேச்சுவழக்கு ஆகியவற்றை அப்படியே பிரதிபலிக்கும் வகையில் அவர் பயிற்சி பெற்று வருவதாக, நடிகைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஜனநாயகன் Link-கை பகிர்பவர்கள் மீது கடும் நடவடிக்கை- தயாரிப்பு நிறுவனம் எச்சரிக்கை



ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'ஜன நாயகன்'. தணிக்கை வாரியத்தின் சான்றிதழ் தொடர்பான சிக்கல்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் காரணமாக தற்போது வரை இப்படம் வெளியாகவில்லை.

இதனிடையே, 'ஜன நாயகன்' படத்தின் 5 நிமிட காட்சிகள் இணையத்தில் வெளியாகி இருந்த நிலையில் தற்போது 3 மணி நேர முழு படமும் வெளியானதால் படக்குழுவினரை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. படம் இணையத்தில் வெளியானதை தொடர்பாக பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

படம் இணையத்தில் வெளியானது தொடர்பாக இயக்குநர் ஹெச்.வினோத் கூறுகையில், 'ஜன நாயகன்' படத்தை யாரும் பகிர வேண்டாம். ஒவ்வொரு காட்சிகளும் பலரின் கனவை சுமந்து வருகிறது. அனைத்து தரப்பினரும் படக்குழுவிற்கு ஆதரவளிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

இதனை தொடர்ந்து, 'ஜன நாயகன்' படத்தின் கசிந்த காட்சிகள் மற்றும் படத்தின் லிங்க்கை பகிர்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பட தயாரிப்பு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் பலரின் உழைப்பு, முதலீ என்பதை கடந்து இந்த செயல் நேர்மையின்மையின் வெளிபாடு. அதை ஒருபோதும் மக்கள் ஆதரிக்கக்கூடாது என கேட்டுக்கொண்டுள்ளது.

# LIK திரை விமர்சனம்: ஏஐ ஆப், காதல் மற்றும் பசுமை உலகம் மோதல்



பொது மக்களுக்காக lik என்ற புதிய ஆப் (App) ஒன்றை தொடங்கி நடத்தி வருகிறார் எஸ்.ஜே.சூர்யா. இந்த ஆப்-க்கு ஏஐ வாய்ஸ் கொடுக்கிறார் பிரதீப். இந்த ஆப்பை பலரும் பயன்படுத்தி வருகிறார்கள். இதற்கு எதிராக போன் உபயோகம் செய்யாமல், போனால் தவறு செய்தவர்களை தண்டனை தரும் விதமாக பசுமை உலகம் நடத்தி வருகிறார் பிரதீப்பின் தந்தை சீமான்.

பசுமை உலகத்தில் இருப்பவர்கள் போன் உபயோகம் செய்ய மாட்டார்கள். அந்த உலகத்தை சேர்ந்த பிரதீப் போன் உபயோகம் செய்யாமல் இருக்கிறார். ஒருநாள் வழியில் கீர்த்தி செட்டியை பார்க்கும் பிரதீப் காதல் வலையில் விழுகிறார்.

அதன்பிறகு போன் உபயோகம் செய்ய ஆரம்பிக்கிறார். அந்த போனில் lik ஆப் மூலம் கீர்த்தி செட்டியிடம் பேச ஆரம்பிக்கிறார். ஒரு கட்டத்தில் அந்த ஆப் மூலமாக இவர்கள் காதல் பிரிகிறது.

இறுதியில் பிரதீப், கீர்த்தி செட்டி இருவரும் காதலில் ஒன்று சேர்ந்தார்களா? அந்த lik ஆப் பொய் என்று பிரதீப் நிரூபித்தரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

**நடிகர்கள்**

படத்தில் நாயகனாக நடித்து இருக்கும் பிரதீப், தனக்கே உரிய ஸ்டைலில் நடித்து அசத்தி இருக்கிறார். காதல், நடனம், நடிப்பு என அனைத்திலும் ஸ்கோர் செய்து இருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் கீர்த்தி செட்டி, அழகாக வந்து அளவான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். தற்போது சமூக வலைதளங்களில் பெண்கள் இருக்கும் நிலையை அப்படியே கண்முன் நிறுத்தி இருக்கிறார்.

வில்லனாக நடித்திருக்கும் எஸ். ஜே.சூர்யாவின் நடிப்பு படத்திற்கு பெரிய பலம். பிரதீப் உடன் போட்டி போடுவது, lik ஆப் பாதுகாக்க எந்த இடத்திற்கும் செல்வது என நடிப்பில் பளிச்சிடுகிறார். தந்தையாக மனதில் பதிந்து இருக்கிறார் சீமான். யோகி பாபு காமெடி பெரியதாக ஈடுபடவில்லை.

**இயக்கம்**

மனிதர்களுக்கும் ஆப்-கும் இடையே நடக்கும் உணர்வு, போராட்டத்தை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் விக்னேஷ் சிவன். சூப்பர் ஃபேண்டஸி படமாக கொடுத்து இருக்கிறார்.

கிராபிக்ஸ் காட்சிகள் படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது.

கிளைமாக்ஸ் சண்டை காட்சிகள், வசனம் அனைத்தும் ரசிக்க வைக்கிறது. இளைஞர்கள் ரசிக்கும் படி இயக்கி இருக்கிறார். ஆனால், ஆரம்பம் முதல் இறுதி வரை சுவாரசியமான காட்சிகள் அதிகம் இல்லாதது வருத்தம். காமெடி காட்சிகள் ஒர்க்கவுட் ஆகவில்லை.

**இசை**

அனிருத் இசையில் பாடல்கள் அனைத்தும் சூப்பர் ஹிட். பின்னணி இசையில் மாஸ் காண்பித்து இருக்கிறார்.

**ஒளிப்பதிவு**

ரவி வர்மன் ஒளிப்பதிவில் காட்சிகள் அனைத்தும் கலர்புல்.

# அழகை பராமரிக்க நடிகைகளின் அற்புத பானங்கள்



திரை உலகில் நடிகைகள் தங்கள் அழகையும் உடலையும் பராமரிப்பதில் அதிக ஈடுபாடு காட்டி வருகின்றனர். முறையான உடற்பயிற்சியும் உணவுக் கட்டுப்பாடுகளும் நடிகைகளை இளமையாக வைத்துள்ளது. பாலிவுட் நடிகைகள் தங்களது அழகை பராமரிக்க காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடிக்கும் பிரத்யேக பானங்கள் குறித்து தகவல்கள் வெளியாகி உள்ளது.

**கீர்த்தி சுரேஷ்:** அதிகாலையில் கிரீன் ஜூஸ் குடிக்கிறார். வெந்நீரில் வேக வைத்த கீரை இலைகளுடன் செலரி, எலுமிச்சை, வெள்ளரிக்காய், புதினா, இஞ்சி மற்றும் பூண்டு சேர்த்து அரைத்து இந்த பானத்தை கீர்த்தி சுரேஷ் அருந்துகிறார்.

**தீபிகா படுகோனே:** தீபிகா தனது கூந்தலை அடர்த்தியாகவும் சருமத்தை பொலிவாகவும் வைத்திருக்க புதினா, மஞ்சள், வேப்பிலைகள், கறிவேப்பிலை, பீட்ரூட் ஆகியவற்றை கலந்த சாறு தயாரித்து வெறும் வயிற்றில் குடிக்கிறார்.

**கத்ரீனா கைப்:** காலையில் எழுந்ததும் வெந்நீர், சில நேரங்களில் அதில் எலுமிச்சை சாறு, அல்லது இஞ்சி சாறு சேர்ப்பார். அதற்கு பிறகுதான் உடற்பயிற்சிக்கு செல்வார்.

**மலைக்கா அரோரா:** வெறும் வயிற்றில் சீரகம் செலரி மற்றும் பெருஞ்சீரகம் கலந்த நீரை அருந்துகிறார். இந்த பொருட்களை வறுத்த பின் இரவு முழுவதும் அதை தண்ணீரில் ஊற வைத்து காலையில் லேசாக சூடாக்கி எலுமிச்சை கலந்து குடிக்கிறார்.

**ஷில்பாஷெட்டி:** நெய், மஞ்சள், மிளகு போன்றவற்றை தண்ணீரில் கலந்து குடிக்கிறார்.

**ஆலியாபட்:** அதிகாலையில் எலுமிச்சையுடன் கூடிய வெந்நீர் குடிப்பதாக கூறியுள்ளார்.



சின்னத்திரை மற்றும் வெள்ளித்திரை இரண்டிலும் நடித்து பிரபலமானவர் நடிகை கேப்ரியல்லா. இவருடைய நடனத்திற்கு தனி ரசிகர் பட்டாளம் உள்ளது. பிக் பாஸ் 4ல் போட்டியாளராக கலந்துகொண்ட நடிகை கேப்ரியல்லா 102 நாட்கள் வீட்டில் இருந்தார். இதன்பின் ஈரமான ரோஜாவே 2 சீரியலில் கதாநாயகியாக நடித்து நல்ல வரவேற்பை பெற்றார். மேலும் தற்போது சன் டிவியில் ஒளிபரப்பாகி வரும் மருமகள் சீரியலில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் நடிகை கேப்ரியல்லா தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் அவ்வப்போது பதிவு செய்வார்.

# INVITATION

SSpS
Missionary Sisters
Servants of the Holy Spirit

"Celebrating God's Faithfulness"

Dear.........................................................................

With immense joy and profound gratitude to God, we the Missionary Sisters Servants of the Holy Spirit of Divine Word Province, India East cordially invite you to the Golden and Silver Jubilee celebration of our sisters.


Sr. Regina Dung Dung SSpS


Sr. Shanti PC SSpS


Sr. Kanti Kullu SSpS


Sr. Sophia A Mary SSpS


Sr. I Amirtha Vimala SSpS


Sr. Anima Kujur SSpS

*Solemnized by:*

Main Celebrant- **Most Rev. Niranjan Sual Singh**
*(Bishop of Sambalpur Diocese)*

Concelebrants- **Rev. Fr. Anuranjan Bilung SVD**
*(Provincial Superior, SVD-INE Province)*
**Rev. Fr. Charles Irudayam**
**Rev. Fr. Antony Swamy SVD**
**Rev. Fr. Bijay Lama OCD**

**Date : 11 April 2026**
**Time : 10.00 am**
**Venue : Holy Spirit Convent**
**Jharsuguda, Odisha**

*We look forward to your esteemed presence!*

Sr. Bindhu Mathew SSpS
Provincial Leader – INE

Sr. Shanti Minj SSpS
Community Leader






## தேடுகிறான் மனிதன்..

சாப்பிட்டவன் பாயைத்
தேடுகிறான்.. சாப்பிடாதவன்
இலையைத் தேடுகிறான்.!

இருப்பவன் இன்னும்
தேடுகிறான்.. இல்லாதவன்
எங்கோ.. தேடுகிறான்!


படித்தவன் வேலை
தேடுகிறான்.. படிக்காதவன்
வயிற்றுக்குத் தேடுகிறான்!

நடிப்பவன் புகழைத்
தேடுகிறான்.. இரசிப்பவன்
கலையைத் தேடுகிறான்!

அங்கே தேடுகிறான்..
இங்கே தேடுகிறான்
அவனவன் இங்கே எதனைத்
தேடுகிறான்!

தேடினால் கண்டடைவீர்
தேடுங்கள் கிடைக்குமே
தேடுதல் ஞானம் தரும்..
தேடுவதே நம் வாழ்க்கை.!

**வே.கல்யாண்குமார்.**



## நசையுறு மனம் கேட்பின்....

அன்பின்றி மேதினியில்
உயிரொன்று பிழைக்குமா?
ஆசையின்றி அவனியில்
இசைய இயலுமா?
ஈரமின்றி மனதில்
கருணை கனியுமா?
விழைவின்றி வாழ்தல்
எங்கனம்?
பிழையின்றி வாழ
நீர் வார்க்கும் சுனை
அன்பெனும்
கேணிஅன்றோ?
அற்புத அமுதம் அதன்
நசை வழி ஈரம் கசிந்து
கருணை கனி கையில்
கனியநசையுறு மனம்
இச்சையுடன்
கேட்பின்;பிழை
ஏதும் உண்டோ;
சொல்வாய்; நீயும்
பராசக்தி தாயே!

நசையுறு மனம் கேட்டேன்;
அது,பிசகு என்று
பின்பே உணர்ந்தேன்.
பற்றின்றி பாரில்
பிழைக்க முடியுமா
மனதில் ஈரமின்றி
தரணியில் இருக்கலாகுமா
நம்பிக்கை இன்றி
நடத்த முடியுமா
வாழ்வினை?



**சசிகலா விஸ்வநாதன்**




## வாக்குறுதி

பசித்தவருக்கு அமு தூட்டும்
காமதேனு போல் எனக்கு
எந்த நேரமும் காதலூட்டும்
தேவதை நீ! தேர்தல் நேர
வாக்குறுதி போலல்லாமல்
எனக்காக நீ
சொன்னதை மட்டுமல்லாமல்
சொல்லாததையும் செய்யும்
இல்லத்திற்குள் நுழைந்த
காமதேனு நீ! பார்த்துக்
கொண்டேயிருக்கலாம்
உன் அழகை! பேசிக்
கொண்டேயிருக்கலாம்
உன்னுடன்! ரசித்துக்
கொண்டேயிருக்கலாம்
நீ பாடுவதை!
கா த லி த் து க்
கொ ண் டே யி ரு க் க லா ம்
உன்னை!இப்படியெல்லாம்
எழுதிக்கொண்டேயிருக்கலாம்
உன்னைப் பற்றி!
எனக்கான நேரம் இனி மேல்
ஒவ்வொரு நொடியும்
உன்னுடன் உனக்காக
மட்டுமே!

## வேட்பாளர்

நான் வாக்காளிக்க விரும்பும்
ஒரே வேட்பாளர்
நீ மட்டும் தான் என்
அழகிய பேரன்பே!
நீ சொல்வதை மட்டுமல்ல
சொல்லாததையும் கூட
எனக்காக நிறைவேற்றும்
கா த ல் த லை வி நீ!
வாழ்நாள் முழுவதும் நான்
வாக்களிக்க விரும்பும்
வேட்பாளர் உன்னைத்தவிர
வேறு எவரேனும் உளரோ
என்ன?!

உன்னைப் போல்
தங்க மங்கைகள்
எங்குமிருப்பதால்தான்
கார்மேகங்கள் புவனத்தைத்
தவறாமல் ஈரமாக்குகின்றன!
இன்னா நாற்பதை
ஒரு சில பெண்கள்
கடைபிடித்தாலும் இனியவை
நாற்பதை வாழ்க்கை
முழுவதும் பரவச் செய்வது
உன்னைப்போன்ற
தேவதைகள் தான்!
நீ என்னுடன் இருக்கும்
வரையில் நம் கா த லா ட் சி
மிக அழகாக(வே) நகரும்!

## சின்னம்

அத்தை மகள் ரத்தினமாக
இருந்தாலும்(கூட)
மு த் த த் தி ற் கு
அனுமதிக்காத குலேபகாவலி
ஸ்டைல் ராஜகுமாரி நீ!
எத்தனையோ மாதர்களைச்
சந்தித்திருந்தாலும் என்
மதுவான மாது நான்
உன்னைப்பார்க்கும் போது
மட்டுமே கவிதை நழுவி நம்
காதலில் விழுகிறது!
நம் கா த லு க் கெ ன் று
ஒரு சின்னத்தை நியமிக்க
விரும்பினால் எனக்காக
உன் அன்பான அம்பு
விழிகளையே சின்னமாக
நியமித்து விடு! உன்னைப்
பற்றி எழுதினால் மட்டுமே
என் கவிதைகள் ரசிக்கத்தக்க
வகையில் அழகாக
இருக்கிறது!
என் வேண்டுதல்களை
மட்டுமே நிறைவேற்றப் பிறந்த
கா த ல் தே வி நீ!

எனக்கு உன்னிடமிருந்து
வரம் வேண்டாம்!
வரமாக நீயே வா
என் பேரன்பே!

## கொடி

காதலாக இருந்தாலும்
கவிதையாக இருந்தாலும்
மிகச் சரியாகக்
கொள்கையைக்கடைப்பிடிக்கும்
மங்கையர் திலகம் நீ!
நம் கட்சிக் கொடி
பறப்பதற்கென்றே
அதைக் காதலா(க)ல் நீயே
நெய்திருக்கிறாய்!
நீ ஆசையாக அசைப்பதால்
தான் நம் காதல் கொடி
நாள் முழுவதும்
பறந்து கொண்டேயிருக்கிறது!
கற்பகத் தரு போல
நம் காதல் கொடி
நாம் நினைத்ததை யெல்லாம்
நிறைவேற்றி நம் காதலை
வசந்தமாக்குகிறது!
அழகிய கனவுகளையும்
ஆனந்தக் கற்பனைகளையும்
கொண்டே எப்பொழுதும்
வெற்றி நடை போடுகிறது
இந்தக் காதல்! இந்த அன்பில்
நாம் இருவர் மட்டுமே
பயணியர்!

## தேர்தல்

குன்னக்குடி
வைத்தியநாதனின்
வயலினிசை போல் உன்
அழகான முத்தங்களை
என் அதரங்களில்
இசைப்பவள் நீ!
நீயோ அல்லது நானோ
தேர்தலில் போட்டியிட்டால்
நமக்கு இதயம் சின்னத்தைத்
தானே கேட்போம்!
நம் இருவருக்கும்
தனித்தனியாக இதயங்கள்
இருந்தாலும் நம் காதல் ஒன்று
தானே! உன்னை நினைக்கும்
போது மட்டும் என்
இதயத்திலிருந்து வெளியே
மழையாகப் பொழிகின்ற
இந்த அழகிய அழகான
உணர்வுகளும்
உணர்ச்சிகளும்!
எனக்கு ஓர் அனுமதி
வழங்கி விடு என் இனிய
உயிர்க்காதல் அன்பே!
மாதா பிதா குருவிற்குப் பிறகு
நான் எப்பொழுது(ம்)மே
உன்னை வணங்க வேண்டும்!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## ஓட்டுப் போடு..!

வந்து போடு ஓட்டு.!
வாங்காதே நீ நோட்டு.!
தேசபக்தியைக் காட்டு.!
தேர்தலில் நிலைநாட்டு!

மாறி மாறி கூட்டு.!
கை மாறும் நோட்டு!
மாற்றும் வழியைக் காட்டு!
மறவாதே போடு ஓட்டு!

காந்தி படத்தைப் போட்டு
காகிதத்தில் நோட்டு!
கறுப்புப் பணத்தை போட்டு..
போடவந்தார்ப் பூட்டு!

தேசம் உயிர் காட்டு.!
தேடிவந்து போட்டு..
தேர்தலிலே ஓட்டு..
தவறாமலேப் போட்டு!

ஏழை பாடும் பாட்டு..
இறைவனுக்குக் கேட்டு..
வாழ்வுதரும் ஓட்டு..
வாங்காதே நீ நோட்டு!

எல்லோருக்கும் ஓட்டு..
இது உரிமைப் பாட்டு!
நல்லவருக்கே ஓட்டு..
நாளை போடு ஓட்டு!

காக்கை முட்டையுடன்
குயிலின் முட்டைகளும்
ஒன்றாய் கலக்கயிலே
குஞ்சகள் பிறந்ததம்மா.

காக்கைக் குஞ்சுகளும்
குயிலின் குஞ்சுகளும்
ஒன்று போலிருக்க..
ஒன்றாய் வளர்ந்ததம்மா

அன்றொருநாள் காலை
அன்புடன் தாய் முன்னே
குயிலின் குஞ்களோ..
கானம் இசைத்ததம்மா.

குயிலின் குரல்கேட்டு..
காக்கைத்தாய் மகிழ்ந்து
யாக்கை ஒருநிறம்தான்
குரலோ வேறுவேறு..

இரண்டும்ஓர் உயிர்தான்
என்றே உணர்ந்ததம்மா..
குயிலும் நன்றி சொல்லி
பாடிப் பறந்ததம்மா..

உலகம் ஒரு கூடு என்ற
உண்மை இதில் உண்டு
உருவம் நிறம் கடந்து
உயிர்கள் ஒன்று என்றே

பறவை இனம் உரைக்க
செவியில் கேட்டதம்மா..
மனிதர் பிறந்த கூடு..
நம்நாடு உணர்கயிலே..

கூடுகள் வாழ்த்துதம்மா



## கூடு


காக்கைச் சிறகினிலே
ஒரு குயிலும் கூடுகட்டி
தேக்கு மரக் கிளையில்
முட்டைகள் இட்டதம்மா.



வீடுகள் கூடாகும்.பிறந்த
நாடிது நமக்கு கூடாகும்
குயில் இதைப்
பாடுதம்மா.

**வே.கல்யாண்குமார்**





உன் புன்னகையில்
புதைந்து போக போகும்
காளையர்கள் எத்தனையோ ?
உன் ஜிமிக்கி எத்தனை பேர்
மனக்காட்டில் கும்கியாய்
கலவரம் செய்கிறதோ ?
ஸ்ட்ராபெரியெல்லாம்
உன் உதட்டுச் சாயமாய்
மாறாததால் மரத்திலிருந்து
பூமி வர மறுக்கும்
கதையெல்லாம் உனக்கு
தெரியுமா ? ஒளிரும் பகல்
நிலவுக்கு முன்னால்
மின் விளக்கெல்லாம்
அமாவாசை இருளாய் தான்
தெரிகிறது நீயிருக்கும்
திசையெல்லாம்
தென்றல் வந்து அடிக்கடி
காதல் கொண்டு
தான் செல்கிறது !!நீ
முத்தமிட்ட தங்கச்செயின்
உன் நெற்றி தொட்ட
ஸ்டிக்கர் பொட்டெல்லாம்
ஹைக்கூ கவிதையென
காதல் கொள்ளும்
ரோமியோக்களுக்கு
மட்டுமே தெரியும் முடிவாய்
சொல்கிறேன் முகநூலில்
சுயமி புகைப்படமிட்டு
வாலிப நெஞ்சங்களை
புண்ணாக்காதே!!!
நீ தேவதை தான்
இளம் நெஞ்சங்களை
வதைக்கின்ற தேவதைதான் !!
பச்ச மண்ணின்
நெஞ்சிலெல்லாம்
நஞ்சை விதைத்தது
ஏனடி ?
ஒரு பார்வை தானடி
வீசி சென்றாய் ஓயாமல்
உயிர்நாடியெல்லாம்
உன் நினைவு தானடி
ஊசலாடுகிறது !
இரவு கனவு தரும்
இனிமை தரும் இதுவரை
நினைத்திருந்தேன்
உன்னை கண்ட பின்பு வந்த
இரவெல்லாம் தனிமை
கொடுமை தானடி !
எறும்பு ஊற கல்லும்
தேயுமாம்–வெள்ளை
கரும்பே உன் நினைவை
வைத்தே –எனை
உருக வைத்தாய் ஏனடி ?
ஓரப் பார்வைக்கே
சாரப் பாம்பாய் துடிக்க
வைக்கிறாய் ஏனடி ?
ஒன்றே ஒன்று கடைசியாய்
சொல்லி கொள்கிறேன்
உடல் –உயிர் –மயிர் ஏன்
உயிரில்லா நகத்தில் கூட
நீயே என்னுள்
நிறைந்திருக்கிறாய்
துடிக்கும் இதயத்துக்கு
தெரியாது –என்னை
துடிக்க வைப்பது
நீ தான் என்று !!

தரிசு நிலமாய் கிடக்கும்
என் கன்னங்களை
இச்,இச்சென ஒலி எழுப்பும்
எச்சில் நிறைந்த
உன் முத்தத்தால்
நச்,நச்சென நிரப்படி!

உன் காதல்
எப்படிப் பட்டதென
கேள்வி கேட்கிறாய்?
மண்ணில் புதைந்து
கரையான் அரித்து
உடல் சிதைந்து போனாலும்,
தீயில் உருகிசாம்பலாகி
அழிந்து போனாலும்
ஆன்மாவாய்உங்கள்
பாஷையில் சொல்லப்
போனால்பாவியானாலும்
ஆவியாகி கூட
உன்னை காதலித்து
கொண்டே இருப்பேன்!



**லி.நௌஷாத் கான்**

# நூல் விமர்சனம்

முத்தையா மோகனின்
நூல் சுவை...
கட்டங் காபி.
சிறுகதை தொகுப்பு.
ஆசிரியர்: சம்சுதீன் ஹீரா
வெளியீடு: பாரதிபுத்தகாலயம்
விலை: 120.




தோழர் சம்சுதீன் ஹீரா அவர்களுடைய சிறுகதை தொகுப்பு தான் "கட்டங்காப்பி" ஒற்றைப்பார்வையில் துவங்குகின்ற சிறுகதைகள், பற்ற வைத்த தீ போல் அங்கே இங்கே என்று பரவி விரவி... நம் எண்ணத்திற்கு எட்டாத இடங்களிலெல்லாம் தழுவி... மல மலவென்று வானலாவி எரியத் தொடங்குகிறது. இந்த நெருப்பு. ஏன் இப்படி பற்றி எரிகிறது என்று எண்ணுவதற்குள்ளாகவே, அந்த நெருப்பு மதம் என்கிற மாயையில் தன்னையும் மறந்து எரிந்து கொண்டிருக்கிறது என்பதை நமக்கு பட்டவர்த்தனமாய் வெளிச்சம் போட்டு காட்டுகிறார் தோழர் சம்சுதீன்.

காட்டாற்று வெள்ளம் போல் வருகின்ற மதப்பேய்கள் யாரை அடிக்கிறோம், எதற்காக நொறுக்குகிறோம், என்கிற கேட்பாரற்று... போகிற போக்கில் துவம்சம் செய்து விடுகிறது மனிதர்களின் அன்றாட வாழ்வியலை... சீரழிந்து போன தத்தமது வாழ்க்கைச் சூழலை சீர்படுத்தி நேர்படுத்த எத்தனை காலங்களை மனிதன் கையில் எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது என்கிற வேதனை மிகுந்த சிறுகதைகள் நம்மை கவலையடைய செய்கின்றன.

"ஆன்மாவிற்கு அழிவில்லை என்கிறது ஆன்மீகம். ஒவ்வொன்றும் வேறொன்றாக மாறி இங்கேயே உலவுகிறது என ஆய்ந்து சொல்கிறது அறிவியல். தீதும் நன்றும் பிறர் தர வாரா என்னும் சங்க பாடலில் ஒலிக்கும் பட்டறிவின் நுட்பத்தைப்பற்றிக் கொண்டு பயணிக்கும் கதைகள் இந்த தொகுப்பின் மைல்கற்கள்.

இதில் வருகிற சில இஸ்லாமிய கதாபாத்திரங்கள் தனித்துவமானவை. பொதுவான கலை இலக்கிய உலகம் காட்டுவது போல இதன் பாத்திரங்கள் நீண்ட தாடியோடு, தொப்பி அணிந்து கொண்டு, ஐவேளை தொழுபவர்கள் அல்லர். அவர்கள் அடையாளங்களை சுமக்காதவர்களாக இருக்கிறார்கள். வீட்டில் நாய் வளர்க்கிறார்கள். கடவுள் மறுப்பைப் பேசுகிறார்கள். சுவரில் பெரியார் படம் மாட்டப்பட்டுள்ளது. இப்படியான வாழ்வியலிலும் சேர்ந்ததுதானே சமூகம்? அதையும் பேசத்தானே வேண்டும்?

மனிதப் பண்புகளை மையமாக வைத்து புனையப்பட்ட கதைகள் வாழ்வை எதிர்கொண்டு நம்பிக்கையுடனும் நடமாடும் பெண்களின் காலடிச்சத்தம் இன்னும் காதில் ஒலிக்கிறது!!" என்று இந்நூலில் அணிந்துரையாக அலங்கரித்திருக்கிறார் சூழலியலாளர் அன்பிற்குரிய, கோவை சதாசிவம் அவர்கள்.

கட்டங்காப்பி சிறுகதையில் ஒரு இஸ்லாமியர்கள் வீட்டில் நாயையும், பூனையையும் கூட வளர்க்கிறார்கள். திருமண வீடுகளில் காலங்காலமாய் கடைபிடிக்கப்படும் சம்பிரதாய சடங்குகளை உடைக்கிறார்கள். கைம்பெண்களின் கையறு நிலைகளை அப்பட்டமாய் உடைத் தெறிகிறது. பல்வேறு இடங்களில் இந்த சிறுகதை. எல்லா சௌரியங்களையும் ஏற்படுத்திக் கொடுத்து விட்டால் போதுமா...? முதியோர்களுக்கென்று ஒரு எண்ணமும் சிந்தனையும் இருக்கிறது அது தங்களுடைய குழந்தைகள் தங்களுடன் அளவலாவி பேச வேண்டும் என்கிற நோக்கம் தான் அந்த நோக்கத்தை விட்டு தாய்க்கோ தந்தைக்கோ எல்லாவற்றையும் நாம் சிறப்பாகத்தான் செய்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருந்தால் அது எத்தனை பெரிய மூடத்தனம் என்று இந்த சிறுகதைத்தொகுப்பு,வலியுறுத்துகிறது. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பார்கள். அப்படி நம் குழந்தைகள் நமக்கு எப்படி மிக முக்கியமாக கருதப்படுகிறார்களோ அப்படித்தான் நாமும் நம் பெற்றோர்களுக்கு இருப்போம் என்கிற சிந்தனையை நாம் தொலைத்து விடுகிறோம்... என்பதை எத்தனை எத்தனை எதார்த்தமாய் நம் கண் முன்னே விரிய வைக்கிறது இந்த "கட்டங்காப்பி".

வறுமை என்கிற கோரப்பிடி, குழந்தைகளையும் கொன்று தானும், மரணித்து விடலாம் என்கிற உச்ச நிலைக்கு ஒரு குடும்பத் தலைவியை தள்ளும் என்று சொன்னால் அந்த கதைகள் பல்வேறு குடும்பங்களில் நடந்த கதையாக தான் இருக்கும். அப்படித்தான் இந்த கதையிலும் கூட ஒரு வறுமையின் கோரப்பிடி தன்னையும் மாய்த்துக்கொண்டு தன் குழந்தைகளையும் கொல்வதற்கு துணிந்து விடுகிறது. அந்த கதை நிழலோட்டமாய் நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு தன் கண்முன்னே விரியும் போது அந்த வறுமையின் பிடியின் வலி நெஞ்சை பிசையத்தானே செய்யும்.

வயற்ற ஜீவன்கள் மனிதர்கள் மீது காட்டுகின்ற வாஞ்சையான உறவுகளென்று... நூலெங்கும் மிக நேர்த்தியை பின்னப்பட்டு இருக்கிறது மனித நேசங்களின் அலை. எப்போதாவது எங்காவது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதநேயமற்ற சாதி மத போக்குகளை எல்லா தலங்களிலும் சாடியிருக்கிறது தோழர் சம்சுதீனின் சிறுகதைகள். மனிதர்கள் மனிதர்கள் மீது வைக்கின்றது மட்டும் பாசமாய் இருக்கக் கூடாது, அதையும் தாண்டி மனிதர்கள் சக பிற உயிர்களிடமும் தங்களுடைய அன்பை நிலை நாட்ட வேண்டும் என்று நம்மை கட்டளை இடுகிறது பல கதைகள். பறவைகளையும் விலங்குகளையும் மனிதனோடு இணைத்து அந்த மனிதன் அவைகளோடு இணக்கமாய் வாழ்கின்ற நெறிமுறைகளை நம் முன்னே நிலை நிறுத்துகின்றன சில கதைகள். சிறுபான்மைகளுக்கு எதிரான பெரும்பான்மைகளின் குரலை உடைத்து நொறுக்குகிற பாலமாய் இந்த கட்டங்காப்பி இருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. எல்லா மனிதர்களின் வேண்டுதல்களும், குறிக்கோள்களும். பல்வேறு ஆறுகளாக பிரிந்து ஒற்றை சமுத்திரத்தைதான் சென்றடைகிறது. இதில் பிரிவினை பேசி மத வினை ஆற்றும் மனித பதர்கள் புரிந்து கொள்ள வேண்டியது எல்லாமே ஒன்றுதான் அது மனிதம் கடந்த நேசம். நேசம்.. நேசம்... நேசிப்பு என்கிற ஒற்றைக் கூரையின் கீழ்தான் இங்கே எல்லா மனிதனும் என்பதை ஓங்கி உரைத்து பறையடிப்போம்..." இந்த சிறுகதை தொகுப்பின் கதைகள், பார்ப்பவரின் பார்வைக்கு ஏதோ ஒரு விட்டத்திற்குள் சுற்றுவதை போல் இருக்கும் ஆனால் இந்த கதைகளின் தேடல் என்பது மிக நீண்ட நெடிய வரலாறுகளை கொண்டது. விடை காணவியளாத பயணங்களால் இன்னமும் கூட தேடல்களிலேயே இருக்கிறது பல சமூக கதைகள். அப்படியாக விடைகளை தேடி அலைகின்ற பயணம் தான் இந்த சிறுகதை தொகுப்பு. சக மனிதனை மனிதன் போற்றினாலே இவை எல்லாவற்றிற்குமான விடை கண்டறியப்படும் என்கிற "கட்டங் காப்பி"யை எல்லோரும் பருகுவோம்.

**முத்தையாமோகன்...**
**கோவை.**






## கண்களில் விழுந்தேன்

உன் பெயரும் தெரியாது, உன்
முகவரியும் தெரியாது;
ஆனால், உன் முகம் மட்டும்
எனக்குள் 'நீ'யாகவே
நிறைந்திருக்கிறது!

நீ வந்தது ஒரு வசந்த
காலம் அல்ல, அது ஒரு
சுட்டெரிக்கும் கோடை காலம்!
இருந்தும், நீ வந்தபோது
எனக்குள் ஒரு குளிர்ச்சி
பரவியது. இன்னும் இங்கே நீ
விட்டுச் சென்ற வாசம் – உன்
விழிகளின் நினைவுகளை
எனக்குள் மீட்டிக்கொண்டே
இருக்கிறது!

உன் விழிகளுக்குத்தான்
இத்தனை சக்தியா?
உன் கண்களில்
ஒளிந்திருக்கும் அந்தக்
காந்தத்தால் – நான்
ஈர்க்கப்பட்டேன்!

உன் பயணத்தில் நானும்
இருக்க வேண்டும் என்பது
என் ஆசையல்ல;
நீ ஒரு சிறகாக
இருந்தால், உனக்காக
நான் ஆகாயத்தைப்
அண்ணாந்து பார்த்து
மகிழ்வேன்

அல்லது நீ ஒரு இறகாக
இருந்தால், இது போதும் என
என் புத்தகத்திற்குள் வைத்து
கொள்வேன்!

உன்னிடமிருந்து நான்
எதையும் எதிர்பார்க்கவில்லை;
நான் யாசிப்பதெல்லாம் உன்
அன்பையும், உன் நட்பையும்
மட்டும்தான்!
வாழ்க்கையில் நமக்குக்
கிடைக்காதது அதிக சிறப்பு
கொண்டதாகத் தெரிகிறது!
இருந்தாலும் பரவாயில்லை...

இருப்பதில் ஏதோ ஒரு அன்பு
மிஞ்சட்டும்! உன் கையில்
இருக்கும் கைக்குட்டையின்
ஒரு நூலாய்
நான் மாறி போய்விட்டேன்.

நீ விட்டுச் சென்ற
வார்த்தைகள் இன்னும்
என்னை விட்டுச்
செல்லவில்லை; ஆனால்
நீயோ... கடந்து போகிறாய்,
இன்னும் மௌனமாகவே
இருக்கிறாய்!



நான் காதலில் விழ
வில்லை
உன் கண்களில்
விழுந்துள்ளேன்
கருணை காட்டு.

**ஜனனி அந்தோணி ராஜ்,** திருச்சிராப்பள்ளி.



தொலைகாட்சியின் ஏதோ
ஒரு அலைவரிசையில்
இசை நிகழ்ச்சி!

ஒளியலையில்
வண்ணவிளக்குகள்!

அழகு பட்டு பூத்திருந்த
பிண்ணனி!

கைகால் முளைத்த
புஷ்பங்களாய் சிறுவனும்
சிறுமியும்!

பக்கவாட்டிலிருந்து மிதந்து
வந்த சேர்ந்திசைபல்லவி!

அது தாண்டி நீந்தி
திளைத்த இசை!

இரண்டின் இணைவில்
இழைந்த பாடல்!

திரையொளிர்ந்த
நாயகனையும் நாயகியையும்
ஞாபகமூட்டி கதை எழுதிச்
செல்கிறது பிராயத்தை!

படிப்பு, வறுமை, வாடகை வீடு,
பற்றாக்குறை வருமானம்!

பங்கு போட்டு
நண்பர்கள், யதார்த்தம்
எழுதியுரைத்த
வாழ்க்கை!

அரசியல்
கட்சிக்கூட்டம்,
வியந்து பார்த்த சினிமா
போஸ்டர்!

கிடைக்காததை எட்டிப்பிடிக்க
ஏங்கிய கண்கள்,நிராசையான
நிறையவைகள்!

முருகன் கோயில் சந்து,
வாய் ஓயாது பாடல்கள்
ஒலித்துக்கொண்டிருந்த
இசையகம்!


சற்றே தூரத்திலான
மேல்நிலைப்பள்ளி!

அடுத்தடுத்த வகுப்பிலான
முன் பெஞ்சு மாணவிகள்,"அ"
மற்றும்"இ" பிரிவின்
முதல் தளத்திலும்,தரை
தளத்திலுமாய் மனம் ஓடி!

வீதி,வீடு என மனம்
நெசவிட்டவைகளின்
மாறா விரிவு!

சித்தப்பா வீட்டு திருமணம்,
எதிர் வீட்டின் சடங்கு, அடுத்த
வீதியிலொரு துக்க வீடு,,,!

இப்படி பார்க்கிற
நிகழ்வுகளினூடாய்



ஒட்டியோடி
வருகிறவைகளை
தவிர்க்க இயலாது
போகிறதுதான்
தருணங்களின்
நகர்வுகளில்!

**விமலன்.**



## மரத்தின் குரல்.!

வாடா..! மனிதா
கட்டிக்கோ! மரத் தாய்
என்னை கட்டிக்கோ!

காய்ந்த பின்னே
வெட்டிக்கோ! கட்டையில்
போகயில் வெட்டிக்கோ.!

வழியினில் விதைகளை
நட்டுப் போ! வளர்கிறச்
செடிக்கு நீர் விட்டுப் போ.!

உரங்களை வேரினில்
இட்டுப் போ.! உனக்கொரு
தடத்தை விட்டுப் போ!

நிழல் தரும் மரங்கள்
வரங்களே.. நீரினை
ஊற்றட்டும் உன் கரங்களே!



தழைப்பது
கொடுப்பது
மரங்களே..
செழிப்பது
சிறப்பது
உன்
கரத்திலே!

**வே.கல்யாண்குமார்.**



## துளிப்பாக்கள்!

எல்லைகளைக் காப்பர்
இரவுபகல் பாராது
நாடுகாப்பர்
இராணுவ வீரர்கள்!

காற்றின் இசையில் கவினாய்
ஆடும் இலைகள் இனிமை!

மண்ணிலே காலாடும்
விண்ணிலே மனமாடும்
மகிழ்வில் ஊஞ்சல்!


மழைப்பெண்ணாள்
உடுத்திய வண்ண ஆடை
வானவில்!

வாடிய பயிர்கள்
வாடுகின்றன மழையிலும்
தானே பசியாற்றல்!

உள்ளார்ந்த திறமையை
உன்னதமாய்க் காண உதவும்
தனிமை!

தங்கப் புதையலைத்
தன்னகத்தே கொண்டது
தானே கடல்!

தோன்றி மறையும்
தொடரோட்டம் காணும்
புரிதல் உணர்வுகள்!



கடுமையான
வெறி
உடன்பிறந்தே
கொல்லும்
நோய் கோபம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.




## ஆட்டுக் குட்டி

ஆட்டுக் குட்டியோ
அழகாகப் பார்த்திருக்கு
ஒட்டி வரும்போது
ஒதுங்கி நிற்கையிலே
மாட்டிக் கொண்டாலும்
மனதார மகிழ்ச்சி
காட்டி நிற்குது



இலைதழை
எல்லாம்
போட்டு
வளர்ப்பேனே
நானென்றும்
நம்பியே!!

**வைரமணி**
சென்னை




## யோசிப்போம்

ஏதோ ஒரு விரலில்
அழியாத மை வைப்பதில்லை
ஆட்காட்டி விரலைப்பிடித்து
வைக்கிறார்கள்,,, நாம்
மட்டும் எதுக்கு ஏதோ ஒரு
சின்னத்தில் வாக்களிக்க
வேண்டும் நமது வாக்கு
நமது உரிமை இது
மாற்றத்திற்கான நேரம்



மனசாட்சியோடு
மக்கள்
தொண்டனை
தேர்வு
செய்வோம்,,

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

பெரு இடைவெளி
கண்ட பின்பும்... யார்
யார் மூலமாகவோ அறிய
நேர்கிறது... தொடர்பு
கொள்ள இயலும் உன்
தவிப்பை... பெரும் சினமதில்



துண்டித்துக்
கொள்ள
முயன்ற..
என்னைவிட....
மேலோங்கி
நிற்கிறாய்....
காதலில்..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## குட்ரசம்

பருப்பு அதிகம் போடாமலே
துவரம்பருப்பு மிளகு சீரகம்
இவற்றை லேசாக வறுத்து
மிக்ஸியில் பொடி பண்ணி
அடுப்பில் பாத்திரத்தில்
புளிகரைத்து உப்பு ரசப்
பொடி போட்டு வறுத்த
பொடியை போட்டு
தண்ணீர் 1 டம்ளர் விட்டு
நன்கு கொதி வந்ததும்
கொத்தமல்லி கிள்ளி
போட்டு நெய்யில் தாளித்து



கொட்டினால்
நன்றாக
இருக்கும்.

**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.



## தேவதை !

இதழ் மொட்டு விரிதலை
உன் பொலிவான
முக விரிதலில் கண்டு
களிப்புறுகிறேன்
உன் கயல் விழிகளின்
காந்தப் பார்வை எனை
ஈர்ப்பது கண்டு
மயங்குகிறேன்
கரும் மேகங்களாய் அலையும்
உன் கூந்தல் அழகு அதில்
சொருகியிருக்கும்
ஒற்றை ரோஜா
பொன் நிலவைப் போல்
பள பளக்கும் உன் வதனம்
பொற்சிலையாய் நடந்து



வரும்
அழகியே ! நீ
தேவலோக
மங்கையா
அல்லது
விண்ணுலக
தேவதையா!

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**

## அழகு !

அழகாய் இருக்கும் எல்லாம்
எனக்கு பிடிக்கும்...
பூக்கள்... மலைகள்...
அருவிகள்... மழலைகள்...
குருவிகள்... என இப்படி
வாசத்தாலும், சத்தத்தாலும்
அழகை உணர்ந்து
கொள்ளும் சக்தியை எனக்கு
படைத்த இறைவன் இவற்றை
கண்டுனற கண்ணை மட்டும்
எனக்கு கொடுக்கவில்லை...

இருந்தாலும்...இவை இன்ன...
இன்னதென்று என் கைகளை
பிடித்து உணர வைக்கிறாள்



என் இரு
கண்களாய்
இருக்கும்
வாய் பேச
முடியாத
மாற்றுதிறனாளி
மனைவி !

**எம்.பி.தினேஷ்.**
கோவை – 25



## ஆறறிவால் ஆற்றுப்படுத்து...!

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
வியனுலகம் இது வென்றாலும்
விந்தை மாந்தரின் வெற்றிகள்
பார்த்து வியந்து மாய்வதும்
வியர்வை ஊற்றுவதும்
வீரியம் இழக்கும்
இழிந்த குணம்...சுய
சிந்தனையைச் சுட்டெரிக்கும்
ஆபத்து நிறைந்த
சிகப்புக் குணம்.. உன்
தன்னம்பிக்கையின்
திட விளைச்சலை
தடுத்து நிறுத்தும்
தரம்குறைந்த குணம்...
உன் முன்னேற்றப் படிகளில்
முட்களை நிறைத்து
பின்னடைவுக்கு
பிறைவாசல் திறக்கும்
பெருமை யில்லா
பிழைக் குணம்...
இப்படிச் சொல்வதால்
மற்றவரின் மகத்தான
செயலுக்கு மனந்திறந்து
பாராட்டி மகிழ்வது மாசு
குணமென்று நேசமே
இல்லாமல் நெருஞ்சி முள்ளாய்
நெகட்டிவ் பள்ளத்தில்
வீழ்ந்து விடாதே நீ...
மற்றவரின் மறுக்க முடியாத
காரிய நேர்த்தியில்
கை தட்டுவது வேறு...
கரைந்து போவது
வேறு...
உணர்வு ஊற்றில்
விளையும் இந்த
அதிநுட்ப வித்யா
சத்தை ஆறறிவு
துணை கொண்டு
அற்புதமாய்
ஆற்றுப் படுத்து... சேதாரம்
இல்லாமல் செதுக்கிய சிறப்பு
ஆயுள் முழுவதும்
அட்சயப் பாத்திரமாய்
செழித்து உன்னை உலகில்
உயர்த்தும்! சரித்திரம்
படைக்கும் சாதனையை
யெல்லாம் சுயம்புக் களத்தில்
சந்திக்கும் சக்தியை
சங்கோஜம் ஒழித்து
சாதனப் படுத்து....
அன்னைத் தமிழுக்கு
அணி சேர்த்த
அவ்வை மூதாட்டி
அறிவு முதிர்ச்சியில்
அகல் விளக்காய்
அறிமுகப் படுத்திய
அக்மார்க் வழியை
அகத்தினில் அரங்கேற்று...
அதிசயங்கள் நிறைந்த
அகிலத்தில் அனைவருக்கும்
குறைவில்லா ஆற்றல்
உண்டு... அப்பழுக்கில்லாத
ஆண்டவன் படைப்பின்
ஆச்சரிய மகத்துவம்
இதுதான்: எல்லோருக்கும்
இங்கே ஒவ்வொன்று எளிது
காண்... ஆகவே யாரும்
வலிமை உடைத்தோம்
என்று அகங்கொள்ளவும்
வேண்டாம்... பிறரின்
வீரிய வலிமை கண்டு
வியந்து மயங்கி வெம்பி
வீழ்ந்திடவும் வேண்டாம்...
என்னினிய இளைஞனே...
பொல்லாப் போர்க்காலத்தில்
பரவலாய் பேசப்படும்
செறிவூட்டல் என்பது
யுரேனியத்துக்கு மட்டும்
சொந்தம் இல்லை... செழித்து
வளர வேண்டிய உன்
சிந்தனைக்கும்
செயலுக்கும் தான்!
இதை இயல்பாய் புரிந்து



இதயத்தோடு
மூளையை இணைத்து
முயன்று பார்..
எல்லாம் எளிதாகும்
எல்லாம் இனிதாகும்!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

## இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

சித்திரை மகளே, வருக!
புது வாழ்வு தந்து அருள்க !

இன்சொல் பேசி மகிழ்வோம்,
இன்பம் எங்கும் விதைப்போம்!

மாலை சூடும்
மங்கலத் தமிழ் மகளே!

வேம்பம் பூ கசப்பு, மாங்கனி
இனிப்பு வாழ்வின் சுவையை
நமக்கு உணர்த்தட்டும்!

தடைகள் நீங்கி வெற்றிகள்
குவியட்டும்!

பழையன கழிந்து புதுமை
புகட்டும்; உள்ளத்தில் உறுதி
எங்கும் நிலைக்கட்டும் !

உழவன் சிரிக்க, உலகம்
செழிக்க இன்பத் தமிழ் மணம்
எங்கும் வீசட்டும்;
வாழ்க தமிழ்! வளர்க நலம்!

பசிப் பிணி நீங்கி, பாசம்
பெருக இவ்வாண்டு இனிய
ஆண்டாகட்டும்!

பழைய கவலைகளை
உதிர்த்து, புதிய
நம்பிக்கைகளை விதைப்பதே!

காலந்தரும் பாடங்களை ஏற்று,
அறத்தின் வழியில் நடப்பது
வாழ்வின் தத்துவம்!

நேற்றைய கவலைகள்
உதிர்ந்த சருகுகள்,
நாளைய கனவுகள் மலரும்
அரும்புகள்!

மாற்றம் ஒன்றே மாறாத
தத்துவம், மகிழ்ச்சி
என்பது உன் மனதின்
தத்துவம் !

தேதி மாறுவது
மட்டும் புத்தாண்டு
அல்ல, உன் சிந்தனை



மாறுவது புதிய விடியல் !

பழையதை மறந்து விடு,

புதிய அன்பை
விதைத்து விடு !

தேவையற்ற கோபம்,
பொறாமை, அகந்தை
ஆகியவற்றை மனதில்
இருந்து நீக்குவோம்!

பொறுமை, பணிவு,
விடாமுயற்சி
ஆகிய பண்புகளை
வளர்த்தெடுப்போம்!

விதை ஒன்று மண்ணுக்குள்
புதைவது வீழ்ச்சிஅல்ல அது
ஒரு விருட்சத்தின் புதிய
தொடக்கம்!

சோதனைகள் உன்னைச்
செதுக்கும் உளிகள்!

வேதனைகள் உன்னை
உயர்த்தும் ஏணிகள்!

அறம் சார்ந்து வாழ்வது
அழியாத செல்வம்!

அன்பை பகிர்வது பேரின்ப
வெள்ளம்!
சிந்தை தெளிந்த செயல்
மேலோங்கி பிறக்கட்டும்!



இனிய தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்!

வாழ்க வையகம்! வாழ்க
வளமுடன்!

**பெ.திருமுகம்,**
மணமேல்குடி

## தேர்தல் திருவிழாவும், புதிய பானையில் பழைய கள்ளும்...

மாபெரும் தேர்தல் விழாவில்
தேர்த் திருவிழா கோலாகலம்.

வேட்பு மனு தாக்கல்
கொடியேற்றம்.

தினமும் வேட்பாளர்
உற்சவர் பவனி.

ஆரத்தி, மாலை, மரியாதை
மேளதாளத்துடன்
திருவீதி உலா...

உற்சவ பெருவிழாவில்
சிறப்புத் தலைவர்களின்
அணிவகுப்பு ஆள் சேர்ப்பதில்
விலை போகும்
சாமானியர்கள்.

தேர்தல் களம் கலை கட்டியது
கவுன்ட்டவுன் தொடங்கியது...
கலர்ஃபுல் வாக்குறுதிகள்
பவர்ஃபுல்லாக வேலை
செய்தது.

வெகுஜனங்கள்
விமர்சையாக கொண்டாடி
மகிழ்ந்தார்கள்.

கட்சிகள் காட்சிகளை
மாறி மாறி காட்சிப்படுத்தினர்.

'கவனிக்கப்படும்'
என்றும்,
கவனமுடன்
வாக்களியுங்கள்
என்றார்கள்.

வேட்பு மனு
பரிசீலிக்கப்பட்டது.
வேட்பாளர்
பரிசீலிக்கப்படவில்லை
பணமும், சாதியும்
நற்குணங்கள் ஆயின.
திருவும், திருமதியும்
வெகுமதிகளாயினர்.

திருவிழாவில் ஆட்டம் பாட்டம்
போட்டவர்கள் காணாமல்
போய்விட்டனர்.

உழைத்தவர்கள்,உரிமைக்காக
குரல் கொடுத்தவர்கள்,
கொள்கைவாதிகள்
வழக்கம்போல்கழகங்களின்
விசுவாசிகள் ஆயினர்.

மாபெரும் ஜனநாயக
தேர்த்திருவிழாவில்
தேரை வடம் பிடித்து
இழுத்துச் சென்றார்கள்
வழக்கம்போல் தேரும்
நிலையை வந்தடைந்தது.

மீண்டுமாய் புதிய ஆட்சி மலர
பொலிவுடன் புறப்பட்டார்.
காட்சியாகிறார் தலைவர்
பக்தியுடன் போற்றப்படுகிறார்
தொண்டர்களால்...

புதிய பானையில்
பழைய கள் ஊற்றி கொடுத்த
போதையில் யோசிக்க



மறந்த வாக்காளர்கள்
மீண்டுமாய் அடுத்த
தேர்தல் திருவிழாவிற்காக
காத்திருக்க கட்டாயம்.

**எறும்பூர் கை. செல்வகுமார் ,**
செய்யாறு.



## ஆசைகள்

ஆசைகள் அதிகமில்லை
ஆசைகள் இல்லாத
மனிதருமில்லை

பசி இல்லாத உயிர்களில்லை
பசிக்கு உண்ண வேண்டும்
உண்பதற்கு உணவு
வேண்டும் விலையில்லா
உணவு வேண்டாம்
உழைக்க வேண்டும்
உழைப்பிலே வரும் சிறு பணம்
பசிக்கு உணவாக வேண்டும்
நான் அமர உடன் உற்றார்
அமர அனைவரின் பசியும்
தீர உழைத்து வந்த பணம்
வழி காட்ட உழைத்து பணம்
ஈட்ட இயலாத சிலருக்கும்
எனக்கு வந்த பணத்திலே
பசி தீர வழியும் வேண்டும்
உழைக்க உடலுண்டு
உழைப்பதற்கு மனமுண்டு
உழைப்பதற்கு ஒரு வழி காட்ட



இறைவா நீ
வேண்டும்
உன் அருள்
வேண்டும்
வரம் தருவாய்:
அருள் புரிவாய்

**ஓம் குமார் P N**

# WANTED
## MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

**Managers:** Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

**Telecaller** -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knoweldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

# ADVERTISE WITH US
CONTACT US
9438610756

# ! WANTED !
## Muslim Lady Accounts Assistant

**Qualification:** B.Com / Tally Knowledge Required
**Company:** Perfume Manufacturing Company
**Location:** Chrompet



Contact: 99401 46318

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
# D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)

Sale
வீடு மனை வாங்க விற்க அணுகவும்

நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

**கவனத்தில் கொள்க:**
- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

# 25 YEARS OF GOD'S FAITHFULNESS
*Silver Jubilee Celebration*

25 Years



Sr. Sophia A Mary SSPS
*25 Years of Faithful Missionary Service*

Sr. I. Amirtha Vimala SSPS
*25 Years of Faithful Missionary Service*

Missionary Sisters Servants of the Holy Spirit
Divine Word Province – India East

*Silver Jubilee Thanksgiving Celebration*
11 April 2026
Jharsuguda, Odisha

CELEBRATING WITH GRATITUDE TO GOD

# WANTED
## JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

# ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி சென்னை
Contact
9790979539

# WANTED
## FEMALE TELECALLER

EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI

FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

# WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW

# SEVEN STARS LOGISTICS PVT.LTD.
We Build Perfection
we simplify shipping for your business
ISO IATA
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

just499®
# MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Sri Manjal Mart
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

SADHANA DEVI.K
CAR WASH
# SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

# WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

அருள்தரும்
# தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
தமிழ் மாதமிருமுறை இதழ்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

# WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



•WANTED•
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
✔ Salary: ₹10,000 - ₹15,000
✔ Attractive Incentives
✔ Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No:11/16, Gandhi Nagar, E.H Road,
Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com


Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711


உங்களின் ஒளிமயமான
எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை
வாங்க விற்க
அணுகவும்
Sale
நல்ல நேரங்கள்
கணிப்பு
ராகு காலங்கள்
பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756



LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009








VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI




Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601




WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106




செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அனுகவும்: 9840861539




WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97







just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




# குழந்தைகளின் நினைவாற்றலை மேம்படுத்தும் செயல்முறைகள்

குழந்தைகளின் வளர்ச்சி என்பது அவர்களின் உடல் வளர்ச்சி மட்டும் அல்ல, அறிவாற்றல் வளர்ச்சியும் தான். அதனை மேம்படுத்த உதவும் செயல்முறைகள் பற்றி தெரிந்துகொள்வோம்.

அறிவுசார் விளையாட்டுகள்

குழந்தைகளின் அறிவை வளர்க்கும் விதமாக சதுரங்கம், புதிர் விளையாட்டுகளை கற்றுக்கொடுத்து விளையாட ஊக்கப்படுத்தலாம். இந்த விளையாட்டுகள் அவர்களின் நினைவாற்றல் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சிக்கு உதவும்.



**கேள்வி கேட்க ஊக்குவித்தல்**

குழந்தைகளுக்கு கேள்வி கேட்க கற்றுக்கொடுங்கள். ஒவ்வொரு விஷயத்திற்கும் ஏன்? எதற்கு? எப்படி ? என கேள்வி கேட்க சொல்லுங்கள். பின்னர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பொறுமையாக பதில் கூறுங்கள்.

**காட்சி வழி கற்பித்தல்**

குழந்தைகளுக்கு பாடங்களை கற்பிக்கும்போது அந்த பாடம் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அதிகம் காட்டுங்கள். அவை அவர்களின் கற்பனை திறனை வளர்ப்பதோடு பாடங்களில் கவனம் செலுத்தவும் உதவும்.

**போதுமான ஓய்வு**

ஒரே நேரத்தில் பல விஷயங்களை கற்பதும், புரிந்துகொள்வதும் குழந்தைகளுக்கு கடினமாக தோன்றும். எனவே, கற்றல் செயல்பாடுகளுக்கு இடையே மூளைக்கு ஓய்வு அளிக்கும் விதமாக 10 நிமிடம் ஓய்வெடுக்க அனுமதி அளியுங்கள்.

**இசையுடன் பாடம்**

பாடங்களை எளிமையாக நினைவில் வைத்துக்கொள்ள அதனை இசை வடிவில் பாடல்களாக குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பது சிறந்தது. இவ்வாறு செய்வது பாடங்கள் மீதமான ஈர்ப்பையும் அதிகரிக்கும்.

**தவறுகளை திருத்துங்கள்**

தவறுகளில் இருந்துதான் நாம் பல விஷயங்களை கற்கிறோம். அந்த வகையில் குழந்தைகள் தவறு செய்தால் தண்டிக்காமல், அதனை திருத்திக்கொள்வது எப்படி என கற்றுக்கொடுங்கள்.

**ஊட்டச்சத்து மிக்க உணவு**

குழந்தைகளின் நினைவாற்றலை வளர்ப்பதற்கு ஊட்டச்சத்துமிக்க உணவுகளை அளிப்பது அவசியம். அந்தவகையில் ஆன்டி ஆக்சிடென்டுகள், ஒமேகா-3 கொழுப்பு நிறைந்த உணவுகளை குழந்தைகளுக்கு அளியுங்கள்.

**மன அழுத்தம் கூடாது**

குழந்தைகள் முன்பு மன நிம்மதியை பாதிக்கும் விஷயங்களை செய்யாதீர்கள். குறிப்பாக குடும்ப பிரச்சனைகளை அவர்கள் முன்பு பேசி வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். அது அவர்களை மனதளவில் கடுமையாக பாதிக்கும். மன அழுத்தம் அல்லது மன இறுக்கத்திற்கு ஆளாக்கிவிடும்.

# மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| வாயில் இருந்து நூல் போடுவான், மந்திரவாதி இல்லை; கிளைக்கு கிளை தாவுவான் ஆனால் குரங்கு இல்லை; வலை விரித்து பதுங்கி இருப்பான் ஆனால் வேடன் இல்லை அவன் யார்? | சிலந்தி |
| நீளவால் குதிரையின் வால் ஓடஓடக் குறையும் அது என்ன? | தையல் ஊசியும் நூலும் |
| எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல் அது என்ன? | விக்கல் |
| கண்ணால் பார்க்கலாம் கையால் பிடிக்கமுடியாது அது என்ன? | நிழல் |
| செய்தி வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே அவன் யார்? | தொலைபேசி |
| அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன? | தண்ணீர் |

# இதய செயலிழப்பை கண்டுபிடிக்கும் AI

இதயம் செயலிழக்கும் அபாயம் ஏற்படுவதை 5 ஆண்டுகளுக்கு முன்னரே கணிக்கும் வகையில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் ஏஐ கருவியை உருவாக்கியுள்ளனர்.

எப்படி செயல்படுகிறது?

இதய தசைகள் பலவீனமடையும் போது, அதைச் சுற்றியுள்ள கொழுப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் CT ஸ்கேனில் கூட புலப்படாது.

ஆனால் இந்த AI கருவி இதயத்தைச் சுற்றியுள்ள கொழுப்பு அடுக்குகளில் ஏற்படும் சிறு மாற்றங்களையும் நுணுக்கமாக கண்காணித்து, நோயாளிக்கு இதய செயலிழப்பு ஏற்படும் அபாயம் எவ்வளவு உள்ளது என கணக்கிட்டு Risk Score வழங்குகிறது.



இந்த ஏஐ மென்பொருளை மருத்துவமனைகளில் எடுக்கப்படும் CT ஸ்கேன்களுடன் இணைத்தால் போதுமானது.

இங்கிலாந்தின் 9 மருத்துவமனைகளில் சுமார் 72,000 நோயாளிகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்த கருவி 86% துல்லியமாக முடிவுகளை வழங்கியுள்ளது.


ஏஐ கருவி வழங்கும் Risk Score-ல் 'அதிக ஆபத்து' பிரிவில் வகைப்படுத்தப்பட்டவர்களுக்கு, அடுத்த 5 ஆண்டுகளில் இதயம் செயலிழக்கும் வாய்ப்பு மற்றவர்களை விட 20 மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

தற்போது இந்தத் தொழில்நுட்பத்தை மருத்துவமனைகளில் அதிகாரப்பூர்வமாகப் பயன்படுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.

இது நடைமுறைக்கு வரும்போது, உயிரிழப்புகளை பெருமளவு குறைக்க முடியும் என்ற நம்பிக்கை மருத்துவ உலகில் ஏற்பட்டுள்ளது.

பொதுவாக, பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகம் சேர்க்காமலும், முறையான உடற்பயிற்சி இல்லாமலும் புகைப்பிடித்தல் மற்றும் மது அருந்துவது உள்ளிட்டவற்றாலும் இதய செயலிழப்பு அபாயம் ஏற்படுகிறது.

அதேநேரம் அண்மைக் காலங்களாக இளவயதினரிடத்திலும் திடீர் இதய செயலிழப்பு ஏற்படுவது கவலையளிக்கும் வகையில் அதிகரித்துள்ளது.



# ஜோக்ஸ்

கஸ்டமர்: ஹெலோ.. சார் !

கஸ்டமர் கேர்: சொல்லுங்க சார்..

கஸ்டமர்: எனக்கு ஒரு கம்பளைண்ட் ரெய்ஸ் பண்ணனும்

கஸ்டமர் கேர்: அப்போ நீங்க 100க்கு தான் சார் கால் பண்ணனும்..

கஸ்டமர்: !!!

------------------------

கஸ்டமர்: ஹலோ.. கஸ்டமர் கேரா?

கஸ்டமர் கேர்: ஹலோ.. ஆமா சார்

கஸ்டமர்: எனக்கு சிக்னல் கிடைக்க மாட்டேங்குது சார்?

கஸ்டமர் கேர்: சார் நீங்க பேசுறது சரியா கேட்கல.. சிக்னல் இருக்குற எடத்துல இருந்து பேசுறீங்களா?

கஸ்டமர்: !!!



------------------------

கஸ்டமர்: ஹலோ.. ஓடீபி வரவே இல்ல சார்

கஸ்டமர் கேர்: ஓகே சார்.. சிம் போன்ல தான இருக்கு..

கஸ்டமர்: ஆமா சார்.. சிம்.. போன் ல தான் இருக்கு, போன் என் கையில தான் இருக்கு.. ஓடீபி மட்டும் ஏரோபிளேன் மோட் ல இருக்கு..

கஸ்டமர் கேர்: ???

------------------------

கஸ்டமர்: ஹலோ.. கஸ்டமர் கேர்?

கஸ்டமர் கேர்: சார்.. கொஞ்சம் லைன் ல காத்திருங்க..

(பிரபலமான பாடல் இசை ஒலிக்கிறது)

கஸ்டமர் கேர்: காத்திருந்தமைக்கு நன்றி.. உங்களுக்கு என்ன தீர்வு வேணும் சார்?

கஸ்டமர்: தீர்வா? என் அனுமதி இல்லாமல் என் பாட்டை உபயோகப்படுனத்துக்கு ராயல்டி கேக்குறேன் முதலில்..

கஸ்டமர் கேர்: ???

------------------------

கஸ்டமர்: ஹலோ.. சார்

கஸ்டமர் கேர்: சொல்லுங்க என்ன உதவி வேணும்?

கஸ்டமர்: நிறைய ஸ்பேம் கால் வருது..

கஸ்டமர் கேர்: சாரி சார்.. கண்டிப்பா ப்ளாக் பண்ணி தருகிறோம்..

கஸ்டமர்: சார்.. அப்படியே என் சொந்தக்காரங்க நம்பரை ப்ளாக் பண்ண முடியுமா?

கஸ்டமர் கேர்: ???

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## படை நோய்: காரணங்களும்.. தடுக்கும் வழிமுறைகளும்..!



யூர்டிகேரியா என்று அழைக்கப்படும் படை நோய், தோலில் தோன்றும் சிவப்பு நிறத்தடிப்புகளையும், அரிப்பையும் குறிக்கும் பொதுவான பாதிப்பாகும். சிலருக்கு படை நோய் சில நாட்கள் மட்டுமே இருக்கும். சிலருக்கு மாதக்கணக்கிலோ அல்லது ஆண்டுக்கணக்கிலோ கூட நீடிக்கலாம். இதற்கு தற்காலிக நிவாரணம் பெறவும், நிரந்தரமாக குணப்படுத்தவும் பல சிகிச்சை முறைகள் உள்ளன. இந்த படை நோயை தடுக்கும் வழி முறைகள் மற்றும் மருத்துவ ஆலோசனை பற்றி பார்ப்போம்.

**ஏன் ஏற்படுகிறது?**

கத்தரிக்காய், கருவாடு, முட்டை மற்றும் சில வகை கடல் உணவுகள் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். சில நோய்களுக்கு உட்கொள்ளும் மாத்திரைகளின் பக்கவிளைவுகள் காரணமாகவும் உண்டாகலாம். அதிக வெயில், கடும் குளிர் அல்லது தூசு போன்றவற்றால் வரலாம். எறும்பு அல்லது வண்டு கடித்தால் அந்த இடத்தில் தடிப்புகள் வீக்கம் தோன்றி படை நோயாக மாறலாம்.

**படை நோயை தடுக்கும் வழிமுறைகள்...**

இது வெப்பமான காலம் என்பதால் தினசரி குறைந்த பட்சம் இரண்டு முறை குளிர்ந்த தண்ணீரில் குளிக்க வேண்டும். சருமத்தில் ஈரப்பதம் இன்றி முழுமையாக துடைக்க வேண்டும்.

ஈரமாக மற்றும் வியர்வையோடு ஆடைகளை ஒருபோதும் அணியக்கூடாது.

மற்றவர்கள் உபயோகப்படுத்தும் சோப்பு, துண்டு மற்றும் ஆடைகளை ஒருபோதும் பகிர்ந்துகொள்ளக்கூடாது.

எப்போதுமே பருத்தி ஆடை மற்றும் தளர்வான ஆடைகளை மட்டுமே அணிய வேண்டும்.

ஜீன்ஸ், சிந்தெடிக் மற்றும் லெக்கிங்ஸ் போன்ற இறுக்கமான ஆடைகளை அணிய வேண்டாம்.

தொடை இடுக்கு மற்றும் இடுப்பு பகுதிகளில் தொற்று பாதிப்பு உள்ளவர்கள் பருத்தியாலான பாக்சர் வகை உள்ளாடைகளை அணிய வேண்டும்.

ஆடைகளை எப்போதுமே வெந்நீரில் சலவை செய்து அதன் உள்பக்கம் வெயில் படும்படி உலர்த்துங்கள்.

தொற்று பாதிப்பு ஆடைகளை தனியாக வைத்து சலவை செய்ய வேண்டும்.

மணிக்கட்டு மற்றும் இடுப்பை சுற்றி அரைஞாண் கயிறுகளை இறுக்கமாக கட்டக் கூடாது.

தண்ணீரில் வேலை செய்பவர்கள் வேலை முடிந்ததும் கை, கால் விரல்களின் மற்றும் நகங்களின் இடையில் டவல் வைத்து ஈரப்பதத்தை தவறாமல் துடைக்க வேண்டும்.

வீட்டு தரைகளை மட்டுமின்றி சோபா கவர்கள் மற்றும் போர்வைகளை நன்கு சுத்தம் செய்யுங்கள்.

**மருத்துவ ஆலோசனை...**

படைநோய்க்கு ஸ்டீராய்டுகள் அடங்கிய ஆயிண்ட்மெண்டுகள், கிரீம்களை பயன்படுத்தாதீர்கள். தினசரி 2 முறை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 2 செ.மீ.க்கு அப்பால் வரை மற்றும் அதை சுற்றிலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட கிரீம்களை தடவுங்கள். நீங்களே மருந்து கடைகளில் வாங்கி சுய மருத்துவம் செய்து கொள்ளாதீர்கள்.

## சிறுவர்கள், முதியவர்கள் அதிகம் பாதிப்பு வெயில்

சமீப காலமாக வெயில் மக்களை வாட்டி வதைக்கிறது. வழக்கத்துக்கு மாறாக இந்த ஆண்டு வெயிலின் தாக்கம் சற்று அதிகமாக உள்ளது. அக்னி நட்சத்திர மாதமான மே மாதம் வருவதற்கு முன்பே வெயில் ருத்ரதாண்டவத்தை தொடங்கியுள்ளது. இதே நிலை தொடர்ந்தால், வரும் நாட்களில் மிகவும் சிரமம் ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர்.

வெயிலின் பிடியில் சிக்குவது மட்டுமல்லாது, கோடைகாலத்தில் பல நோய்கள் மக்களை பாதிக்க வாய்ப்பு இருப்பதாக டாக்டர்கள் தெரிவிக்கின்றனர். கோடைகாலத்தில் உடலில் நீர்சத்து குறைபாடு அதிகமாக ஏற்படும். போதிய அளவு தண்ணீர் குடிக்காமல் இருப்பதே இதற்கு காரணம்.

இதுகுறித்து கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரி டீன் கவிதா கூறுகையில்,

சின்னம்மை, வெப்ப வாதம் மற்றும் தோல் நோய்கள் போன்றவை வெயில் காலங்களில் மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல்களாக



உள்ளன. கோடை காலங்களில் அளவுக்கு அதிகமான வெப்பம் உடலில் ஏற்படுவதால் வெப்பவாதம் உண்டாகிறது. இதனால் மயக்கம் ஏற்பட்டு உடலின் பாகங்கள் செயலிழக்கசெய்து உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இதுதவிர, சின்னம்மை போன்ற வைரஸ் நோய்களும் வெப்பத்தில் உண்டாகும். இதனால் உடலில் பல இடங்களில் அரிப்புடன் தடுப்பு போன்ற கரும்புள்ளிகள் ஏற்பட்டு நாளடைவில் அவை தழும்புபோல் பதிந்து விடுகிறது. இது ஒரு வாரம் வரை உடலில் இருக்கும். சிலருக்கு இது பல நாட்கள் வரை இருக்கவும் வாய்ப்புள்ளது.

மேலும் வெயில் காலத்தில் அதிகமானோருக்கு கண் எரிச்சல் உண்டாகும். இதனால் கண் உறுத்துதல், அடிக்கடி கண்களில் நீர் வருதல், கண்களில் வலி போன்றவை ஏற்படுகிறது. உடலில் அதிகமாக வியர்வை வெளியேறும். இதன்காரணமாக வியர்குரு, தோல் அலர்ஜி போன்றவை ஏற்படும். உடலில் எரிப்பு ஏற்பட்டு அசவுகரியமான உணர்வை உண்டாக்கும்.

பாதுகாக்கும் முறை

உடலுக்கு நீர்சத்து அவசியமானது. கோடை காலத்தில் அதிகப்படியான வியர்வை வெளியேறும். இதனால் உடலில் நீர்இழப்பு நடைபெறும். குழந்தைகள் மற்றும் முதியர்வகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதில் இருந்து பாதுகாத்துக்கொள்ள தினமும் 3 முதல் 5 லிட்டர் தண்ணீர் குடிப்பதனால் உடலில் நீர் இழப்பு ஏற்படுவதை தடுக்கலாம். வேலைக்கு செல்லும்போதும், வெளியில் செல்லும்போதும் தண்ணீர் எடுத்துசெல்ல வேண்டும். மேலும் இயற்கையான பழங்களை சாப்பிடுவது உடலுக்கு மேலும் குளிர்ச்சி அளித்து உடலில் வெப்பம் அதிகரிப்பதை கட்டுப்படுத்தும். தர்பூசணி போன்ற நீர் நிறைந்த பழங்கள் சாப்பிடலாம். வெளியில் சென்றால், வீட்டிற்கு வந்ததும் கை, கால்களை நன்றாக கழுவுவது வைரஸ் நோய்களில் இருந்து பாதுகாக்கும்.

இவ்வாறு கூறினார்.

## இரவில் மாம்பழம் சாப்பிடலாமா?

பழங்களின் அரசன் என்று அழைக்கப்படும் மாம்பழங்களின் சீசன் தொடங்கி விட்டது. வைட்டமின்கள், ஆன்டி ஆக்சிடென்டுகள், நார்ச்சத்துக்கள் மற்றும் இயற்கை சர்க்கரைகள் நிரம்பப் பெற்றது. மாம்பழத்தின் இனிய சுவையும், ஊட்டச்சத்துகளும் பலரையும் விரும்பி சுவைக்க வைக்கிறது. இருப்பினும் இரவில் நீரிழிவு நோயாளிகள், செரிமான பிரச்சனை கொண்டவர்கள் மாம்பழம் சாப்பிடக்கூடாது என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது. அதற்கான காரணங்கள் குறித்து பார்ப்போம்.

* உடலின் செரிமான செயல்முறை இயற்கையாகவே இரவில் மெதுவாக நடக்கும். இனிப்பு பழமான மாம்பழத்தை மாலை நேரத்திற்கு பின்பு உட்கொள்ளும்போது ஜீரணமாவதற்கு கடினமாக இருக்கலாம். வாயுத்தொல்லை, செரிமானக் கோளாறு, வயிற்று வலி, வயிற்று உப்புசம் போன்ற அசவுகரியங்களை ஏற்படுத்தலாம்.

* மாம்பழங்களில் இயற்கை சர்க்கரை (பிரக்டோஸ்) அதிகமாக உள்ளது. இரவில் அதை சாப்பிடும்போது திடீரென ரத்தத்தில் சர்க்கரை அளவை உயர்த்தக்கூடும். குறிப்பாக



நீரிழிவு நோயாளிகளுக்கு பிரச்சனையை அதிகரிக்கச் செய்யும். குறிப்பாக இன்சுலின் உணர்திறன் பாதிப்புக்குள்ளாகும்.

* கலோரிகள் மற்றும் சர்க்கரை அதிகம் கொண்ட பழமாக மாம்பழம் அறியப்படுகிறது. உடல் செயல்பாடு அதிகம் இல்லாத இரவு நேரத்தில் அதை சாப்பிடும்போது, கலோரிகள் எரிக்கப்படாமல் கொழுப்பாக சேமிக்கப்படலாம். காலப்போக்கில் உடல் எடை அதிகரிக்க வழிவகுத்து விடலாம்.

* மாம்பழங்கள் இயல்பாகவே உடல் ஆற்றலை அதிகரிக்க செய்யும். உறங்குவதற்கு முன்பு அதனை உட்கொள்வது உடல் தசைகள் தளர்வடைவதற்கு இடையூறாக அமையலாம். இதனால் இரவில் உடல் முழுமையாக ஓய்வு பெற முடியாமல் தூக்கத்தின் தரம் குறையவும், தூக்கத்திற்கு இடையூறுகள் உருவாகவும் வாய்ப்புள்ளது.

* மாம்பழங்கள் இயல்பாகவே உடல் ஆற்றலை அதிகரிக்க செய்யும். உறங்குவதற்கு முன்பு அதனை உட்கொள்வது உடல் தசைகள் தளர்வடைவதற்கு இடையூறாக அமையலாம். இதனால் இரவில் உடல் முழுமையாக ஓய்வு பெற முடியாமல் தூக்கத்தின் தரம் குறையவும், தூக்கத்திற்கு இடையூறுகள் உருவாகவும் வாய்ப்புள்ளது.

* மாம்பழம் ஊட்டச்சத்து நிறைந்த மற்றும் சுவையான பழமாக இருந்தாலும், செரிமான கோளாறு, ரத்த சர்க்கரை உயர்வு, உடல் எடை அதிகரிப்பு, தூக்கக்கோளாறுகள் போன்ற பிரச்சனைகள் ஏற்படாமல் தவிர்க்க பகல் நேரத்தில் சாப்பிடுவதே சிறந்தது.

## எளிய முறையில் கொழுப்பை குறைக்க



கொழுப்பு என்பது உடலுக்கு ஆற்றலை வழங்கும் முக்கியமான ஊட்டச்சத்து. ஆனால், உடலில் கெட்ட கொழுப்பு (எல்.டி.எல்.) அதிகரித்தால், ரத்த நாளங்களில் படிந்து, ரத்த ஓட்டத்தை தடுத்துவிடும். இதனால் மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்தான நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரிக்கும்.

மேலும் உடலில் அதிக கொழுப்பு சேருவது உடல் பருமன், கழுத்து வலி, முதுகு வலி மற்றும் மூச்சுத் திணறல் போன்ற பிரச்சனைகளுக்கும் வழிவகுத்து விடும். உடலில் கொழுப்பு தொடர்ந்து சேர்ந்து கொண்டிருந்தால் நீரிழிவு, கல்லீரல் பாதிப்பு போன்ற நோய்களையும் உண்டாக்கலாம். எனவே, கொழுப்பை கட்டுக்குள் வைத்திருக்க சில எளிய பழக்கங்களை பின்பற்றுவது அவசியம்.

* தினமும் குறைந்தபட்சம் 2-3 லிட்டர் தண்ணீர் குடிக்கவும்.

* ஒவ்வொரு வேளை உணவிலும் தேவையான அளவு புரதம் சேர்த்துக்கொள்ளவும்.

* தினசரி ஒரு மணி நேரம் நடங்கள்.

* ஸ்நாக்ஸ் எனப்படும் நொறுக்குத்தீனிகளை தவிர்த்து அதற்கு பதிலாக பழங்களை உட்கொள்ளலாம்.

* வாரத்திற்கு குறைந்த பட்சம் 3-5 முறை உடற்பயிற்சி செய்யுங்கள்.

* தினசரி உணவில் காய்கறிகளை தவறாமல் சேர்க்கவும்.

* தினமும் 7-9 மணிநேர உறக்கம் தேவை.

* வெளி உணவுகளை அதிகம் சாப்பிடுவதை கட்டுப்படுத்துங்கள்.

* மன அழுத்தத்தை குறைக்க தியானம், யோகா போன்றவற்றில் ஈடுபடலாம்.

## உடல் உறுப்புகள் பாதிப்பை உணர்த்தும் அறிகுறிகள்

**கல்லீரல்**

கல்லீரல் நோய்கள் ஆரம்பத்தில் அறிகுறி இல்லாமல் இருக்கலாம். கடுமையான சேதம் ஏற்பட்ட பிறகே வலி உணரப்படலாம்.

ஆரம்ப அறிகுறிகள்: சோர்வு, மூளை மந்தம், சரும அரிப்பு

**இதயம்**

தொடர்ந்து சோர்வு, லேசான மார்பு அழுத்தம், மூச்சுத்திணறல், மயக்கம் போன்றவை பெரிய அளவிலான இதய பிரச்சனைகளுக்கு முன்பு தோன்றலாம்.

**சிறுநீரகங்கள்**

பல ஆண்டுகள் அறிகுறி இல்லாமல் இருக்கும். கண் வீக்கம், குதிகால் வீக்கம், அடிக்கடி சிறுநீர் கழித்தல் கண்களை சுற்றி கருவளையம் தோன்றுதல் ஆரம்ப அறிகுறிகள்.

**கணையம்**

ரத்த சர்க்கரை அளவில் மாற்றங்கள் தென்படும். அதிக இனிப்பு சாப்பிடும் ஆசை வெளிப்படுதல், திடீர் சோர்வு, அடிக்கடி தாகம் ஆகியவை முக்கிய அறிகுறிகள்.


**தைராய்டு**

உடலின் செயல்பாட்டை கட்டுப்படுத்தி விடும். ஆரம்ப அறிகுறிகள்: முடி உதிர்வு, மனநிலை மாற்றம், உடல் குளிர்ச்சியாக இருப்பதாக உணர்வது, காரணமின்றி உடல் எடை மாறுதல்.

**பித்தப்பை**

கற்கள் உருவாகும் வரை அமைதியாக இருக்கும். கொழுப்பு வகை உணவு உட்கொண்ட பிறகு வயிறு வீக்கம், வாந்தி உணர்வு அல்லது அசவுகரியம் ஏற்படலாம்.

**நுரையீரல்**



நுரையீரல் பாகங்கள் அதிகம் பாதிப்புக்குள்ளான பிறகே தெரியலாம். சக்தி குறைவு, மூச்சுத்திணறல், அல்லது மார்பு இறுக்கம் ஆரம்ப அறிகுறிகள்.

**பெருங்குடல்**

உள் அழற்சி மறைந்து இருக்கும். வயிறு வீக்கம், ஒழுங்கற்ற மலச்சிக்கல் தோன்றும். மீண்டும், மீண்டும் தோல் பிரச்சனை தோன்றும்.

**அட்ரினல் சுரப்பிகள்**

நீண்டகால மன அழுத்தத்தால் ஹார்மோன் சமநிலை பாதிக்கப்பட்டு இதன் செயல்பாட்டை சோர்வடையச் செய்யும். சோர்வாக இருந்தும் தூக்கம் வராமல் தவித்தல், காபி பருகும் பழக்கத்தை தவிர்க்க முடியாமை, மதிய நேரத்தில் சோர்வு ஆகியவை பொதுவானவை.

**மூளை**

மறதி, எரிச்சல், சிந்தனை மந்தம், கவனக்குறைவு ஆகிய அறிகுறிகளை வெளிப்படுத்தும்.

**வயிறு**

வயிறு வீக்கம், அமிலம் மேலே வருதல், ஊட்டச்சத்து குறைபாடு, குறைவாக சாப்பிட்டாலே வயிறு நிறைந்தது போன்ற உணர்வு தோன்றுவது ஆரம்ப அறிகுறிகளாகும்.

**ரத்த நாளங்கள்**

இது அமைதியாக சேதம் அடையும். கைகள், கால்கள் குளிர்ந்து விடும், மயக்க, உணர்வு இழப்பு, உடற்பயிற்சி செய்ய முடியாமை போன்றவை முக்கிய அறிகுறிகள்.

ஏதேனும் ஒருசில அறிகுறிகள் வெளிப்பட்டால் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது அவசியமானது.


இந்த பகுதியில் உங்கள் படைப்புகள் வரவேற்கிறோம்

whatsapp No

8122664699

# சுக்கர வாரம் துர்க்கை பூஜை சிறப்பு வழிபாடு





கோயம்புத்தூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சுக்கர வாரம் நன்னாளில் நம் வாசவி அம்மன் மூலவருக்கும், துர்க்கை அம்மனுக்கும், சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, எலுமிச்சம்பழம் மாலைகளுடன், வேத மந்திரங்கள் ஒலிக்க, லலிதா சகஸ்ரநாமம் பாராயணமும், துர்கா பூஜையும், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் வாசவி அம்மனையும் துர்க்கை அம்மனையும் வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

# தஞ்சை பெரிய கோவில் சித்திரைப் பெருவிழா - 2026

**தஞ்சாவூர், ஏப்.11:** தஞ்சாவூர், அருள்மிகு பெரியநாயகி அம்மன் உடனுறை அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில் வருகிற (13.04.2026) திங்கட்கிழமை தொடங்கி (30.04.2026) வியாழக்கிழமை முடிய 18 நாள் திருவிழா கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் படி நடைபெற்ற உள்ளது. 1வது நாள் (13.04.2026) காலை 9.45 மணிக்கு மேல் 10.25 மணிக்குள் மிதுன லக்கினத்தில், அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர் பஞ்சமூர்த்திகளுடன் புறபடாகி கோடியேற்றம், மாலை 6.30 மணியளவில் பஞ்ச மூர்த்திகள் படிசட்டத்தில் புறப்பாடு, 2வது நாள் (14.04.2026) காலை 8 மணிக்கு மேல் பல்லக்கில் அருள்மிகு விநாயகர் புறப்பாடு, மாலை 6.30 மணியளவில் சிம்ம வாகனத்தில் அருள்மிகு விநாயகர் புறப்பாடு, 3வது நாள் (15.04.2026) காலை பல்லக்கில் அருள்மிகு விநாயகர் புறப்பாடு, மாலை மூஞ்சுறு வாகனத்தில் அருள்மிகு விநாயகர் புறப்பாடு, 4வது நாள் (16.04.2026) காலை அருள்மிகு விநாயகருக்குச் சந்தனக் காப்பு, மாலை மேஷ வாகனத்தில் அருள்மிகு சுப்பிரமணியர் புறப்பாடு, 5வது




நாள் (17.04.2026) காலை அருள்மிகு சுப்பிரமணியர் பல்லக்கில் புறப்பாடு, மாலை வெள்ளி மயில் வாகனத்தில் அருள்மிகு சுப்பிரமணியர் புறப்பாடு, 6வது நாள் (18.04.2026) காலை அருள்மிகு சுப்பிரமணியருக்கு சந்தனக்காப்பு அலங்காரம், மாலை சைவ சமயாச்சாரியர் நால்வர் புறப்பாடு, 7வது நாள் (19.04.2026) காலை நால்வர் பல்லக்கில் கோவிலுக்குள் புறப்பாடு மற்றும் அருள்மிகு சந்திரசேகர் பட்டம், மாலை சூரிய பிரபையில் அருள்மிகு சந்திரசேகர் புறப்பாடு, 8வது நாள் (20.04.2026) காலை அருள்மிகு சந்திரசேகர் பல்லக்கில் புறப்பாடு, மாலை சந்திர பிரபையில் அருள்மிகு சந்திரசேகர் புறப்பாடு, 9வது நாள் (21.04.2026) காலை 10.30 மணிக்கு மேல் மிதுன லக்கினத்தில் எண் திசை கோடியேற்றம், இரவு 7 மணிக்கு அருள்மிகு தியாகராஜ சுவாமி பிரகாரத்தில் பிரதட்சணமாகி வசந்த மண்டபத்தில் பிரவேசம் செங்கோல் வைபவம், 10வது நாள் (22.04.2026) காலை அருள்மிகு தியாகராஜ சுவாமிகள் யதாஸ்தான பிரவேசம், மாலை அருள்மிகு சந்திரசேகர் முத்துப்பல்லக்கில் புறப்பாடு, 11வது நாள் (23.04.2026) காலை பல்லக்கில் அருள்மிகு சந்திரசேகர் புறப்பாடு, மாலை பூத வாகனத்தில் அருள்மிகு சந்திரசேகர் புறப்பாடு, 12வது நாள் (24.04.2026) காலை அருள்மிகு சந்திரசேகருக்கு சந்தனக்காப்பு, மாலை வெள்ளி யானை வாகனத்தில் அருள்மிகு சந்திரசேகர் புறப்பாடு, 13வது நாள் (25.04.2026) காலை அருள்மிகு சந்திரசேகர் வெண்ணெய்த்தாழி அலங்காரம், மாலை வெள்ளி வானத்தில் விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர் ஓலைச்சப்பரத்தில் அருள்மிகு சந்திரசேகர் , அம்பாள் வீதியுலா, 14வது நாள் (26.04.2026) மாலை அருள்மிகு சந்திரசேகர் கைலாச பர்வத வாகனத்தில் புறப்பாடு, 15வது நாள் (27.04.2026) அதிகாலை 5 மணிக்குள் முத்துமணி அலங்கார சப்பரத்தில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு அதைத்தொடர்ந்து அருள்மிகு தியாகராஜசுவாமி திருத்தேரில் எழுந்தருளல் மேஷ லக்னத்தில் காலை 5.30 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் திருத்தேரோட்டம் நான்கு ராஜவீதிகளில் நடைபெற்ற இருக்கிறது. 16வது நாள் (28.04.2026) மாலை குதிரை வாகனத்தில் அருள்மிகு சந்திரசேகர் புறப்பாடு, 17வது நாள் (29.04.2026) காலை அருள்மிகு தியாகராஜர் பந்தல் காட்சியுடன் யாதஸ்தான பிரவேசம், மாலை அருள்மிகு நடராஜர் வெள்ளை சாத்தி புறப்பாடு, 18வது நாள் (30.04.2026) காலை அருள்மிகு தியாகராஜர் ருத்திரபாத தரிசனதுடன் யாதஸ்தான பிரவேசம், மதியம் சூர்ணோற்சவம் அருள்மிகு சந்திரசேகர் நான்கு ராஜவீதி புறப்பாடு சிவகங்கை குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும், நடராஜர் நான்கு ராஜவீதி புறப்பாடு சிவகங்கை குளத்தில் தீர்த்தவாரி நடைபெறும், மாலை கோடியிறக்கம் மாது ஸ்ரீ காமாட்சி பாயி சாகேப் அவர்களால் செய்விக்கப்பட்ட வெள்ளி ரிஷப வாகனங்களில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு. தினமும் மாலை 6 முதல் 9 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகமும் மற்றும் உபயதாரர்களும் செய்து வருகின்றனர். செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

# இரட்டை இலை சின்னத்திற்கு கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினருக்கு வாக்கு சேகரிப்பு





**திருவண்ணாமலை ஏப்.11:** திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் ஒன்றியத்தில் மாண்புமிகு முன்னாள் மத்திய சுகாதார அமைச்சர் அன்புமணி ராமதாஸ் அவர்கள் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அக்ரி S. S.கிருஷ்ணமூர்த்தி அவர்களை ஆதரித்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# ராசிபுரத்தில் திட்டங்களை முன்வைத்து அமைச்சர் மதிவேந்தன் வாக்கு சேகரிப்பு

**இராசிபுரம், ஏப்.11:** ராசிபுரம் நகர பகுதிகளில் நடைபெற்ற வாக்கு சேகரிப்பில், திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக்கூறிய அமைச்சர் மதிவேந்தன், மீண்டும் வெற்றி பெற்றால் மேலும் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் அமல்படுத்தப்படும் என உறுதியளித்தார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளராக உள்ள அமைச்சர் மதிவேந்தன், ராசிபுரம் நகரப் பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

இதன் ஒரு பகுதியாக எல்லை மாரியம்மன் கோவில், வள்ளலார் கோவில், ஐந்து கடை, நெசவாளர் காலனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்




பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவு கோரினார்.

அப்போது பேசிய அவர், திமுக ஆட்சியில் இதுவரை கொண்டு வரப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள், அடிப்படை வசதிகள் மற்றும் நகர வளர்ச்சி பணிகளை விளக்கினார். மேலும், மீண்டும் வெற்றி பெற்றால் புதிய திட்டங்கள் கொண்டு வந்து ராசிபுரம் நகர வளர்ச்சியை மேலும் மேம்படுத்துவோம் என உறுதியளித்தார்.

பிரச்சாரத்தின் போது, ராசிபுரம் திமுக நகர செயலாளர் என்.ஆர்.சங்கர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

# ஸ்ரீ யதுகிரி நாச்சியார் ஸமேத திருநாராயணன்



ஸ்ரீ யதுகிரி நாச்சியார் ஸமேத திருநாராயணன் @ திருநாராயணபுரம், மேல்கோட்டை

# கேசவர் திருத்தேர் அலங்காரம்



மயிலை கேசவர் திருத்தேர் அலங்காரம்

# சிறப்பு அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன்

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் சுக்கர வாரம் நன்னாளில் வண்ணமலர் பூக்களால் சிறப்பு அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திரு வண்ணா மலை



# கடைசிகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆண்டு விழா..!

**வந்தவாசி, ஏப் 11:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கடைசிகுளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆண்டு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.



இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை ஏ.லட்சுமிபாய் தலைமை தாங்கினார். உதவி ஆசிரியை அனுசுயா வரவேற்றார்.

மேலும் மாணவ மாணவியரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுனர் கமலக்கண்ணன், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், இல்லம் தேடி கல்வி பொறுப்பாளர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

பா. சீனிவாசன், வந்தவாசி.

# அகில இந்திய ஸ்ரீவாசவி பெனுகொண்டா திருக்கோயில் அறக்கட்டளை சார்பில் பக்தர்களுக்கு நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி



ஆந்திரா பிரதேசம் ஸ்ரீ சத்ய சாய் மாவட்டம் பெனுகொண்டா ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் நம் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு குருஜி பீட்டாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பிரக்ஞானந்தா சரஸ்வதி (பால சுவாமிஜி) அவர் திருக்கரங்களால் நம் வாசவி அம்மனுக்கு பால் அபிஷேகம் நடைபெற்றது. மற்றும் கோடை காலத்தில் தாகத்திற்கு இதமாக நீர் மோர் பக்தர்களுக்கு புதன்கிழமை முதல் பீட்டாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பிரக்ஞானந்த சரஸ்வதி (பால சுவாமிஜி) அவர்கள் அவர் திருக்கரங்களால் பக்தர்களுக்கு நீர் மோர் வழங்கி தொடங்கி வைத்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை




# திருநாங்கூர் திவ்ய தேசம்




ஸ்ரீ புருசோத்தம நாயகி சமேத ஸ்ரீ புருஷோத்தம பெருமாள் ப்ரம்மோற்சவம் ஆறாம் நாள் மாலை யானை வாகனம் திருவீதி புறப்பாடு

# பங்குனி மாதம் தேய்பிறை அஷ்டமி சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை ஏப்.11:** திருவண்ணாமலை மாவட்டம்கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ கால பைரவருக்கு பங்குனி மாதம் தேய்பிறை அஷ்டமி முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வடை மாலைகளுடன், சாக்லைட் மாலைகளுடன், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் ஸ்ரீ காலபைரவரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



# சுற்றுலா: பொள்ளாச்சி போனால் அவசியம் பார்க்க வேண்டிய இடம்



டாப்சிலிப் (TOPSLIP) என்பது தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டத்தில், பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள ஆனைமலை மலைத்தொடரில் அமைந்துள்ள ஒரு அழகான மலைவாசஸ்தலம் மற்றும் வனவிலங்குப் பகுதியாகும். கோவைக்கு செல்பவர்கள் பலரும் ஊட்டிக்கு தான் செல்வதுண்டு. ஆனால் அதை விட சூப்பரான, அமைதியான, குளுமையான சூழலை கொண்ட இடம் தான் இந்த டாப்ஸ்லிப். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 800 அடி உயரத்தில் அமைந்துள்ளது. டாப்ஸ்லிப், பாதுகாக்கப்பட்ட இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயத்தின் ஒரு பகுதியாகும்.

பெயர் காரணம்:

டாப்சிலிப் என்ற பெயர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இப்பகுதியில் இருந்த தேக்கு மரங்களை வெட்டி, கீழே சமவெளிக்கு அனுப்புவதற்காக மேலே இருந்து வழுக்கிவிடப்பட்ட (SLIPPING) செயலைக் குறிக்கிறது. "TOP" என்றால் மேலே என்றும், "SLIP" என்றால் வழுக்குதல் என்றும் பொருள்.

இயற்கைமற்றும்வனவிலங்குகள்:

டாப்சிலிப் மிதமான காலநிலை, வளமானதாவரங்கள்மற்றும்பல்வேறு வகையான விலங்கினங்களுக்கு பெயர் பெற்றது. பசுமையான மலைகள்மற்றும்அடர்ந்தகாடுகளால் சூழப்பட்ட இப்பகுதி, இயற்கை ஆர்வலர்கள் மற்றும் வனவிலங்கு விரும்பிகளுக்கு ஒரு சொர்க்கமாகும். இது யானைகள் மற்றும் புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாகவும் விளங்குகிறது.

முக்கிய வனவிலங்குகள்:

யானைகள், புலிகள் (அரிதாக காணப்படலாம்), சிறுத்தைகள், கரடிகள், மான்கள் (புள்ளிமான், கடமான், பன்றி மான்), காட்டெருமைகள், சிங்கவால் குரங்குகள், பல்வேறு வகையான பறவைகள் (சுமார் 250க்கும் மேற்பட்ட SPECIES இருப்பதாக கூறப்படுகிறது), மலைப்பாம்புகள், ராஜநாகங்கள்

சுற்றுலா இடங்கள் மற்றும் செயல்பாடுகள் : யானை சவாரி - டாப்சிலிப்பில் மிகவும் பிரபலமான ஒன்றுயானைசவாரி.வனத்துறையால் ஏற்பாடு செய்யப்படும் இந்த சவாரி, அடர்ந்த காடுகளுக்குள் ஒரு மணி நேரம் அழைத்துச் செல்கிறது. சிறுத்தைபுலி காட்சி முனை இங்கிருந்து சிறுத்தைகளை காண வாய்ப்புள்ளது.

குழிக்காமுத்தியானைகள்முகாம் - இங்கு பயிற்சி பெற்ற யானைகளை பார்க்கலாம். அவைகளுக்கு உணவு கொடுக்கும் நேரமும் பார்க்க தகுந்தது.

வனத்துறையின் வாகன சஃபாரி: வேன் அல்லது ஜீப் மூலம் வனப்பகுதிக்குள் சஃபாரி செல்லலாம்.

டிரக்கிங் - வனத்துறையின் அனுமதியுடன் பல்வேறு ட்ரெக்கிங் பாதைகளில் செல்லலாம்.

பறவைகள் கண்காணிப்பு: டாப்சிலிப் பல்வேறு வகையான பறவைகளுக்கு புகலிடமாக இருப்பதால், பறவைகள் ஆர்வலர்களுக்கு இது ஒரு சிறந்த இடமாகும்.

ஆனைமலை புலிகள் காப்பகம் (ANAMALAI TIGER RESERVE): டாப்சிலிப் இந்த காப்பகத்தின் ஒரு பகுதியாக இருப்பதால், ஒட்டுமொத்த வனப்பகுதியின் அழகையும் ரசிக்கலாம்.

எம்.டி. ஸ்டுவர்ட் பங்களா (MT STUART BUNGALOW): பழமையான வனத்துறை பங்களா மற்றும் அதைச் சுற்றியுள்ள இயற்கை காட்சிகள் ரம்மியமாக இருக்கும்.

தங்குமிடம்:

டாப்சிலிப்பில் தங்குவதற்கு வனத்துறையின் காட்டேஜ்கள் மற்றும் தங்கும் விடுதிகள் உள்ளன. இவை பொள்ளாச்சியில் உள்ள வனத்துறை அலுவலகத்தில் முன்பதிவு செய்யப்பட வேண்டும். தனியார் தங்கும் விடுதிகள் எதுவும் இங்கு இல்லை.

உணவு: வனத்துறையின் கேன்டீனில் எளிய உணவு வகைகள் கிடைக்கும். அதிக உணவு விருப்பங்கள் வேண்டுமானால், பொள்ளாச்சியிலிருந்து எடுத்துச் செல்வது நல்லது.

செல்லும் வழி: விமானம்: அருகிலுள்ள விமான நிலையம் கோயம்புத்தூர் (சுமார் 97 கி.மீ).

ரயில்: அருகிலுள்ள ரயில் நிலையம் பொள்ளாச்சி (சுமார் 35 கி.மீ). அங்கிருந்து டாப்ஸ்லிப்பிற்கு பேருந்து அல்லது வாடகை வண்டி மூலம் செல்லலாம்.

பேருந்து: பொள்ளாச்சியிலிருந்து டாப்ஸ்லிப்பிற்கு நேரடி பேருந்துகள் உள்ளன (ஒரு நாளைக்கு இரண்டு முறை).

# வேலைவாய்ப்பு கார்னர்

## மத்திய சுங்கத்துறையில் பணி



மத்திய அரசின் கீழ் செயல்படும் சென்னை சுங்கத்துறை அலுவலகத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

டிரேட்ஸ்மேன் 2, சீ மேன் 6 உட்பட மொத்தம் 10 இடங்கள் உள்ளன. கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு / ஐ.டி.ஐ., வயது: 18-25 (30.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, உடல் தகுதி தேர்வு (நீச்சல்)

விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

The Additional Commissioner of Customs (establishment), Office of The Commissioner of Customs (general), 2nd Floor, Krishna Block, Rajaji Salai, Chennai- - 600 001 கடைசிநாள்: 30.4.2026

விவரங்களுக்கு: chennaicus toms.gov.in

## கப்பல் கட்டும் தளத்தில் சேர விருப்பமா...

மத்திய அரசின் கீழ் செயல்படும் உடுப்பி கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் ஒப்பந்த பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது. 'சூப்பர்வைசர்' பிரிவில் 15 (மெக்கானிக்கல் 11, எலக்ட்ரிக்கல் 3, நிதி 1), 'அசிஸ்டென்ட் மேனேஜர்' பிரிவில் 15 என மொத்தம் 30 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / டிப்ளமோ / டிகிரி / பி.இ., / பி.டெக்., வயது: 18 - 45, 18 - 30 (22.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: நேர்முகத்தேர்வு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500/ ரூ. 400. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை. கடைசிநாள்: 22.4.2026

விவரங்களுக்கு: cochinshipyard.in

# விருதுநகர் மெட்டுக்குண்டில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு பேரணி




**விருதுநகர், ஏப். 11:** விருதுநகர் மாவட்டம் மெட்டுக்குண்டு கிராமத்தில், 2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்ற இந்தப் பேரணியில், அரசுப் பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர் பெருமளவில் பங்கேற்றனர். "எனது வாக்கு - எனது உரிமை", "விலை மதிப்பற்றது நமது வாக்கு" மற்றும் "100% வாக்களிப்போம்-ஜனநாயகத்தை வலிமைப்படுத்துவோம்" போன்ற விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பியபடி அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கும் வண்ணமயமான பதாகைகளை ஏந்திச் சென்ற பங்கேற்பாளர்கள், பொதுமக்களிடம் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். தேர்தல் நாளன்று தங்களது பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தவறாமல் வாக்குச்சாவடிக்கு வந்து ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இக்காலக்கட்டத்தில் இளைய தலைமுறையினர் மற்றும் முதல்முறை வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இப்பேரணியின் முக்கிய நோக்கமாக அமைந்தது.

# துறையூர் காசி விஸ்வநாதர் கோவில் சிலைகள் உடைப்பு: 3 பேர் மீது நடவடிக்கை எடுக்க கோவில் அதிகாரி புகார்

**துறையூர், ஏப்.11:** திருச்சி மாவட்டம் துறையூர் மூங்கில் தெப்பக்குளம் அருகே உள்ள பழமை வாய்ந்த காசி விஸ்வநாதர் கோவிலில், சாமி சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் பக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறைக்குச் சொந்தமான இக்கோவிலின் கிழக்கு வாசலில் வசந்த மண்டபம் அமைந்துள்ளது. இந்த மண்டப முகப்பில் மார்க்கண்டேயனின்வரலாற்றைக் கூறும் வகையில் அகத்தியர், காசி விஸ்வநாதர், எமராஜர், சிவலிங்கம், நந்தி உள்ளிட்ட சுமார் 15 சுதை வடிவச் சிலைகள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்தன.

இந்நிலையில், கோவிலைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஜெயலட்சுமி என்ற பெண் மற்றும் ஸ்ரீதர், நக்கீரன் ஆகிய 3 நபர்களின் தூண்டுதலின் பேரில், இந்தச் சிலைகள் உடைத்துச் சேதப்படுத்தப்ப ட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கோவிலின் முன் மண்டப சிலைகளுக்கு வர்ணம் பூச தனியார் அமைப்பினர் அறநிலையத்துறையிடம் அனுமதி கோரியதால் ஆத்திரமடைந்த ஆக்கிரமிப்பாளர்கள், இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

இது குறித்துத் தகவல் அறிந்த கோவில் செயல் அலுவலர் ராஜகோபால், சட்டவிரோதமாகக் கோவில் நிர்வாகத்தில் தலையிட்டுச் சிலைகளைச் சேதப்படுத்திய ஜெயலட்சுமி உள்ளிட்ட 3 பேர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கக் கோரி துறையூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

பட்டப்பகலில் அரங்கேறிய இந்தச் சிலையுடைப்புச் சம்பவம் பக்தர்களிடையே வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

கோவிலை ஆக்கிரமித்து அடாவடியில் ஈடுபடும் நபர்களை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என இந்து அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் சமூக வலைத்தளங்கள் வாயிலாகக் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# மயிலாடுதுறையில் காய்கறிகள், பழங்கள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு: கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டு ஆய்வு

**சென்னை, ஏப்.11:** தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, மயிலாடுதுறை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்திப் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, மயிலாடுதுறை நகராட்சி உழவர் சந்தையில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் காய்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு காட்சிகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் தேர்தல் அலுவலர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கோ.ஸ்டாலின் ஆகியோர் நேரில் பார்வையிட்டனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வரும் 23.04.2026 அன்று சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, உழவர் சந்தையில் காய்கறிகள் மற்றும் பழங்களைக் கொண்டு தேர்தல் சின்னங்கள் மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் கலைநயத்துடன் வடிவமைக்க ப்பட்டி ருந்தன. இதனைப் பார்வையிட்ட ஆட்சியர், அங்கு அமைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வுப் பகுதியில் 'செல்ஃபி' புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் தலைமையில் மற்றும் மாவட்ட காவல் கண்காணி ப்பாளர் முன்னிலையில், அங்கிருந்த அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. பின்னர், உழவர் சந்தைக்கு வந்திருந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு 100% வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை ஆட்சியர் வழங்கினார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய ஆட்சியர், "வாக்களிப்பது நமது ஜனநாயகக் கடமை. உண்மையான ஜனநாய கத்திற்கு ஒவ்வொரு வாக்கும் மிக முக்கியமானது. நமது வாக்கை யாருக்கும் விட்டுக்கொ டுக்காமல், அனைவரும் வரும் ஏப்ரல் 23-ஆம் தேதி அன்று வாக்குச்சாவடிக்குச் சென்று தங்களது ஜனநாயக உரிமையை நிலைநாட்ட வேண்டும்," எனக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.பூங்கொடி, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் விஜயரா கவன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் திலீப் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் தொகுதி வாக்குச்சாவடி மையங்களில் கன்னியாகுமரி கலெக்டர் ஆர்.அழகுமீனா நேரில் ஆய்வு

**கன்னியாகுமரி, ஏப்.11:** கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட அரசு அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களை, மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சியருமான ஆர்.அழகுமீனா இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் எவ்வித சிரமமுமின்றி தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றுவதை உறுதி செய்ய வேண்டும் எனத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. அதனடிப்படையில், நாகர்கோவில் கிருஷ்ணன்கோவில் பகுதியில் உள்ள உழவர் பயிற்சி மையம், மாவட்ட சுகாதார அலுவலகம் மற்றும் புத்தேரி எஸ்.எம்.ஆர்.வி. மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களை ஆட்சியர் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, வாக்காளர்கள் வசதிக்காகக் குடிநீர், மின்சாரம் மற்றும் கழிப்பறை வசதிகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனத் துறை அலுவலர்களுக்கு அவர் உத்தரவிட்டார். மேலும், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தடையின்றி வந்து செல்ல ஏதுவாகச் சாய்வுதள (RAMP) வசதிகள் முறையாக உள்ளனவா என்பது குறித்தும் அவர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

# தேனி மாவட்ட வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகள்: கலெக்டர் நேரில் ஆய்வு

**தேனி, ஏப். 11:** தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள கொடுவி லார்பட்டி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்று வரும் முன்னே ற்பாடு பணிகளைத் தேர்தல் பொதுப்பார் வையாளர்கள் பீம் சிங், வினய் பிரதாப் சிங் மற்றும் காவல் பார்வையாளர் சிவப்பிரகாஷ் தேவராஜ் ஆகியோர் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான ரஞ்ஜீத் சிங் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

தமிழ்நாட்டில் 23.04.2026 அன்று சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் உள்ள ஆண்டிபட்டி, பெரியகுளம், போடி நாயக்கனூர் மற்றும் கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் அனைத்தும் கொடுவிலார்பட்டியில் உள்ள இந்த மையத்தில் சேகரிக்கப்பட்டு, வரும் 04.05.2026 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

விரிவான ஆய்வு: இந்த ஆய்வின் போது, வாக்கு எண்ணும் மையத்தில் தபால் வாக்கு எண்ணும் அறைகள், வாக்குப்பதிவு இயந்தி ரங்களைப் பாதுகாப்பாக வைப்ப தற்கான வைப்பறைகள் (STRONG ROOMS), வாக்கு எண்ணிக்கை அறைகள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகள் ஆகியவற்றை அதிகாரிகள் பார்வையிட்டனர். மேலும், தேர்தல் பணியாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் செல்வதற்கான தனித்தனி வழித்தடங்கள் இந்திய தேர்தல் ஆணை யத்தின் வழிமுறைகளின்படி அமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# பறக்கும் படைகளால் ரொக்கம், பொருட்கள் பறிமுதல்: உரிய ஆவணங்கள் காண்பித்ததால் ரூ.1.66 கோடி திரும்ப ஒப்படைப்பு

**சென்னை, ஏப்.11:**

சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டு நடைமுறை மற்றும் தேர்தல் நடத்தை விதிமுறைகளின் படி, முறையான ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் ரூ.10 ஆயிரத்துக்கு மேல் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் ரூ.50 ஆயிரத்துக்கும் மேல் ரொக்கமாக கொண்டு செல்லப்படும் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்படுகின்றன.




பின்பு, விசாரணையில் முறையான ஆவணங்களை மேல் முறையீட்டு குழுவிடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் மீண்டும் உரிய நபரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த வகையில், சென்னை மாவட்டத்தில் ஆவணங்கள் இன்றி பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை விடுவிப்பதற்கு மேல்முறையீட்டு அலுவலர்கள் அடங்கிய குழு உதவி ஆணையர் தலைமையில், சென்னை மாநகராட்சியில் (தொடர்பு எண் 94451 90300)) அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பறிமுதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றை விடுவிக்க மேல்முறையீடு செய்பவர்கள் மனுவினை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்து, விடுவிப்பு ஆணையினைப் பெற்று, அரசு கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் அல்லது ரொக்கத்தினை பறக்கும் படை அலுவலர் மூலமாக விடுவிப்பு ஆணையினை கருவூலத்தில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை மாவட்டத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுக்கள் மூலம் உரிய ஆவணங்களின்றி பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ரொக்கத்தை விடுவிக்கக் கோரி இதுவரை 113 மேல்முறையீடுகள் பெறப்பட்டன.

கடந்த 8-ம் தேதி வரை உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த 98 மேல்முறையீடுகளில் ரூ.1,66,75,283 விடுவிக்கப்பட்டுள்ளது. 15 மேல்முறையீட்டு மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### சட்ட விரோதமாக ரூ.2 லட்சம் மதிப்புள்ள புகையிலை பொருட்கள் வைத்திருந்தவர் கைது




**தூத்துக்குடி, ஏப்.11:**

தூத்துக்குடி நகர உட்கோட்ட டி.எஸ்.பி. சுனில் மேற்பார்வையில் தென்பாகம் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் சோனியா மற்றும் போலீசார் நேற்று சிதம்பரநகர் பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக சந்தேகப்படும்படி வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி போலீசார் சோதனை செய்தபோது, அவர் தூத்துக்குடியை சேர்ந்த வன்னியராஜன் (வயது 52) என்பதும், அவர் இருசக்கர வாகனத்தில் சட்டவிரோதமாக விற்பனை செய்ய தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை வைத்திருந்ததும் தெரியவந்தது. உடனடியாக மேற்சொன்ன போலீசார் வன்னியராஜனை கைது செய்து அவரிடமிருந்த ரூ.2 லட்சம் மதிப்புள்ள 45 கிலோ 500 கிராம் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் பைக் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து தென்பாகம் காவல் நிலைய போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### பறிமுதல் செய்த 300 மதுபாட்டில்கள் காவல் நிலையத்தில் மாயம்.. விசாரணையில் வெளியான அதிர்ச்சி

**தஞ்சை, ஏப்.11:**

தஞ்சையை அடுத்த வல்லம் போலீஸ் நிலைய பகுதியில் கடந்த 2020-ம் ஆண்டு பெட்டிக்கடைகள், பார்கள் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்த ஏராளமான மதுபாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட மதுபாட்டில்களை வல்லம் போலீஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைத்திருந்தனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு வழக்கில் உள்ள மதுபாட்டில்களை கோர்ட்டு உத்தரவு பெற்று போலீசார் அழிக்கும் பணியில் ஈடுபட்டனர். அப்போது பாதுகாப்பாக வைத்திருந்த மதுபாட்டில்களில் 300 மது பாட்டில்கள் மாயமானது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுந்தரவதனத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இதுகுறித்து விசாரணை நடத்துமாறு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு உத்தரவு பிறப்பித்தார். அவரது உத்தரவின்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர்.

விசாரணையில், வல்லம் போலீஸ் நிலையத்தில் எழுத்தராக பணிபுரிந்து வந்த ஜெயகுரு (45) என்பவர் 300 மதுபாட்டில்களையும் யாருக்கும் தெரியாமல் எடுத்து விற்பனை செய்தது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து காவல் நிலைய எழுத்தர் ஜெயகுரு கடந்த 7-ந் தேதி ஆயுதப்பட்டைக்கு மாற்றப்பட்டார். இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு அவரை சஸ்பெண்ட் செய்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுந்தரவதனம் உத்தரவிட்டுள்ளார். காவல் நிலையத்தில் இருந்த மதுப்பாட்டில்களை காவல் நிலைய எழுத்தரே விற்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### அங்கன்வாடி ஆசிரியரை அடித்த 5 பேர் மீது வழக்கு

**ஹைதராபாத், ஏப்.11:**

தெலங்கானா மாநிலம், சங்காரெட்டி மாவட்டம், தாமரகித்தா கிராமத்தை சேர்ந்தவர் வசந்த குமாரி. இவர் ராசோல் கிராமத்தில் அங்கன்வாடி ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இவரது கணவர் பிரபாகர், ஒரு நிதி நிறுவனத்தை தொடங்கி, பலரிடம் பணம் வசூல் செய்துவிட்டு தலைமறைவாகி விட்டார். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் 5 பேர் அவரது மனைவி வசந்த குமாரியை பணம் கேட்டு நச்சரித்து வந்தனர். இந்நிலையில், நேற்று வசந்த குமாரியை ஊருக்கு நடுவில் உள்ள ஒரு மரத்தில் கயிற்றால் கட்டி அடித்துள்ளனர். இது குறித்து வசந்த குமார் கொடுத்த புகாரின் பேரில் அந்த 5 பேர் மீது கஙட்லி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### சர்வதேச டி20 கிரிக்கெட்டில் பிரேசிலின் லாரா 9 விக்கெட் வீழ்த்தி சாதனை

**துபாய், ஏப்.11:**

போட்ஸ்வானா நாட்டில் பிசிஏ கலாஹாரி மகளிர் டி20 சர்வதேச கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று கபோரோனில் உள்ள போட்ஸ்வானா கிரிக்கெட் சங்கத்தின் ஓவல் 2 மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் லெசோதோ-பிரேசில் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த பிரேசில் 202 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக மோனிகே மச்சாடோ 69, ரோபர்டா ஏவரி 48 ரன்கள் விளாசினர். 203 ரன்கள் இலக்குடன் பேட் செய்த லெசோதா அணி 6.2 ஓவர்களில் 13 ரன்களுக்கு சுருண்டது. இதனால் பிரேசில் அணி 189 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் வேகப்பந்து வீச்சு வீராங்கனையான லாரா கார்டோசோ 3 ஓவர்களை வீசி 4 ரன்களை மட்டும் விட்டுக்கொடுத்து 9 விக்கெட்களை வீழ்ததி சாதனை படைத்தார். இதன் மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட் வரலாற்றில் மகளிர், ஆடவர் ஆகிய இரு பிரிவிலும் ஒரே இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய முதல் நபர் என்ற வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார் லாரா கார்டோசோ.

### ஆசிய பாட்மிண்டன் சாம்பியன்ஷிப்: கால் இறுதியில் ஆயுஷ் ஷெட்டி - ஹெச்.எஸ்.பிரனாய், பி.வி.சிந்து வெளியேற்றம்

**நிங்க்போ, ஏப்.11:**

சீனா வின் நிங்க்போ நகரில் ஆசிய பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் உலகத்தரவரிசையில் 25-வது இடத்தில் உள்ள இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, 20-வது இடத்தில் உள்ள சீன தைபேவின் ஷி யு ஜென்னுடன் மோதினார். இதில் ஆயுஷ் ஷெட்டி வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார். கால் இறுதி சுற்றில் போட்டித் தரவரிசையில் 3-வது இடத்தில் உள்ள இந்தோனேஷியாவின் ஜோனாதன் கிறிஸ்டியுடன் மோதுகிறார் ஆயுஷ் ஷெட்டி. அதேவேளையில் மற்றொரு இந்திய வீரரான ஹெச்.எஸ்.பிரனாய் சீனாவன் வெங் ஹாங் யங்கிடம் தோல்வி அடைந்தார். மகளிர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் ஒலிம்பிக்கில் இருமுறை பதக்கம் வென்ற இந்தியாவின் பி.வி.சிந்து சீனாவின் வாங் ஷியி-யிடம் தோல்வி அடைந்தார். இந்த ஆட்டம் 46 நிமிடங்களில் முடிவடைந்தது. மற்றொரு இந்திய வீராங்கனையான உன்னதி ஹூடா ஜப்பானின் டோமோகா மியாஸாகியிடம் தோல்வி அடைந்தார். கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா, தனிஷா கிரஸ்டோ ஜோடி மலேசியாவின் சென் டங் ஜி, தோஹ் இ வெய் ஜோடியிடம் வீழ்ந்தது.

### கேண்டிடேட்ஸ் செஸ் தொடர்: 8-வது சுற்றில் பிரக்ஞானந்தா தோல்வி

பாஃபோஸ்: சைப்ரஸ் நாட்டில் உள்ள பாஃபோஸ் நகரில் கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் பிரிவு 8-வது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர்.பிரக்ஞானந்தா, நெதர்லாந்தின் அனிஷ் கிரியுடன் மோதினார். இதில் பிரக்ஞானந்தா 44-வது சுற்றின் போது தோல்வி அடைந்தார். இந்த தோல்வியால் கேண்டிடேட்ஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் பிரக்ஞானந்தாவின் கனவுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் நபரே இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறும் உலக சாம்பியன் பட்டம் வெல்வதற்கான ஆட்டத்தில் டி.குகேஷுடன் மோதுவார்.

# தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து டிஜிபி - காவல் ஆணையர் ஆலோசனை

**சென்னை, ஏப்.11:**

தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து டிஜிபி மற்றும் சென்னை காவல் ஆணையர் நேற்று ஆலோசனை நடத்தினர். தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு வரும் 23-ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் முழுவீச்சில் செய்துள்ளது. அரசியல் கட்சியினர் பணம், பரிசுப் பொருட்களை கொடுத்து வாக்குகளைக் கவர்வதை தடுக்க தொகுதி வாரியாக பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு சோதனைகள் நடத்தப்படுகின்றன.

ரூ.50 ஆயிரத்துக்கும் மேல், ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லும் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே, சென்னையில் வாக்குப் பதிவின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர், சென்னை காவல் ஆணையர் அருண் ஆகியோர் நேற்று ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் உயர் போலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும், பிரச்சாரத்தின்போது வேட்பாளர்கள் விதிமீறலில் ஈடுபடாமல் இருக்கவும், மீறினால் வழக்குப்பதிவு செய்வதற்கும் ஏதுவாக பிரச்சாரம் உள்ளிட்ட அனைத்து நகர்வுகளையும் வீடியோ பதிவு செய்யும் பணியும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

முன்னதாக, புதிய தலைமைச் செயலாளர் சாய்குமாரை, தலைமை செயலகத்தில் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# மகளுக்கு நீதி கேட்டு தலைமைச் செயலக வாயிலில் காவலர் போராட்டம்

**சென்னை, ஏப்.11:**

மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் மகளின் பாதம் அகற்றப்பட்டதாகக் கூறி, அதற்கு நீதி கேட்டு காவலர் ஒருவர் தலைமைச் செயலக நுழைவு வாயிலில் திமுக கொடியை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டார்.




திருவள்ளூர் அடுத்த காக்களூரை சேர்ந்தவர் கோதண்டபாணி (44), ஆவடி டேங்க் பேக்டரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியாற்றுகிறார். இவருக்கு மனைவி மற்றும் 2 ஆண் மற்றும் 13 வயதில் பிரதிக்ஷா என்ற மகள் உள்ளார்.

பிரதிக்ஷாவுக்கு 3 வயது இருக்கும்போது திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து, அவர் எழும்பூர் குழந்தைகள் நல அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேல் சிகிச்சைக்காக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு சிறுமியின் காலின் பாதம் அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய சூழல் ஏற்பட்டது. மருத்துவர்களின் தவறான சிகிச்சையே மகளுக்கு கால் பறிபோகக் காரணம் எனக்கூறி, நீதி கேட்டு 5 ஆண்டுகளாக தலைமைக் காவலர் தொடர்ந்து போராடி வருகிறார்.

மருத்துவத்துறை அலுவலகம், டிஜிபி அலுவலகம், தலைமைச் செயலகம் எனப் பல இடங்களில் முறையிட்டும் அவரது கோரிக்கை இதுவரை நிறைவேறவில்லை. இந்நிலையில், மகளுக்கு நீதி கேட்டு, சீருடையில் தலைமைச் செயலக நுழைவு வாயிலுக்கு நேற்று வந்த கோதண டபாணி, திமுக கொடியை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டார். மேலும், 2021-ம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத்தில் தான் தனது மகளுக்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கூறிய, மகளுக்கு நீதி கேட்டு கோஷமிட்டார். அங்கு பாதுகாப்புப் பணியிலிருந்த போலீஸார் உடனடியாக தீயை அணைத்து கோதண்டபாணியை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

முன்னதாக, தலைமைக் காவலர் கோதண்டபாணி கூறுகையில், "மகள் பிரதிக்ஷாவுக்கு 3 வயது இருக்கும்போது சிறுநீர் கழிப்பதில் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து, எழும்பூர் குழந்தைகள் நல அரசு மருத்துவமனையில் காண்பித்தேன். அப்போது, காலில் அரிப்பும் ஏற்படத் தொடங்கியது. இது சாதாரண அரிப்புதான் எனக் கூறி அலட்சியமாக சில மருந்துகளைக் கொடுத்து அனுப்பி வைத்தனர். பின்னர், 2 நாளில் மீண்டும் காலில் அரிப்பு அதிகரித்தது. வலது காலில் ரத்த ஓட்டம் சரியாக இல்லை என கூறினர். இறுதியில் அவர்கள் அளித்த தவறான சிகிச்சையால் மகளின் கால்பாதத்தை அகற்றும் நிலை ஏற்பட்டது. எனவே, இதில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் உட்பட அனைவர் மீதும் நடவடிக்கை எடுத்து எனது மகளுக்கு உரிய நீதி வழங்க வேண்டும்" என்றார்.

## வணிகச் செய்திகள்

### இந்திய இணையவழி சில்லறை வணிகச் சந்தை புதிய உச்சம்!

**மும்பை, ஏப்.11:**

கடந்த ஆண்டில் ரூ.6 லட்சம் கோடி மதிப்பைக் கடந்தது.

இந்தியாவின் இணையவழி சில்லறை வணிகச் சந்தை, கடந்த 2025-ஆம் ஆண்டில் சுமார் 6,500-6,600 கோடி டாலரை (ரூ.6 லட்சம் கோடி) எட்டி புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

ஃபிளிப்கார்ட் நிறுவனத்துடன் இணைந்து பெயின் & கம்பெனி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இத்தரவு வெளியாகியுள்ளது. முந்தைய 2024-ஆம் ஆண்டை விட இத்துறை 21 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

விரைவு வணிகத்தில் முதலிடம்: மளிகைப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களைச் சில நிமிடங்களில் விநியோகிக்கும் விரைவு வணிகத்தில் (குவிக்காமர்ஸ்) இந்தியா உலக நாடுகளுக்கே முன்னோடியாக உருவெடுத்துள்ளது.

இந்தியாவின் மொத்த இணையவழி விற்பனையில் 17 சதவீதம் இந்த விரைவு வணிகச் சேவை மூலமே நடைபெறுகிறது. இது சீனா போன்ற வளர்ந்த நாடுகளைவிட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் இத்துறை இருமடங்கு வளர்ச்சியடைந்து, 1,100 கோடி டாலர் விற்பனையை எட்டியுள்ளது. 2030-க்குள் பிரம்மாண்ட இலக்கு: தற்போதைய அபரிமிதமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் இணையவழி சில்லறை வணிகச் சந்தை 18,000 கோடி டாலர் என்ற இமாலய இலக்கை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'நியோ மேக்ஸ்' வீட்டு மனைகளை ஏலத்தில் வாங்கும் முதலீட்டாளர்களுக்கு சலுகை

**மதுரை, ஏப்.11:**

மதுரை பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நியோ மேக்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துகளில் டிடிசிபி அங்கீகாரம் பெற்ற மனையிடங்கள் எம்எஸ்டிசி வலை தளம் (WWW.MSTCECOMMERCE.COM) மூலம் மின்னணு ஏலம் மார்ச் 17-ம் தேதி தொடங்கி நடந்தது.

சட்டப்பேரவைத் தேர்தல் காரணமாக, ஏப்ரல் 23-ம் தேதி நடக்கவிருந்த சொத்துகள் (திருவாரூர் மாவட்டம் ஆழியூர்) ஏலம் மே 15-ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் தங்களது முதலீடு தொகைக்கு மேல் அதிகமான தொகைக்கு ஏலம் எடுத்து இருந்தால், அந்த அதிக தொகையை மட்டுமே செலுத்த வேண்டும்.

இவ்வழக்கின் இறுதியில், பாதிக்கப்பட்ட மொத்த முதலீட்டாளர்களுக்கு திரும்ப கொடுக்கும் தொகையானது, வழக்கின் மொத்த இழப்பீட்டுத் தொகைக்கு நிகராக (100 சதவீதத்துக்கு மேல்) இருக்கும்பட்சத்தில், ஏலம் எடுத்த முதலீட்டாளர்கள் வேறெந்த தொகையும் செலுத்தத் தேவையில்லை.

பிரித்துக் கொடுக்கப்படும் தொகையானது, மொத்த இழப்பீட்டுத் தொகைக்கு (100 சதவீதத்துக்கும் குறைவாக இருந்தால்) குறைவாக இருக்கும்பட்சத்தில், முதலீட்டாளர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படும் விகிதாச்சார தொகை போக, மீதமுள்ள தொகையை ஏலம் எடுத்த முதலீட்டாளர்கள் செலுத்த வேண்டும்.

இதில் விருப்பம் இல்லாத ஏலம் எடுத்த முதலீட்டாளர்கள் எந்த நிலையிலும் ஏலத்தில் இருந்து விலகலாம். விலகும் முதலீட்டாளர்களுக்கு, ஏலம் எடுத்ததற்காக செலுத்திய தொகையை எவ்வித பிடித்தமும் இன்றி திருப்பி வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் ஏலத்தில் பங்கேற்று இடங்களை வாங்கினால், அது அவர்களுக்கு ஒரு தீர்வு என்ற நோக்கில் இச்சலுகை சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவின்பேரில் வழங்கப்படுகிறது. ஏலத்தின்போது, தொழில்நுட்பக் கோளாறு, சந்தேகம் இருந்தால் எம்எஸ்டிசி அலுவலர்களை (94990 54101, 94990 54102) தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மேற்கு வங்காளத்திற்கு 6 உத்தரவாதங்கள்; பிரதமர் மோடி அதிரடி அறிவிப்பு



ஹல்தியா, ஏப்.11:

மேற்கு வங்காள சட்டசபைக்கான தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துஉள்ளது. சட்டசபை தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இதனை தொடர்ந்து, பா.ஜ.க.வுக்கு வாக்கு சேகரிக்கும் வகையில், மேற்குவங்காளத்தின்ஹல்தியா நகரில் நடந்த அரசியல் பொதுக்கூட்டம் ஒன்றில் பிரதமர் மோடி இன்று கலந்து கொண்டு பேசினார். அவர் கூறும்போது, 7-வது ஊதியகுழு அமைப்பது, நம்பிக்கைக்குரிய சூழலை உருவாக்குவதற்கு உறுதியளிப்பது உள்ளிட்டவற்றை குறிப்பிட்டு பேசினார்.

திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் நடந்த ஊழல், பணமோசடி மற்றும் பெண்கள் தொடர்பான குற்றங்கள் ஆகியவைமீண்டும் விசாரிக்கப்படும் என அவர் உறுதி கூறினார். பா.ஜ.க. அரசு மாநிலத்தில் ஆட்சியமைத்த பின்னர், சட்டத்தின் பிடியில் இருந்துதிரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியின் குண்டர்கள் ஒருவரும் தப்ப முடியாது என்று பிரதமர் மோடி கூறினார்.

அவர் வெளியிட்ட 6 உத்தரவாதங்களின்படி,

1) மேற்கு வங்காளத்தில் அச்ச சூழலை பா.ஜ.க. அரசு நீக்கும், சட்டத்தின் ஆட்சிக்கான நம்பிக்கையைமீட்டெடுப்போம்.

2) பொதுமக்களுக்கு முழு அளவில் பதிலளிக்க கூடிய பொறுப்பான நிர்வாகம் செயல்படும்.

3) ஒவ்வொரு பணமோசடி, ஊழல், நம்முடைய மகள்களுக்கு எதிரான அநீதி, ஒவ்வொரு பாலியல் பலாத்கார வழக்கும் மீண்டும் விசாரிக்கப்படும்.

4) திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியில் ஊழலில் ஈடுபட்டவர்கள் சிறையில் இருப்பார்கள். அது, மந்திரியாகவோ அல்லது காவலாளியாகவோ இருப்பினும் கூட சட்டம் ஒவ்வொருவரையும் கணக்கில் கொள்ளும்.

5) அரசியல் சாசனத்தின்படி, அகதிகளுக்கு ஒவ்வொரு உரிமை மற்றும் தனியுரிமைக்கான உத்தரவாதம் வழங்கப்படும். எனினும், ஊடுருவல்காரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் இந்தியாவில் தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6) பா.ஜ.க. அரசு உருவானதும், 7-வது ஊதிய குழு அமல்படுத்தப்படும் என பிரதமர் மோடி கூறினார்.

# சிஆர்பிஎஃப் படையில் உள்ள பாகுபாட்டை நீக்குவோம்: ராகுல் காந்தி

புதுடெல்லி, ஏப்.11:

மத்திய ஆயுதப்படை(சிஆர்பிஎ்ஃப்) படையினரின் வீரதீர தினத்தை முன்னிட்டு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று எக்ஸ் தளத்தில் கூறியதாவது:

“சிஆர்பிஎ்ஃப் படையினரின் வீர தீர தினத்தை முன்னிட்டு, நமது படையைச் சேர்ந்த துணிச்சலான மற்றும் வீரமிக்க வீரர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், மரியாதைக்குரிய அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறேன். சிஆர்பிஎ்ஃப் படையினரின் வீரமும் தியாகமும் ஒவ்வொரு நாளும் நமது தேசத்தைப் பாதுகாக்கின்றன.

அதே நேரம், சிஆர்பிஎப் மற்றும் சிஏபிஎ்ஃப் பணியாளர்களுக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வுகளோ அல்லது தங்கள் சொந்தப் படையையே வழி நடத்தும் உரிமையோ கிடைப்பதில்லை. இதற்கு ஒரே காரணம், அப்படையின் உயர்மட்டத் தலைமைப் பதவிகள் அப்படைக்கு வெளியிலிருந்து வருபவர்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன என்பதே ஆகும். காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் போது இந்த பாகுபாட்டை நீக்குவோம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டின் மிக பெரிய வருங்கால சொத்து தொழில்நுட்பம்: மத்திய மந்திரி பேச்சு



புதுடெல்லி, ஏப்.11:

டெல்லியில் நடந்த அகில இந்திய மேலாண்மை கூட்டமைப்பின் வருடாந்திர மாநாட்டில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறைக்கான மந்திரி நிதின் கட்காரி கலந்து கொண்டார்.

அவர் பேசும்போது, இந்தியாவின் வளர்ச்சி பாதையை வடிவமைப்பதில், தொழில்நுட்பம் சார்ந்த உருமாற்றம், ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பு ஆகியவை ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என்றார். அதற்காக பல யோசனைகள் உள்ளன. அதனாலேயே, வாழ்க்கைக்கு தேவையானது தொழில்நுட்பம் என்பது நம்முடைய தொலைநோக்கு பார்வையாக உள்ளது. அது நம்முடைய நாட்டின் வருங்காலத்திற்கான மிக பெரிய சொத்து. அது அதிக அளவில் சாதிக்க கூடிய ஒன்றாக இருக்கும் என்றார். அடுத்த 7 ஆண்டுகளில் உலக அளவில் தானியங்கி சந்தையில் இந்தியாவை முதல் இடத்திற்கு கொண்டுவருவதற்கான நோக்கத்திற்கான இலக்கையும் நிதின் கட்காரி அப்போது பகிர்ந்து கொண்டார்.

# வங்கிக் கணக்கில் ரூ.590 கோடி மோசடி: விரைவில் விசாரணையை தொடங்குகிறது சிபிஐ

புதுடெல்லி, ஏப்.11:

சிபிஐ அதிகாரிகள் வட்டாரங்கள் கூறியதாவது: சண்டிகரில் உள்ள ஐடிஎ்ஃப்சி்ஃப்பர்ஸ்ட் வங்கி கிளையில் ஹரியாணா மாநில அரசின் கணக்கு இருந்தது. அந்த கணக்கை ஆய்வு செய்தபோது, ஹரியாணா அரசால் டெபாசிட் செய்யப்பட்டிருந்த பணத்தில் ரூ.590 கோடி மாயமாகி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை இந்த சம்பவம் ஏற்படுத்தியது. இந்த சம்பவத்தில் வங்கித் தரப்பில், ஊழியர்கள் உள்ளிட்டோர் பணத்தை திருடி விட்டதாக விளக்கம் தரப்பட்டது. மேலும், வங்கி நிர்வாகம் உடனடியாக பணம் அனைத்தையும் 100 சதவீதம் ஹரியாணா அரசு கணக்கில் செலுத்தியது. இதுகுறித்து மாநில ஊழல் கண்காணிப்பு காவல்துறையினர் விசார ணை நடத்தி, முன்னாள் ஊழியர்கள் உள்ளிட்ட பலரை கைது செய்தனர். இந்நிலையில் ஹரியாணா அரசு தரப்பில் கடந்த மாதம் இந்த வழக்கு விசாரணையை சிபிஐ வசம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் அந்த வழக்கு விசாரணையை விரைவில் சிபிஐ தொடங்கவுள்ளது. ஏற்கெனவே இதுகுறித்து ஹரியானா ஊழல் கண்காணிப்பு காவல்துறையினர் பதிந்த வழக்கை அடிப்படையாகக் கொண்டு, சிபிஐ புதிதாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவுள்ளது.

# புதுச்சேரி: விசில் சின்னத்துக்கு ஓட்டுபோட்டதை வீடியோ எடுத்து வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை






புதுச்சேரி, ஏப்.11:

புதுச்சேரி சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடந்தது. அப்போது வாக்குச்சாவடிக்குள் செல்போன் எடுத்து செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தேர்தல் துறையின் உத்தரவை மீறி சிலர் செல்போனை வாக்குச்சாவடிக்குள் எடுத்து சென்றுள்ளனர்.

அங்கு த.வெ.க.வுக்கு விசில் சின்னத்தில் தங்களது வாக்குகளை பதிவு செய்துவிட்டு, .வி.பாட் எந்திரத்தில் விசில் சின்னம் வரும் வரை வீடியோவாக செல்போனில் படம் பிடித் துள்ளனர். அந்த வீடியோவை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர்.

இது தற்போது சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

இது குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட கலெக்டருமான குலோத்துங்கனிடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

அவர் இது தொடர்பான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான குலோத்துங்கனிடம் கேட்ட போது ‘சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட வீடியோக்களை ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளோம்.

சமூக வலைத்தளங்களில் பதிவிட்டோர் மீது சட்டப்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்’ என்றார்.

# திருமண அழைப்பிதழ் கொடுக்க சென்ற புதுமாப்பிள்ளைக்கு நேர்ந்த பரிதாபம்

புதுடெல்லி, ஏப்.11:

கர்நாடக மாநிலம் பெங்களூரு பனசங்கரியில் வசித்து வந்தவர் அக்சித் (வயது 27). இவர், சொந்தமாக பெட்ரோல் விற்பனை நிலையம் வைத்து நடத்தி வந்தார். அக்சித்துக்கும் ஒரு பெண்ணுக்கும் திருமணம் பேசி முடிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அக்சித்துக்கும், அந்த பெண்ணுக்கும் வருகிற 30-ந்தேதி திருமணம் நடைபெற உள்ளது. வருகிற 29-ந்தேதி மாலையில் திருமண வரவேற்புக்கு 2 குடும்பத்தினரும் ஏற்பாடு செய்து வந்தனர்.

அக்சித்தின் நண்பர் உளிமாவில் வசித்து வருகிறார். சம்பவத்தன்று இரவு தனது திருமண அழைப்பிதழை உளிமாவில் வசிக்கும் நண்பர் மற்றும் சில உறவினர்களுக்கு கொடுக்க அக்சித் சென்றிருந்தார். பின்னர் உளிமாவில் உள்ள கோதண்டராம சாமி கோவிலில் நடைபெற்ற தேர் திருவிழாவை அக்சித், அவரது நண்பருடன் சென்று பார்த்தார்.

அதன்பிறகு, நண்பரிடம் திருமண அழைப்பிதழை கொடுத்து விட்டு வீட்டுக்கு புறப்பட அக்சித் தயாரானார். அப்போது அதிகாலையில் கோவிலில் பல்லக்கு ஊர்வலம் நடப்பதால், அதை பார்த்துவிட்டு வீட்டுக்கு செல்லுமாறு நண்பர் கூறியுள் ளார்.

இதனால் இரவு நண்பர் வீட்டிலேயே அக்சித் தங்கினார். நேற்று அதிகாலையில் நடைபெற்ற பல்லக்கு ஊர்வலத்தை பார்க்க அக்சித் தனது நண்பருடன் சென்றார். அதிகாலை 5 மணியளவில் டிராக்டரில் பல்லக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் பங்கேற்று அக்சித் சாமி தரிசனம் செய்தார். அந்த சந்தர்ப்பத்தில் எதிர்பாராதவிதமாக பல்லக்கு சுமந்து வந்த டிராக்டர் அக்சித் மீது மோதியது. இதில், அவர் பலத்தகாயம் அடைந்து உயிருக்கு போராடினார். உடனே அங்கிருந்தவர்கள் அக்சித்தை மீட்டு அருகில் உள்ள ஆஸ்பத் திரியில் அனுமதித்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அக்சித் இறந்துவிட்டார். இதுபற்றி அறிந்ததும் உளிமாவு போக்குவரத்து போலீசார் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வை யிட்டு விசாரணை நடத்தினார்கள்.

# விரலில் காயம்.. தடைகளை தாண்டி வாக்கு செலுத்திய இளம்பெண்

திருச்சூர், ஏப்.11:

கேரள சட்டசபைக்கு வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த நிலையில், திருச்சூரில் இளம்பெண் ஒருவரை வாக்களிக்க வாக்குச்சாவடி அதிகாரி மறுத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. திருச்சூர் கூர்க்கஞ்சேரி பகுதியை சேர்ந்தவர் அக்சயா (வயது 26). இவர் திருச்சூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்குச்சாவடியில் ஓட்டு போட வந்தார்.

அவரது இடது கை ஆள்காட்டி விரலில் காயம் ஏற்பட்டு, கையில் தையல் போடப்பட்டு பேண்டேஜ் சுற்றப்பட்டு இருந்தது. இதனால் அந்த விரலில் மை வைக்க முடியவில்லை. ஆனால், தேர்தல் ஆணைய விதிமுறைப்படி இடது கை ஆள்காட்டி விரலில் அடையாள மை வைக்க வேண்டும் என்பதால், அவரை ஓட்டு போட வாக்குச்சாவடி அதிகாரி அனுமதிக்கவில்லை. அவரிடம், அக்சயா தான் சமையல் செய்யும் போது காயம் ஏற்பட்டதாக கூறி ஓட்டு போட அனுமதி கேட்டார்.

ஆனால், கையில் உள்ள கட்டை அவிழ்த்து காயத்தை பார்க்க வேண்டும் என்று அதிகாரி கட்டாயப்படுத்தினார். பின்னர் அந்த இளம்பெண் மருத்துவ சான்றிதழை காண்பித்தார். அதை ஏற்க வாக்குச்சாவடி அதிகாரி மறுத்தார். இதுதொடர்பாக அவருடன் இடது முன்னணி வேட்பாளர் சுனில் குமார் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

தகவல் அறிந்த மாவட்ட கலெக்டர், இளம்பெண் வாக்களிக்க அனுமதித்தார். அதன்பேரில் இளம்பெண்ணுக்கு நடுவிரலில் மை அடையாளம் வைக்கப்பட்டு, ஒட்டு போட அனுமதிக்கப்பட்டார். இந்த சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஆந்திரா: செல்ஃபி எடுத்த 3 மாணவிகள் நீரில் மூழ்கி உயிரிழப்பு

அமராவதி, ஏப்.11:

செல்்ஃபி எடுக்க முயன்ற 3 மாணவிகள் ஏரியில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். ஒருவர் உயிர் பிழைத்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஆந்திர மாநிலம், அல்லூரி மாவட்டம், அனந்தகிரி மண்டலம், லுங்கபர்த்தி கிராமத்தை சேர்ந்த திரிஷா (17), ரத்னகுமாரி (16), பவித்ரா (16) மற்றும் ஒரு தோழி என மொத்தம் 4 பேரும் சமீபத்தில் பிளஸ் 2 தேர்வு எழுதினர். தற்போது விடுமுறை என்பதால், 4 பேரும் நேற்று நீச்சல் பழக அதே ஊரில் உள்ள ஏரிக்கு சென்றனர்.

குளிப்பதற்கு முன் சற்று நீரில் இறங்கி செல்்ஃபி எடுத்தனர். அப்போது அனைவரும் நீரில் விழுந்து அடித்து செல்லப்பட்டனர். ஆனால், அதில் ஒரு பெண் மட்டும் உயிர் தப்பினார். மற்ற மூவரும் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்து அனந்தகிரி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கர்நாடக இடைத்தேர்தலில் 65 சதவீத வாக்குப்பதிவு



பெங்களூரு, ஏப்.11:

கர்நாடகாவில் பாகல்கோட்டை, தாவணகெரே தெற்கு ஆகிய 2 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நேற்று நடைபெற்றது. 2 தொகுதிகளிலும் காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை விறுவிறுப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை 6 மணி நிலவரப்படி பாகல்கோட்டையில் 65.92 சதவீதமும், தாவணகெரே தெற்கு தொகுதியில் 64.25 சதவீதமும் வாக்குகள் பதிவாகின. ஒட்டு மொத்தமாக இரு தொகுதிகளிலும் பெரிய அளவில் மோதல்கள் இல்லாமல், அமைதியான முறையில் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்றதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

திரிபுரா, நாகாலாந்து: நாகாலாந்து மாநிலம் கோரிடாங் சட்டப்பேரவைக்கு நேற்று நடைபெற்ற இடைத்தேர்தலில் 80.62 சதவீத வாக்குகளும், திரிபுரா மாநிலம் தர்மா நகர் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 79.84 சதவீத வாக்குகளும் பதிவாயின.

# உலகளாவிய சவால்களுக்கு இடையே சிறப்பான நிலையில் இந்தியா: உலக வங்கி




புதுடெல்லி, ஏப்.11:

‘உலகளவில் எரிசக்தி விநியோக பாதிப்பு ஏற்பட்டுள்ள சூழலிலும், அதிக அளவில் அந்நியச் செலாவணிக் கையிருப்பு, நிதிச் சுதந்திரம், குறைந்த பணவீக்கம் உள்ளிட்ட போதிய பாதுகாப்பு வளங்களுடன் இந்தியா சிறப்பான நிலையில் உள்ளது.

இது, உலகளாவிய சவால்களுக்கு இடையே, பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்’ என்று உலக வங்கி சார்பில் வியாழக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

தெற்காசிய பொருளாதார மேம்பாடுத்தல் அறிக்கையை உலக வங்கி புதன்கிழமை வெளியிட்ட நிலையில், அதுதொடர்பாக வியாழக்கிழமை நடைபெற்ற மாநாட்டில் இக் கருத்தை உலக வங்கியின் தெற்காசிய மண்டல இயக்குநர் செபாஸ்டீன் எக்கார்த் இக் கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ‘இந்தியா வலுவான கொள்கை ரீதியிலான திட்டங்களையும், அதிக அளவிலான அந்நியச் செலாவணி கையிருப்பையும், நிதிச் சுதந்திரத்தையும் கொண்டுள்ளது. அதோடு, உலகளவில் எரிசக்தி விநியோக பாதிப்பு ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலிலும், குறைந்த பணவீக்கம், இலக்குகளை எட்டுவதற்கான வலுவான பாதுகாப்பு வளங்களையும் பெற்றுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், புதிய தொழிலாளர் நலன் சார்ந்த திட்டங்கள் உள்ளிட்டவை இந்த வலுவான பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளாகப் பார்க்கப்படுகின்றன.

உலகளவில் மற்ற வளர்ந்துவரும் சந்தைகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவும், அது சார்ந்த பிராந்தியமும் தொடர்ந்து மிகவும் வலுவான, ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க பிராந்தியமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது’ என்று தெரிவித்தார்.

முன்னதாக, உலக வங்கி வெளியிட்ட தெற்காசிய பொருளாதார மேம்படுத்துதல் அறிக்கையில், வலுவான உள்நாட்டு தேவை மற்றும் ஏற்றுமதி துறை சார்ந்த மீள்திறன் காரணமாக, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி கடந்த 2025-ஆம் ஆண்டில் 7.1 சதவீதமாக இருந்தது 2026-ஆம் நிதியாண்டில் 7.6 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வரும் 2027-ஆம் நிதியாண்டில் இந்த வளர்ச்சி விகிதம் 6.6 சதவீதமாக குறையும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டதைக் காட்டிலும், தற்போதைய மதிப்பீடு சற்று அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கான உலக வங்கியின் முதன்மைப் பொருளாதார நிபுணர் ஆரேலியன் க்ரூஸ் கூறுகையில்,

‘இந்தியாவின் ஏற்றுமதிகள் உலகிலேயே மிக உயர்ந்த வரி விதிப்புகளை எதிர்கொண்டபோதும், 2026-ஆம் நிதியாண்டில் உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக இந்தியா தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. என்றார்.

## சூடான்: திருமண நிகழ்ச்சியில் டிரோன் தாக்குதல் - 30 பேர் பலி

**கார்டூமின், ஏப்.11:**

வடக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு சூடான். அந்நாட்டில் கடந்த 2021-ம் ஆண்டு ராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் செயல்பட்டு வருகிறார். அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராக துணை ராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை ராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை ராணுவத்துடன் இணைக்க ராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்-பர்ஹன் முயற்சிமேற்கொண்டார். இதற்கு துணை ராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவுபடையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 15ம் தேதி முதல் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. துணை ராணுவம் கட்டுப்பாட்டில் இருந்த தலைநகர் கார்டூமினை கடந்த மார்ச் மாதம் ராணுவம் கைப்பற்றியது. அதேவேளை, ராணுவத்திற்கும், துணை ராணுவத்திற்கும் இடையே தொடர்ந்து மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் அப்பாவி பொதுமக்களும் உயிரிழந்து வருகின்றனர். இந்த உள்நாட்டுபோரில் இதுவரை 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், சூடானின் டர்பர் மாகாணம் குடும் நகரில் நேற்று திருமண நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த திருமண நிகழ்ச்சியை குறிவைத்து டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட 30 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். இந்த டிரோன் தாக்குதலை ராணுவம் நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

## நேபாளத்தின் முன்னாள் பிரதமர் கே.பி.சர்மா ஒலிக்கு ஜாமீன்

**காத்மாண்டு, ஏப்.11:**

கடந்தாண்டு செப்டம்பர் 8 மற்றும் 9ம் தேதிகளில், நேபாளத்தில் சமூக ஊடகங்களுக்கு தடை விதிக்கப்பட்டதை எதிர்த்தும், ஊழல் மற்றும் வாரிசு அரசியலை எதிர்த்தும் 'ஜென்சி' அமைப்பினர் மாபெரும் போராட்டத்தை நடத்தினர். அந்தப் போராட்டத்தில் நடந்த ஒடுக்குமுறை மற்றும் துப்பாக்கிச்சூடு காரணமாக 76 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சூழலில், அப்போதைய பிரதமர் கே.பி. சர்மா ஒலியும் (75) , சில அமைச்சர்களும் வன்முறை அசம்பாவிதத்துக்கு பொறுப்பேற்று தங்களது பதவியை ராஜினாமா செய்தனர். அதனைத் தொடர்ந்து நேபாளத்தில் ஆட்சியும் கலைக்கப்பட்டது.இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், போராட்டக்காரர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட ஒடுக்குமுறையில் பங்கு இருப்பதாகத் தெரிவித்து முன்னாள் நேபாள பிரதமர் கே.பி. சர்மா ஒலி, அப்போதைய உள்துறை மந்திரி ரமேஷ் லெகக் (62) ஆகியோர் கடந்த மார்ச் 28ம் தேதி கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த நேபாள சுப்ரீம் கோர்ட்டு, நிபந்தனையுடன் அவர்கள் இருவருக்கும் ஜாமீன் வழங்கியது. விடுதலைக்குப் பிறகு சமூக வலை தளத்தில் பதிவிட்ட கே.பி.சர்மா ஒலி, "எந்தவிதமான ஆதாரமும் இன்றி, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக 13 நாட்கள் என்னைப் பழிவாங்க சிறையில் அடைத்து வைத்திருந்தனர். இப்போது நீதி வென்றுள்ளது" என்று ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

## காமேனி மரணத்தின் 40-ம் நாள்: நாடு முழுவதும் இரங்கல்; ஈரான் அதிபர் பங்கேற்பு

**தெஹ்ரான், ஏப்.11:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதில், மினாப் நகரில் உள்ள பள்ளியை சேர்ந்த குழந்தைகள் 180-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், அயதுல்லா சையது அலி காமேனி மறைந்து 40 நாட்கள் ஆன நிலையில், நாட்டின் தலைநகர் தெஹ்ரானில் உள்ள குடியரசு சதுக்கத்தில் அதற்கான நினைவு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் ஜனாதிபதி மசூத் பெஜஸ்கியான் கலந்து கொண்டார். தேசிய அளவிலான இரங்கல் நிகழ்ச்சியின்போது, திரளான கூட்டத்தினர் தெருக்களில் திரண்டனர். அவர்கள் பேரணியாக, காமேனி மறைந்த இடத்திற்கு நடந்து வந்தனர். மினாப் நகரில் உள்ள பள்ளி குழந்தைகள் 180-க்கும் மேற்பட்டோர் மறைவுக்காகவும் நடந்த இந்த நிகழ்ச்சி இரவு வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹார்முஸ் ஜலசந்தியில் கடல் கண்ணிவெடிகள் - ஈரான் வெளியிட்ட வரைபடத்தால் பதற்றம்

**துபாய், ஏப்.11:**

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில், ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரான் கடல் கண்ணிவெடிகளைப் பதித்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதுதொடர்பான வரைபடம் ஒன்றை அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. இது அப்பிராந்தியத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.






ஈரானின் புரட்சிகர காவல் படையுடன் நெருங்கிய தொடர்புடைய 'இஸ்னா' மற்றும் 'தஸ்னிம்' ஆகிய செய்தி நிறுவனங்கள் கடல் கண்ணிவெடிகள் தொடர்பான வரைபடத்தை நேற்று வெளியிட்டன. பாரசீக வளைகுடாவின் குறுகிய நுழைவுப் பகுதியான ஹார்முஸ் ஜலசந்தியில், கப்பல்கள் வழக்கமாகப் பயணிக்கும் பாதையை 'ஆபத்தான பகுதி' என பாரசீக மொழியில் அந்த வரைபடத்தில் எழுதப்பட்டுள்ளது.

இது, அப்பகுதி வழியாக செல்லும் உலக நாடுகளின் கப்பல்களுக்கு இடையே பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

15 சரக்கு கப்பல்களுக்கு அனுமதி உலக அளவில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வர்த்தகத்தில் 20 சதவீதம் ஹார்முஸ் ஜலசந்தி பகுதி வழியாகவே நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சண்டை நிறுத்த ஒப்பந்த விதிமுறைகள் படி, ஹார்முஸ் ஜலசந்தி வழியாக நாள் ஒன்றுக்கு 15 சரக்கு கப்பல்கள் செல்ல ஈரான் அனுமதி வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் கூறும் விதிமுறைகள் படி, குறிப்பிட்ட வழித்தடத்தில் மட்டுமே சரக்கு கப்பல்கள் செல்ல வேண்டும்.

ஈரான் போருக்கு முன்பு சர்வதேச கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக தடையின்றி சென்றது போல் தற்போது செல்ல முடியாது.

இந்த கட்டுப்பாடுகளால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மீண்டும் பேரல் ஒன்றுக்கு 97 டாலரைத் தாண்டியது. பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 2.9 சதவீதம் உயர்ந்து 97.46 டாலராக வர்த்தகமானது. இந்தியா மட்டுமின்றி ஆசிய பங்குச் சந்தைகளும் சரிவைச் சந்தித்தன.

## ஈரான், லெபனான் மீதான இஸ்ரேலின் போருக்கு ரூ.1.6 லட்சம் கோடி செலவு

**வாஷிங்டன், ஏப்.11:**



ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் வளைகுடா நாடுகளில் அமெரிக்க படைத்தளங்கள் உள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வந்தது.

இந்த போரால் மத்திய கிழக்கில் தொடர் பதற்றம் நிலவி வருகிறது. அதேவேளை, 2 வாரங்கள் போர் நிறுத்தத்திற்கு அமெரிக்காவும், ஈரானும் சம்மதம் தெரிவித்துள்ளன. இதையடுத்து இருநாடுகள் இடையே நாளை பாகிஸ்தானில் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

இதனால், போர் பதற்றம் தணியும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், லெபனானில் நேற்று முன்தினம் இஸ்ரேல் படைகள் அதிபயங்கர வான்தாக்குதல்களையும் நிகழ்த்தின. போர் தொடங்கியதில் இருந்து இதுவரை கண்டிராத அளவுக்கு நடத்தப்பட்ட இந்த கொடூர தாக்குதலில் ஹிஸ்புல்லா இயக்க முக்கிய தலைவர் உள்பட 250-க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இது உலக நாடுகளை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதனால் போர் பதற்றம் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், ஈரான், லெபனான் மீதான இஸ்ரேலின் 40 நாள் போரில் 17.5 பில்லியன் டாலர் (ரூ. 1.6 லட்சம் கோடி செலவானதாக இஸ்ரேல் நிதியமைச்சகம் மதிப்பீடு செய்துள்ளது. ராணுவச் செலவுகள் 12.9 பில்லியன் டாலர் என்றும், ஈரானிய தாக்குதலால் ஏற்பட்ட சேதம் 4.5 பில்லியன் டாலர் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. மறுசீரமைப்புச் செலவுகள் பொருளாதார முடக்கத்தால் ஏற்பட்ட இழப்புகள் இதில் சேர்க்கப்படவில்லை.

## "பாலஸ்தீன மண்ணில் உருவான புற்றுநோய்தான் இஸ்ரேல்.." என பாகிஸ்தான் விமர்சனம் - நெதன்யாகு பதிலடி

**டெல்அவிவ், ஏப்.11:**





லெபனானிலும் தனது இனப்படுகொலையை அரங்கேற்றும் தீய சக்தியான இஸ்ரேல், மனித குலத்திற்கே ஒரு சாபக்கேடு என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் கண்டித்திருந்தார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "இஸ்ரேல் தீயது மற்றும் மனிதகுலத்திற்கு ஒரு சாபக்கேடு. இஸ்லாமாபாத்தில் சமாதானப்பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும்போது, லெபனானில் இனப்படுகொலை செய்யப்படுகிறது.

அப்பாவி குடிமக்கள் இஸ்ரேலால் கொல்லப்படுகிறார்கள், முதலில் காசாவிலும், பின்னர் ஈரானிலும், இப்போது லெபனானிலும், ரத்தக் கொதிப்பு தடையின்றி தொடர்கிறது.

ஐரோப்பிய யூதர்களை ஒழிப்பதற்காக பாலஸ்தீனிய மண்ணில் இந்த புற்றுநோய் போன்ற அரசை உருவாக்கியவர்கள் நரகத்தில் எரிய வேண்டும் என்று நான் நம்பி பிரார்த்திக்கிறேன்" என்று பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா ஆசிப்பின் அறிக்கைக்கு இஸ்ரேல் கடும் கோபத்துடன் பதிலடி கொடுத்துள்ளது. பாகிஸ்தானின் மத்தியஸ்த பேச்சைக் கண்டித்த இஸ்ரேல், அமைதிக்காக மத்தியஸ்தம் செய்வதாக கூறும் ஒரு நாடு, யூதர்களின் அழிவுக்கு அழைப்பு விடுக்கிறது, இத்தகைய பயங்கரவாதிகளிடம் இருந்து எங்களைத் தற்காத்துக் கொள்வோம் என்று சூளுரைத்துள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் கிடியான் ஸார் தனது எக்ஸ் வலைதளத்தில், "சமாதானத்திற்கு மத்தியஸ்தம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் ஒரு அரசாங்கத்திடமிருந்து வரும் இந்த அப்பட்டமான யூத-விரோத ரத்த அவதூறுகளை இஸ்ரேல் மிகவும் கடுமையாக கருதுகிறது.

யூத அரசை 'புற்றுநோய்' என்று அழைப்பது, அதன் அழிவுக்கு அழைப்பு விடுப்பதற்கு சமம். இஸ்ரேலை அழிப்பதாக சபதம் செய்யும் பயங்கரவாதிகளுக்கு எதிராக இஸ்ரேல் தன்னைத் தற்காத்துக் கொள்ளும்" என்று பதிவிட்டுள்ளார்.

## வடகொரியா: 'கிளஸ்டர் பாம்' பொருத்தப்பட்ட நவீன ஏவுகணை சோதனை



**பியாங்யாங், ஏப்.11:**

அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா. கொரிய தீபகற்பத்தில் வடகொரியா, தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென் கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. மேலும் நவீன போர்முறைக்கு தேவையான அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய புதிய ஆயுதங்களை வரிசையாக சோதனை செய்து உலக நாடுகளை வடகொரியா அதிரவைத்துள்ளது. அந்த வகையில் தற்போது 'கிளஸ்டர் பாம்' பொருத்தப்பட்ட புதிய வகை ஏவுகணையையும் வடகொரியா ஏவிச் சோதனை செய்துள்ளது. இந்த ஏவுகணை இலக்கைச் சென்றடைந்ததும், அதிலிருந்து நூற்றுக்கணக்கான குண்டுகள் சிதறி விழுந்து சுமார் 17 ஏக்கர் பரப்பளவை நொடிப் பொழுதில் சாம்பலாக்கிவிடும்.

இதுமட்டுமின்றி, மின் உற்பத்தி நிலையங்களைச் செயலிழக்கச் செய்யும் 'கார்பன்-பைபர்' குண்டுகள் மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் வடகொரியா வெற்றிகரமாக சோதித்துள்ளது. தென்கொரியாவின் மின் விநியோகக் கட்டமைப்புகளை முடக்கவே இத்தகைய ஆயுதங்களைத் தயாரிப்பதாகக் கூறப்படுகிறது.

## குவைத் மீது ஈரான் தாக்குதல்? மத்திய கிழக்கில் தொடரும் பதற்றம்

**குவைத் சிட்டி, ஏப்.11:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல் மீதும் வளைகுடா நாடுகளில் அமெரிக்க படைத்தளங்கள் உள்ள நாடுகள் மீதும் ஈரான் தாக்குதல் நடத்தி வந்தது. இந்த போரால் மத்திய கிழக்கில் தொடர் பதற்றம் நிலவி வருகிறது. அதேவேளை, 2 வாரங்கள் போர் நிறுத்தத்திற்கு அமெரிக்காவும், ஈரானும் சம்மதம் தெரிவித்துள்ளன. இதையடுத்து இருநாடுகள் இடையே நாளை பாகிஸ்தானில் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது. இதனால், போர் பதற்றம் தணியும் என எதிர்பாக்கப்பட்டது.

இந்நிலையில், வளைகுடா நாடான குவைத் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி ஈரானும் அதன் ஆதரவு ஆயுதக்குழுக்களும் தங்கள் நாட்டின் மீது டிரோன் தாக்குதல் நடத்தியதாக குவைத் குற்றஞ்சாட்டியுள்ளது. அதேபோல், தங்கள் நாட்டின் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாக சவுதி அரேபியாவும் குற்றஞ்சாட்டியுள்ளது. நாட்டின் முக்கிய கச்சா எண்ணெய் விநியோக குழாய் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சவுதி குற்றஞ்சாட்டியுள்ளது. ஈரானும் அதன் ஆதரவு ஆயுதக்குழுக்களும் இந்த தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றம் நிலவி வருகிறது.

## ஹாலிவுட் நடிகருக்கு போதைப்பொருள் விற்ற இந்திய வம்சாவளி பெண்ணுக்கு 15 ஆண்டு சிறை

**வாஷிங்டன், ஏப்.11:**

பிரபல ஹாலிவுட் நடிகர் மேத்யூ பெர்ரி கடந்த 2023-ம் ஆண்டு அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள தனது வீட்டில் இறந்து கிடந்தார். அவரது மரணத்திற்கு போதைப்பொருளை அதிக அளவு பயன்படுத்தியதே காரணம் என்பது தெரிய வந்தது. இந்த வழக்கில் மேத்யூ பெர்ரிக்கு போதைப்பொருளை விற்பனை செய்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண்ணான ஜஸ்வீன் சங்கா (வயது 42) உள்பட 5 பேர் மீது கோர்ட்டில் விசாரணை நடந்து வந்தது. இதில் ஜஸ்வீன் சங்காவுக்கு 15 ஆண்டுகள் ஜெயில் தண்டனை விதித்து கோர்ட்டு தீர்ப்பு அளித்துள்ளது. பஞ்சாபி வம்சாவளியைச் சேர்ந்த ஜஸ்வீன் சங்கா, இங்கிலாந்தின் லண்டனில் பிறந்தவர். அவர் அமெரிக்கா - இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளின் குடியுரிமை பெற்றவர் ஆவார். கெட்டமைன் ராணி என்று அழைக்கப்படும் ஜஸ்வீன் சங்கா, லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பிரபலங்களுக்கு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார். நடிகர் மேத்யூ பெர்ரிக்கு கெட்டமைன் போதைப்பொருளை ஜஸ்வீன் சங்கா, எரிக் பிளெமிங் என்ற நபருடன் இணைந்து விற்பனை செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

## லெபனான் மீதான தாக்குதலை நிறுத்தும் வரை அமெரிக்கா உடன் அமைதிப் பேச்சு இல்லை: ஈரான் உறுதி

**தெஹ்ரான், ஏப்.11:**

லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் நிறுத்தப்படும் வரை அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை கிடையாது என்று ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நாளை (ஏப்.11) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பாகிஸ்தான் அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை சுட்டிக்காட்டியுள்ள ஈரான், அந்த தாக்குதல் நிறுத்தப்பட்டால் மட்டுமே அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈரான் பங்கேற்கும் என்று அறிவித்துள்ளது.



இது தொடர்பாக ஈரானின் தஸ்னிம் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், 'அமைதிப் பேச்சுவார்த்தை நிச்சயமற்ற நிலையிலேயே உள்ளது. எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள ஈரான் தயாராக உள்ளது.

ஈரான் மற்றும் எதிர்ப்பு இயக்கங்களுக்கு (ஹிஸ்புல்லா) சாதகமான முடிவுகள் இல்லாமல் முடிவடையும் ஒரு போர் நிறுத்தத்தின் விளைவுகளில் இருந்து அமெரிக்காவால் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது.

ஈரானும் எதிர்ப்பு சக்திகளும் விரும்பும் ஓர் உடன்பாட்டுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் ஒப்புக்கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காணும். இல்லையென்றால் அமெரிக்காவும் இஸ்ரேலும் மீண்டும் தாக்குதலுக்கு உள்ளாகும்' என்று ஈரான் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "லெபனானுக்குள் இஸ்ரேல் மேற்கொண்ட ஊடுருவல், ஆரம்ப கால போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அப்பட்டமான மீறலாகும். இது, சாத்தியமான உடன்படிக்கைகளுக்கான அர்ப்பணிப்பின்மையின் அபாயகரமான அறிகுறியாகும்.

இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தால்,பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்றதாகிவிடும். எங்கள் விரல்கள் தொடர்ந்து துப்பாக்கியின் விசையின் மீதே இருக்கும். ஈரான் தனது லெபனான் சகோதர சகோதரிகளை ஒருபோதும் கைவிடாது" என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, ஈரானும், அமெரிக்காவும் போர் நிறுத்தத்தை அறிவித்தபின், லெபனான் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் 100 ஏவுகணைகளை ஏவி 254 பேரை கொன்றது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தி ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடியுள்ளது. இதனால் சண்டை நிறுத்தத்தில் குழப்பமான சூழல் ஏற்பட்டது கவனிக்கத்தக்கது.


# 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டி





# இந்தியாவில் கட்டுப்பாடுகள் கொண்ட கோயில்கள்: சபரிமலை வழக்கில் பட்டியலிட்ட மத்திய அரசு

## மகளிருக்கும் இளைஞர்களுக்கும் மாதம் ரூ. 3,000; பொது சிவில் சட்டம்!



# ஈரான், லெபனான் மீதான இஸ்ரேலின் போருக்கு ரூ.1.6 லட்சம் கோடி செலவு

## ஏழுமலையான் தரிசனம்: 6 மணி நேரம் காத்திருப்பு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 11.04.2026 சனிக்கிழமை இலவச இ-பேப்பர்